15 ஏப்ரல் 1994 □ ரூ. 3.00
www.padippakam.com

தொடரும் போலீசின் கிரிமினல் குற்றங்கள்

# புதிய ஜனநாயகம்

## பார்ப்பன 'ஜெ' பாத பூஜையில் மானமிழந்த கி. வீரமணி




87 ... COLOMBES
92600 ... SUR -
SEI...

படிப்பகம்

www.padippakam.com

# நாசகார 'டங்கலு'க்கு எதிராக இயக்கம்

வருகிற ஏப்ரல் 15-ம் தேதி நாசகார டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டு வல்லரசுகளின் காலடியில் இந்திய மக்களை அடிமைகளாக்கப் போகிறது, காங். கும்பல். இந்நாளை கறுப்புநாளாக அறிவித்து ஆர்ப்பாட்டங்கள், முற்றுகை - மறியல் போராட்டங்கள், பொது வேலை நிறுத்தம் நடத்தப் போவதாக புரட்சிகர அமைப்புகள், ஜனநாயக அமைப்புகள், ஓட்டுப் பொறுக்கி கட்சிகள் உட்பட திட்டமிட்டுள்ளன. இதில் ஓட்டு பொறுக்கும் கட்சிகளுக்கு எதிர்க்க எவ்வித அருகதையும் இல்லை. இவை வல்லரசுகளின் பிற சரணடல்கள், ஆதிக்கங்களை ஆதரிப்பவை அல்லது ஓட்டுக்காகவும் கட்சி வாழ்வுக்காகவும் வெறும் அடையாளப் போராட்டங்கள் நடத்துபவை, அல்லது தமது மாநில ஆட்சியில் சாராம்சத்தில் வல்லரசுகளின் - பன்னாட்டு பகாசுர கம்பெனிகளின் இதே வகை மக்கள் விரோத நடவடிக்கைகளை அமுல் படுத்திக் கொண்டிருப்பவை. ஜனநாயக - சீர்திருத்த அமைப்புகளோ பரவலாக பாமர மக்கள் மத்தியில் இயக்கங்களை எடுத்துச் செல்லாமல் ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரிவினரிடம் மட்டும் அதாவது ஒரு வட்டத்திற்குள்ளேயே முடங்கி கொள்கின்றன. ஆனால் இந்தியாவெங்கும் புரட்சியாளர்கள் தமது சக்திக்குட்பட்ட அளவில் பட்டிதொட்டியெங்கும் தெரு முனையெங்கும் பாமர மக்கள் வரை சந்தித்து எதிர்ப்பு இயக்கங்களை கட்டியமைத்து வருகிறார்கள்.

தமிழகத்தில் விவசாயிகள் விடுதலை முன்னணி கிராமங்களிலும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி சிறு, பெரு நகரங்களிலும் "டங்கல்" எதிர்ப்புப் பிரச்சார இயக்கத்தை கடந்த மூன்று மாதங்களாக வீச்சோடு செய்து வருகின்றன. "டங்கல்" திட்டத்தைப் பாமரர்களும் எளிதாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் பேச்சுக்கள், முழக்கங்கள், பாடல்கள் பிற கலை வடிவங்கள் மூலம் விளக்கிப் பிரச்சாரம் செய்கின்றனர். பாமர மக்கள் இவ்வியக்கத்தை ஆதரித்துப் பேசியதோடு நிதியளித்ததோடு தாமும் உற்சாகமாக பிரச்சார இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். போலீசின் அனுமதி மறுப்பு, இழுத்தடிப்புகளை மீறி பல இடங்களில் இப்பிரச்சார இயக்கம் நடந்து வருகிறது.

● உத்தமபாளையம் வட்டாரம் முழுவதும் 20-2-94 அன்று வி.வி.மு.வினர் சைக்கிளில் ஊர்வலமாகச் சென்று தெருமுனைப் பிரச்சாரம் செய்தனர். பல நாள் இழுத்தடித்து போலீஸ் அனுமதி தர மறுத்துவிட்டது. எனினும் அறிவிக்கப்படாத வேறு ஒரு இடத்திலிருந்து சுமார் 100 பேர் அடங்கிய சைக்கிள் ஊர்வலம் மூலம் முக்கிய ஊர்களில் பிரச்சாரம் செய்யப்பட்டது. கம்பம், கூடலூர், லோயர் கேம்ப், புதுப்பட்டி, கே.கே.பட்டி, பாளையம், கோம்பை, பண்ணைபுரம், சுருளிப்பட்டி ஆகிய ஊர்களில் நடத்திய தெருமுனைக் கூட்டம் மக்களை பெரிதும் கவர்ந்தது. மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மையக் கலைக்குழு மற்றும் வி.வி.மு.வின் பகுதிக் கலைக்குழு தோழர்கள் இருபிரிவாகப் பிரிந்து 50 இடங்களில் பாடல்கள், முழக்கங்கள், பேச்சுக்களுடன் பிரச்சாரம் செய்தனர். ஊர்வலத்தின் இறுதியில் நாராயணத்தேவன் பட்டியில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. தோழர்கள் தேவராசு, செல்வராசு, சேகர் உரை நிகழ்த்தினர். ம.க.இ.க. வினர் கலை நிகழ்ச்சி நடத்தினர். 200-க்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்து ஆதரித்தனர். போலீசின் அனுமதி மறுப்பை மீறி நடந்த இந்த இயக்கத்தைக் கண்டு ஓட்டுக்கட்சிப் பிரமுகர்கள் வியப்பும் கலக்கமும் அடைந்தனர். 26-2-94 அன்று தேவாரம் நகரில் பொதுக்கூட்டம் நடத்த போலீசு அனுமதி தந்தது. இதில் பகுதி மக்கள் 500 பேர் கலந்து கொண்டனர்.

● வண்டிப்பெரியாரில் 21-2-94 அன்று பொதுக்கூட்டம் கலை நிகழ்ச்சியோட நடந்தது. தமிழிலும் மலையாளத்திலும் பரவலாக பிரச்சாரம் நடத்தப்பட்டது. தோழர்கள் சிறீகிருட்டிணன், மோகன், வேலாயுதசாமி உரை நிகழ்த்தினர். சுமார் 200 பேர் பகுதி மக்கள் கூடினர்.

● உசிலை வட்டத்தில் 26-2-94 அன்று வி.வி.மு. பொதுக்கூட்டமும், 25-2-94 அன்று செல்லப்பட்டி யூனியன் அலுவலகம் முன்பும் 2-3-94 அன்று உசிலை ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்பும் ஆர்ப்பாட்டமும் நடத்தியது. தோழர்கள் கதிரவன், சிவகாமு, குருசாமி பொதுக்கூட்டத்தில் பேசினர். ம.க.இ.க.வினர் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடத்தினர். 500 பேர் வரை மக்கள் கூடி, நிதியளித்து ஆதரவு நல்கினர். பொதுக்கூட்டம், மற்றும் ஆர்ப்பாட்டங்களை ஒட்டி பரவலாக சுவரொட்டி, துண்டு பிரசுரம், தெருமுனைப் பிரச்சாரம் மூலம் பிரச்சாரம் செய்யப்பட்டது. வீடு வீடாகவும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டதில் ரூ. 3,000 நிதி திரட்டப்பட்டது. மக்கள் "டங்கலை"ப்பற்றி தாமாக கேள்வியெழுப்பி விளக்கம் கேட்டுப் புரிந்து உத்வேகத்தோடு நிதியளித்து ஆதரித்தனர். இதுவல்லாமல் முண்டு வேலன் பட்டியில் 25-ந் தேதி இக்கிளைத் தோழர் அய்யாதுரை நினைவு நாள் பொதுக்கூட்டமும் சிறுவர்களுக்கான பல்வேறு போட்டிகளும் நடத்தப்பட்டது. தோழர்கள் மோகன், சிவகாமு, குருசாமி சிறப்புரையாற்றினர். முதிய வயதிலும் வி.வி.மு.வில் சேர்ந்து பணியாற்றிய அய்யாதுரையின் நினைவு நாள், இளைஞர்களுக்கும் சிறுவர்களுக்கும் உற்சாகமும் புரட்சிகர உணர்வும் ஊட்டும் வண்ணமாக அமைந்தது.



● திருவெண்ணை நல்லூரில் 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் தெருமுனைக்கூட்டமும் அதன் தொடர்ச்சியாக 13-2-94 அன்று மெய்கண்டார் திடலில் கருத்தரங்கமும் பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டது. தோழர்கள் தமிழ்மணி (ம.க.இ.க.) சுப்பிரமணியன் (தொழிலாளர் பிரச்சாரக் குழு, நெய்வேலி) மற்றும் பகுதி பிரமுகர்கள் சிலரும் உரை நிகழ்த்தினர். ம.க.இ.க.வின் கலை நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.

● பெண்ணாகரத்தில் பரவலாக பல இடங்களில் தெரு முனைக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. தொடர்ச்சியாக 14-2-94 அன்று 100 பேர் அடங்கிய எழுச்சி மிகு ஊர்வலமும் 1000 பேர் திரண்ட பொதுக்கூட்டமும் நடந்தது. தோழர் கதிரவன் (ம.க.இ.க.) முனியராஜ் (வி.வி.மு.) உரை நிகழ்த்தினர். ம.க.இ.க.வினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடந்தது.

● மதுரையில் பு.மா.இ.மு., ம.க.இ.க. இணைந்து 2.3.94 அன்று ஜெய்ஹிந்த் புரம், சோலை அழகுபுரம், எம்.கே.புரம் பகுதிகளில் தெருமுனைப் பிரச்சாரம் செய்தன. தோழர்கள் கதிரவன், ரவீந்திரன் (பு.மா.இ.மு.) "டங்கலின்" நாசத்தை எளிமையாக விளக்கிப் பேசினர்.

● திருச்சியில் பு.மா.இ.மு.வினர் 2.3.94 அன்று நகரின் பல பகுதிகளில் பல குழுக்களாகப் பிரிந்து சென்று தெருமுனைக் கூட்டம் நடத்தினர். திருவரங்கம் பகுதியின் சந்து முனைகள், கோபுரத்தின் உள்ளேயெல்லாம் சென்று வீச்சாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது. இறுதியில் தெப்பகுளம் அஞ்சலகம் எதிரே திரண்டு எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

ஒன்பதாம் ஆண்டு

9-10

16 மார்ச் - 15 ஏப். '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# வேண்டும், போலீசு அமைப்பையே கலைத்திடக்கோரும் போராட்டம்!

நாடு முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டில் போலீசு மிருகங்கள் புரிந்து வரும் அட்டகாசங்கள், அட்டூழியங்கள், அக்கிரமங்கள் வார்த்தைகளால் வருணிக்க முடியாத அளவு கொடூரமாகவும், வக்கிரமாகவும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. சில சம்பவங்களைப் பற்றி அறியும் போது இதுதான் உச்சநிலை, இதைவிடக் கொடூரமும் வக்கிரமும் இருக்க முடியாது என்று முடிவுக்கு வருகிறோம். ஆனால் அடுத்த நாள் வரும் செய்திகளோ முந்தைய சம்பவங்கள் ஒன்றுமே இல்லை, சர்வ சாதாரணமானவை என்று ஆக்கிவிடக்கூடிய அளவுக்கு போலீசு மிருகங்கள் மாறிவிட்டதாகக் காட்டுகின்றன.

இராஜஸ்தானில், ஒரு இளைஞன் மீது திருட்டுக் குற்றம் சுமத்தி இழுத்துப்போய் அவனது ஆணுறுப்பைக் கத்தியால் வெட்டித் துண்டித்து விட்டார்கள். காரணம் தனது மகளுடனும் மனைவியுடனும் அந்த இளைஞன் தகாத உறவு வைத்திருந்ததாக அந்தப் போலீசு அதிகாரியின் உறவுக்காரன் சந்தேகித்தானாம். உத்திரப் பிரதேசத்தில் தனது கணவனாலேயே விபச்சார விடுதியில் விற்கப்பட்ட பெண்ணை அவளது பெற்றோர்கள் மீட்டனர். அவளை மீண்டும் விபச்சார விடுதிக்கே விற்பதில் அவளது கணவனுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது போலீசு. இவற்றின் மூலம் விபச்சார விடுதிக்குப் பெண்களை விற்கும் தொழிலி[illegible] போலீசே சம்பந்தப்பட்டிருப்பது அம்பலமானது. இன்னொரு வழக்கில் கொண்டு [illegible]ட விசாரணைக் கைதி உச்சநீதி மன்றத்திலேயே போலீசால் மிருகத்தனமாகத் தாக்[illegible]பட்டார். இப்படிப்பல சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போக முடியும்.

இந்தவகையில் தாங்களும் யாருக்கு குறைந்தவர்கள் அல்ல என்பதைத் தமிழ்நாட்டுப் போலீசார் நிரூபித்து வருகிறார்கள். தளி கல்பனா சுமதி, அண்ணாமலை நகர் பத்மினி போன்ற போலீசு கற்பழிப்பு வழக்குகள் தப்பித்தவறி வெளியே வந்த சில சான்றுகள். ஒரத்தநாட்டில் சாராய வழக்கைப் பிடிக்கப் போவதாக வந்து ரெங்கம்மாள் என்ற பெண்ணை இழுத்துப்போய் கற்பழித்ததும், சென்னையில் கஞ்சா வழக்கைப் பிடிக்க வந்ததாகக் கூறி இலங்கை அகதியை போலீசுக்காரன் கற்பழித்ததும் சமீபத்திய செய்திகள். ஒசூரில் திருட்டு வழக்கில் தேடப்பட்டு வந்த 14 வயது சிறுவனைப் பெற்றோரே போலீசிடம் ஒப்படைத்தனர். அவனை அடித்துக் கொன்று, ஒகேனக்கல் காட்டுக்குக் கொண்டுபோய் கொளுத்திவிட்டுத் தப்பியோடி விட்டான் என்று புளுகியது போலீசு; ஆனால் போலீசின் கொலைதான் என்பதற்கு ஆதாரங்கள் சிக்கியுள்ளன. ஆம்பூர் - வாணியம்பாடியில் போலீசு மற்றும் பிற அரசு அதிகாரிகளே கூட்டுச் சேர்ந்து மோசடி சீட்டுக்கம்பெனி நடத்தியது வெளியாகியுள்ளது. செஞ்சி அருகேயுள்ள அத்தியூருக்கு வெள்ளையன் என்கிற நபரைப் பிடிக்கப்போன பாண்டிச்சேரி போலீசு அவனது ஒன்றுவிட்ட தங்கையான விஜயாவைக் கற்பழித்தது. இந்த வழக்கில் இருந்து பாண்டி போலீசைத் தப்புவிக்க பாண்டி, தமிழ்நாடு, ஆந்திர ஆகிய மூன்று மாநிலப் போலீசாரும் கூட்டுச் சேர்ந்து அபலை ஆதிவாசிப்பெண்ணின் நெருங்கிய உறவினர்கள் பலரைக் கைது செய்து தொடர்ந்து சித்திரவதை செய்கிறது.

தமிழ்நாட்டில் ஒரு பெண் முதலமைச்சராக உள்ளதால் கற்பழிப்பு போன்ற கொடூரமான விவகாரங்களில் கடுமையான நடவடிக்கை எடுப்பார் என்று யாராவது நம்பினால் அவர்கள் பைத்தியக்காரர்களாகத்தான் இருக்க வேண்டும். அண்ணாமலை நகர் பத்மினி கற்பழிப்பு குறித்து தமிழ்நாடு முழுவதும் விசாரணை - நீதிகோரிப் போராட்டங்கள் வெடித்தபோதும் எருமைமாட்டின் மீது மழைபெய்ததைப்போல இருந்தார், ஜெயா. சினிமாவில் அபலைப் பெண்கள் கற்பழிக்கப்படுவதைக் கண்டுரசிக்கும் வில்லியின் நினைவுதான் வருகிறது. இப்போது ஒரத்தநாடு ''காவல் நிலைய''க் கற்பழிப்புகள் சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டது; அதற்கு, ''எல்லா கற்பழிப்புப் புகார்களையும் நம்பமுடியாது; குற்றங்களுக்காகப் பிடித்துச் சென்று, விடுவிக்கப்பட்ட பெண்கள் பலரும் வழக்குகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக தாம் கற்பழிக்கப்பட்டதாகப் பொய் சொல்கிறார்கள்'' என்று போலீசு மிருகங்களுக்குப் பொது வக்காலத்து வாங்கியிருக்கிறார். தமிழ்நாடு போலீசு தியாகமிகு சேவை செய்வதாகப் பாராட்டுவதோடு ஏராளமான விருதுகள், சலுகைகள், வசதிகள் அள்ளித்தருகிறார். சினிமா, பத்திரிக்கைகளில் போலீசைக் குறைகூறக்கூடாதென்று கடும்கண்டனம் தெரிவிக்கிறார். சுருக்கமாகச் சொன்னால், விசுவாச நாய்களுக்கு மாட்டுக்கறிபோட்டு வளர்ப்பார்கள்; ஆனால் போலீசுக்கு மனிதக்கறிபோட்டு வளர்க்கிறார், ஜெயலலிதா.

பஞ்சாபிலும், காஷ்மீரிலும் நடக்கும் போலீசு கொடூரங்கள், அரசியல் காரணங்காட்டி நடத்தப்படுகின்றன; அதற்காகவாவது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மனிதஉரிமை குரல்கள் எழுப்பப்படுகின்றன. ஆனால் நாட்டின் மற்றபகுதிகளில் ''கேட்பாரற்ற'' திமிரோடு, வெறியோடு மக்களது உயிர் வாழும் உரிமையையே காலில் போட்டு நசுக்குகின்றன, போலீசு மிருகங்கள். வானளாவிய அதிகாரம் படைத்த போலீசு, சட்டப்படியும், நியாயப்படியும் நடந்து கொள்ளும் என்று நம்புவது முட்டாள்தனம். ஆகவே நாட்டில் மானத்தோடு மக்கள் உயிர்வாழும் நிலைநாட்டப்பட வேண்டுமானால் அடிப்படையானதொரு கோரிக்கையை முன்வைத்துப் போராடவேண்டும். அது நாட்டிலேயே மிகப் பெரிய சமூக விரோத, கிரிமினல் கும்பலாக உள்ள போலீசு அமைப்பே கலைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கான போராட்டமாக இருக்கவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# பார்ப்பன 'ஜெ' பாதபூஜையில் மானமிழந்த கி. வீரமணி

''பத்தினி'' வேசம் போடும் விபச்சாரி, ஊரில் உள்ளவர்களை எல்லாம் பழிப்பதைப் போல நடந்து கொள்ளுகிறார் தி.க (வீ) பிரிவின் தலைவர் வீரர். பார்ப்பன எதிர்ப்பிலும், சுயமரியாதைக் கொள்கையிலும், சமூக நீதி இலட்சியத்திலும் தான் ஏதோ சுத்தம் சுயம்பிரகாசியாக நடந்து கொள்வதாகவும் மற்றபிற அமைப்பினர் ஏதோ குற்றம் புரிந்து வருவதாகவும் தொடர்ந்து அவதூறு பரப்பி வருகிறார். ஆனால் வீரமணியோ பார்ப்பன-பாசிச ஜெயாவின் அடிவருடியாக மாறி, தொடர்ந்து அவருக்கு பாதசேவை செய்வதில் அவரது எடுபிடி மந்திரிகளையும் விஞ்சி விட்டார்.

பார்ப்பன பாசிச ஜெயாவுக்கு ''சமூகநீதி காத்த வீராங்கனை'' பட்டமளிப்பதற்காகத் தஞ்சை, வல்லம் பெரியார் - மணியம்மை அறக்கட்டளை வளாகத்தில் அவரை வரவேற்று பாராட்டி, பரிசுகள் வழங்கி, பல்லிளித்து நின்ற வீரமணியின் சமூக - இனதுரோகச் செயல்களைக் கண்டித்தவர்கள் மீது கீழ்கண்டவாறு வசை மாறிப் பொழிகிறார், வீரமணி. ''அரசியல்வாதிகளும் அரைவேக்காடுகளும்தான்'' என்று ஏசுகிறார்; ''அழுக்கு மனம் படைத்தோர்'', ''நுனிப்புல் மேயும் படித்த பாமரர்கள்'', ''தனித்தன்மையை அழிக்க வரும் கொம்பன்கள்'' ''வெட்டிப் பேச்சுப் பேசுவோரின் வீண்வாதம் தவிடு பொடியாகும்'' என்று அறிக்கை மூலம் எரிந்து விழுகிறார், வீரமணி.

பார்ப்பனர்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்கள் பிறவிக் குணம் எத்தகையது, அவர்களிடம் நாம் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை, உறவு எந்த அடிப்படையில் இருக்க வேண்டும் என்று வீரமணி கும்பல் எழுதியவற்றைப் பின்வருமாறு தொகுத்தறியலாம்.

''புராண காலத்தில் இருந்தே பார்ப்பனர்கள் ஒரே பொய்யை பலமுறை திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் பொய்யானதை, பாமரமக்களை நம்பச் செய்து அதில் தங்கள் வாழ்வை - ஆதிக்கத்தை நிலை நிறுத்தி வருபவர்கள்.''

''புராண, இதிகாச காலத்தில் இருந்தே பார்ப்பனர்கள் சிறுபான்மையினராய் இருந்து வந்தாலும், அவர்களுக்குரிய ஆதிக்க உணர்வோடுதான் இருந்து வந்துள்ளனர். பிற இன மக்களை சூழ்ச்சியால், வஞ்சகமாய் வெற்றி கொண்டுதான் மேல் சாதி ஆதிக்கத்தை நிலை நிறுத்தி வந்தனர். அந்த கால கட்டங்களில் தங்களுக்கும் தங்கள் தத்துவத்திற்கும் எதிராய் பேசியவர்களையும், இயக்கமாய் வளர்ந்தவர்களையும் அத்தகைய இழிவான, கொடுமையான செயல்களைச் செய்தாவது ஊடுருவி அழித்து வந்தனர்.''

''புத்தர் கொள்கையை நேரடியாக எதிர்ப்பதில் தோல்வி கண்ட பார்ப்பனர்கள், முற்போக்கு முகமூடி அணிந்து புத்தர் கொள்கையை ஏற்பதாக நடித்து அதில் ஊடுருவித்தான் அழித்தார்கள்'', ''பிறப்பால் பார்ப்பனராக இருந்து விவசாயிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு, விவசாய சங்கத்திற்கு தலைமை ஏற்ற சரத்ஜோஷி என்ற பார்ப்பனர் இப்போது விவசாயிகளை பன்னாட்டு கூட்டுக் கொள்ளைக்கு இரையாக்கும் டங்கல் திட்டத்தை ஆதரிக்கிறார்''. இதனால், ''தக்க சூழ்நிலை வரும் போது அவர்களது ஆதிக்க உணர்வு வெளிப்படும் என்பதை சரத்ஜோஷி நிரூபித்துள்ளார்''; ''ம.க.இ.க வில் உள்ள பார்ப்பனர்கள் சரத்ஜோஷியாகவும், பி. ராமமூர்த்தியாகவும் ஒரு காலத்தில் அம்பலமானால் ஆச்சரியமில்லை''. ஆகவே, ''பார்ப்பனரல்லாத மக்களின் இனவிடுதலைக்கு ஆதரவு காட்டி முக்கியப் பொறுப்புக்கும், தலைமைக்கும் வரமுயற்சிக்கும் முற்போக்குப் பார்ப்பனர்கள் சங்கராச்சாரியை விட ஆபத்தானவர்கள்''.

''பெரியாரியல் அடிப்படையில் நடக்கும் போராட்டங்களில் எது ஒன்றையும் (இட ஒதுக்கீடு, இந்திஎதிர்ப்பு, கருவறை நுழைவு, தமிழ் மொழி வழிபாடு, அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கப் போராட்டம் போன்றவை) இதுவரை எந்த முற்போக்குப் பார்ப்பனரும் ஆதரித்தது கிடையாது''. ''பார்ப்பனர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அதுவும் முற்போக்கு முகமூடி போட்டுக் கொண்டிருந்தாலும், பார்ப்பனர்களே'' என்று ஆணித்தரமாக அடித்துக் கூறியது, விடுதலை.

''ஆரியர்களின் பிறவிக் குணம், சாதிக் குணம் இவ்விரண்டும் ஆரியரல்லாதவர்களை ஒழிப்பது அல்லது அடிமை கொண்டு அவர்கள் உழைப்பில் வாழ்வது என்பதேயாகும் மற்றும் ஆரியருடைய எந்த ஆதாரங்களை எடுத்து பார்த்தாலும் ஆரியல்லாதார் நாடு மிலேச்ச நாடு. ஆரியரல்லாதார் பாஷை 'மிலேச்ச பாஷை' ஆரியரல்லாதார் மிலேச்சர், அசுரர், இராட்சதர் என்பதாகக் காணக்கிடப்பதை இன்றும் பார்க்கலாம்''.

''அடுத்துக்கெடுக்கும் நரித்தனம் பார்ப்பனர்களுக்கு உண்டு. எனவே, பார்ப்பனர்களோடு எச்சரிக்கையோடு இருங்கள் என எச்சரிப்பதில் என்ன தவறு?''; ''வர்ணாசிரம தர்மத்தை நிலைநாட்டும் பார்ப்பனியத்தை பாதுகாக்கும் அமைப்புகளையும், இதற்கு ஆதரவு தந்து இதற்காக உழைத்து நியாயப்படுத்தும் பார்ப்பனர்களையும் மற்றவர்களையும் எதிர்க்கிறோமேயன்றி வேறில்லை. இப்படிப்பட்டவர்களைப் பற்றி சமுதாய நலன் கருதி, இனநலன் கருதி எச்சரிக்கையோடு இருங்கள் என்பது எப்படி குற்றமாகத் தெரிகிறது புதிய ஜனநாயகத்திற்கு?''

''பார்ப்பனர்களும் - பார்ப்பனர்களின் பாதுகாப்பு நிறுவனமான சங்கரமடமும் 'எதை' ஆதரிக்கிறார்களோ, 'அதை' எதிர்ப்பது, அவர்கள் 'எதை' எதிர்க்கிறார்களோ 'அதை' ஆதரிப்பது. இதுவே பார்ப்பனியத்துடன் சமரசமற்ற போக்கு ஆகும்''. ''வாயில், நாக்கில் குற்றம் இருந்தாலொழிய வேம்பு இனிக்காது; தேன் கசக்காது - அது போல் பிறப்பில் குற்றமிருந்தாலொழிய பார்ப்பான் தன் நிலையிலிருந்து மாறமாட்டான். புலிபுல்லைத் தின்னாது. ஆடு மனிதனைத் தின்னாது அப்படித்தான் பார்ப்பனர்கள் தன்மை ஆகும்''.

இங்கே மிக முக்கியமானதொரு கேள்வி எழுகிறது. இதை நாம் வீரமணியிடமோ, அவரோடு சேர்ந்து பெரியாரது சொத்துக்களை மாநில, மாவட்டத் தலைநகர்களில் ஆண்டு அனுபவித்து வரும் நியமனத் தலைவர்களிடமோ, அவரிடம் இருந்து ஊதியம் பெற்றுக் கொண்டு கொத்தடிமைகளாகி பணி புரியும் எழுத்தாளர் - பேச்சாளர் - அலுவலர்களிடமோ அக்கேள்வியைக் கேட்கவில்லை. பித்தலாட்டத்தில் ஊறிப்போன அவர்களிடம் இருந்து நேர்மையான பதில் கிடைக்காது என்று தெரியும்! இன்னமும் சுயமரியாதையும், பகுத்தறிவும் கொண்டுள்ள பெரியாரின் ''சீடர்களிடம்'' கேட்கிறோம்.

''புதிய ஜனநாயக புரட்டலுக்கு மறுப்பு'' என்கிற பெயரில் வீரமணியின் விடுதலையில் மேற்கண்டவாறு எழுதப் பட்ட பார்ப்பனரின் குணங்கள் - தன்மைகள் பார்ப்பன - பாசிச ஜெயாவுக்குப்

> ஜெயாவுக்கும் வீரமணிக்கும் வேம்பு இனிக்கிறது, தேன் கசக்கிறது! யாருடைய வாயில், நாவில், பிறவியில் குற்றம் நிகழ்ந்து விட்டது? வீரமணியுடையதா? ஜெயலலிதாவுடையதா?



படிப்பகம்

www.padippakam.com

பொருந்துமா? பொருந்தாதா?

பார்ப்பனர்களின் பண்புகள் என்று வீரமணி கூறும் இவை அனைத்திற்கும் ஜெயலலிதா விதி விலக்கா? இந்தப் பண்புகள் எதுவும் அவரிடம் கிடையாதா?

எம்.ஜி. ஆரிடம் என்ன உறவை ஏற்படுத்திக் கொண்டு கட்சித் தலைமையைக் கைப்பற்றினார்? ஜானகியுடன் எப்படிப்பட்ட ''சக்களத்திச் சண்டை'' போட்டார்? அதில் பார்ப்பன ராஜீவ் - வெங்கட்ராமன் மற்றும் மற்றவர்களின் பங்கு என்ன? சட்டசபையில் கருணாநிதிக்கு எதிராக எத்தகைய ரௌடித்தனங்களை அரங்கேற்றினார்? டில்லிக்குப் போய் எந்தெந்த சித்து வேலைகள் செய்து தி.மு.க. ஆட்சியைக் கலைத்தார்? தேர்தல்களில் என்னென்ன ஒப்பாரி வைத்தார்? ஈழப்போராளிகளையும், ஈழ ஆதரவாளர்களையும் எப்படி வேட்டையாடினார்?

''இது நம்மவாள் ஆட்சி'' என்று பார்ப்பனர்கள் உரிமை பாராட்டிக் கொள்ளும்படி என்னவெல்லாம் செய்தார்? தனது ஆடம்பர, ஆபாச, உல்லாச, ஊதாரி ஆட்சிக்கு உறுதுணையான சில ''சூத்திர'' அதிகாரிகளைத் தவிர பார்ப்பன அதிகாரிகளுக்கு உயர் பதவியும், பதவி நீட்டிப்பிலும் எவ்வளவு அக்கறை காட்டுகிறார்? போலீசால் தமிழச்சிகள் கற்பழிக்கப்படுவதையும், தமிழர்கள் கொல்லப்படுவதையும் எப்படி நியாயப்படுத்துகிறார்.? மந்திரிகள், வாரியத் தலைவர்கள், எம்.எல். ஏக்கள் எம்பிக்களாக உள்ள ''சூத்திர-தாழ்த்தப்பட்ட''வர்களை மொட்டை போட்டும் காவடி தூக்கியும் பால்குடம் சுமந்தும், வேப்பஞ்சேலை கட்டியும், அங்கப்பிரதட்சனம் செய்தும், தங்கத்தேர் இழுத்தும், அலகு குத்தி ஆடியும், மண்சோறு தின்றும் தனது பிறந்த நாளைக் கொண்டாட செய்த ஜெயா, பார்ப்பனர்களாகிய தன் கட்சிக்காரரை எவனையாவது இப்படிச் செய்யச் சொன்னாரா?

ஆர்.எஸ்.எஸ் பார்ப்பனர்கள் கூட 'அம்பேத்கருக்குச் சிலை வைத்து, நூற்றாண்டு விழாக் கொண்டாடிப் பாராட்டுகிறார்கள்; தாழ்த்தப்பட்டவரை அர்ச்சராக்குகிறார்கள், அயோத்தி ராமன் கோவிலுக்கு பூமி பூஜை போட வைத்தார்கள். இட ஒதுக்கீடு - சமூக நீதியை ஆதரிப்பதாகச் சொன்னார்கள்; ஆதிவாசிகளிடையே சமூக சேவை அமைப்புகளை நடத்துகிறார்கள்; பிற்பட்ட சாதிக்காரரை முதல்வராக்கினர்; பார்ப்பனரல்லாதவரை ஆர்.எஸ்.எஸ்.-ன் தலைவராக்கி யுள்ளனர்; ''டங்கல்'' திட்டத்தை எதிர்த்து இயக்கம் நடத்துகின்றனர்.

இவையெல்லாம் பார்ப்பன சூழ்ச்சி, வஞ்சகம், பாசாங்கு, ஏமாற்று வேலை என்று சித்தரிக்கும் வீரமணி, அதே ஆர்.எஸ்.எஸ். பார்ப்பான்களோடு கள்ளக் கூட்டு வைத்துள்ள பார்ப்பன - பாசிச ஜெயா இதே காரியங்களைச் செய்யும் போது மட்டும் இவை உண்மையானவை என்று பாராட்டுவது ஏன்?

''பாராட்ட வேண்டியதைப் பாராட்டுவோம், கண்டிக்க வேண்டியதைக் கண்டிப்போம்! இதுதான் பெரியாரின் கொள்கை'' என்கிறார், வீரமணி. ''ஆர்.எஸ்.எஸ். சதிக் கும்பலைச் சேர்ந்த கர்நாடக, அய்யங்கார் பார்ப்பனப் பெண்'' ''திராவிட இயக்கத்துக்குள் ஊடுருவி, அதைக்



கைப்பற்றி வந்த பார்ப்பனர்களின் பிரதிநிதி'' என்று தேர்தலுக்கு முன்பு வீரமணி எழுதினார். ஜெயா ஆட்சிக்கு வருவதைத் தடுத்திட கூட்டணி சேருமாறு ராமதாசுடன் வாதிப்-பிரதிவாதங்கள் நடத்தினார். ஜெயா ஆட்சிக்கு வந்ததும் ''இது நம்மவாள் ஆட்சி'' என்ற பார்ப்பன சங்க கட்டுரையை வெளியிட்டு அம்பலப்படுத்தினார். ஆனால் ஜெயா ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டு அடக்குமுறைகள் பெருகியதும் ஜெயாவை எதிர்த்தால் அரசியல் நடத்தலாம், பிழைப்பு நடத்த முடியாது என்பதை உணர்ந்த வீரமணி மேற்கண்ட முயற்சிகளையும் கைவிட்டுவிட்டார்.

ஜெயாவின் விழாவில் பங்கு கொண்டு 5 லட்சம் ரூபாய் கையூட்டு வாங்கிக் கொண்ட பிறகு ஜெயாவின் காலில் விழாத குறையாக பாதபூஜை செய்யும் வீரமணி எதற்காகவாவது அவரை கண்டித்ததுண்டா?. பார்ப்பனப் பெண் என்றும் பார்ப்பனிய ஆட்சி என்றும் சொன்னதுண்டா?. ''பெரியார் அண்ணா பெயரால் ஆளும் தாங்கள் இப்படிச் செய்யலாமா?'', ''ஒரு பெண் முதலமைச்சர் இப்படிச் செய்வது ஏற்கக் கூடியதா என்று பரிசீலியுங்கள்'', ''ஒரு முதல்வர், அரசுத்தலைவர் இப்படிச் செய்வது சரியா என்று சிந்தியுங்கள்'' - இவைதான் அதிகபட்சம் வீரமணி தெரிவித்த பணிவான கண்டனங்கள்.

தான் பிறந்த பார்ப்பன சாதியைத் துறந்து அதற்கே எதிரானப் போராட்டத்தில் உறுதியாய் நிற்கும், ஒரு புரட்சியாளனாய் வாழும் புதிய ஜனநாயகத் தோழனை, உழைப்பில் ஈடுபடும் தொழிலாளியாய் வாழ்பவனை நம்பக்கூடாது, எப்படியும் துரோகம் செய்துவிடுவான்; ஆனால் பார்ப்பன-பாசிச ஜெயாவை நம்பலாம், பாராட்டலாம், பாதசேவை செய்யலாம்; இவரது செயல்பாடுகளில் தந்திரம், சூழ்ச்சி வஞ்சகம் கிடையாது. இது தான் வீரமணியின் பெரியாரியல். உண்மை என்ன?. அரசு விளம்பரம் முதல் அறக்கட்டளை மோசடி வரை எல்லாவற்றுக்கும் பார்ப்பன ஜெயாவின் தயவு தேவையாக இருக்கிறது. கூடவே ஜெயாவின் தனிச்சிறப்பான பணப்பெட்டி பரிசும் (ஐந்து லட்சம் சான்று) கிடைக்கிறது. இந்த கூற்று தவறென்றால் வேறு சந்தேகம் வருவது தவிர்க்க முடியாதது.

''பார்ப்பனப் பெண்ணாய்ப் பிறந்து பெரியாரின் இலட்சியத்தை செயல்படுத்துகிறார், ஜெயா; அப்படிச் செய்யும் போது அவரது ஆட்சிக்கு ஆபத்து வந்தால் கருப்புச் சட்டை படை தற்கொலைப் படையாக கருப்பு மெழுகுவர்த்தியாக தன்னையே அழித்துக் கொண்டு உறுதுணையாய் நிற்கும்'' என்கிறார் வீரமணி. இங்கே ஜெயாவுக்கும் வீரமணிக்கும் வேம்பு இனிக்கிறது. தேன் கசக்கிறது! ஆடு மனிதனைத் தின்னுகிறது! புலி புல்லைத் தின்னுகிறது. யாருடைய .வாயில், நாவில் குற்றம்? யாருடைய பிறவியில் குற்றம் நிகழ்ந்து விட்டது.? வீரமணியுடையதா? ஜெயாலலிதாவுடையதா?



படிப்பகம்

www.padippakam.com

# பெரியாரை வீரமணியிடமிருந்து விடுதலை செய்வோம், வாரீர்!

அரசியல், சித்தாந்தம் மற்றும் புரட்சிகர நடைமுறை ரீதியாக மார்க்சிய - லெனினிய இயக்கத்தை எதிர் கொள்ள முடியாத வீரமணி போன்ற பகுத்தறிவு வேடதாரிகள், ''பார்ப்பனத் தலைமை'' என்கிற அவதூறு பரப்பி ஆதாயம் தேடுவது ஒன்றும் புதிதானது அல்ல. அவர்களது முகாமில் இருந்து விலகி, புரட்சிகர இளைஞர்கள் இந்த இயக்கத்தில் சேரத் துவங்கியதில் இருந்தே, அதைத் தடுப்பதற்கு அவர்கள் செய்துவரும் இழிசெயல் இதுதான்.

1965, 68 ஆண்டுகளில் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கேற்ற இளைஞர்களில் பலர், தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு, குறிப்பாக கீழவெண்மணி நிகழ்ச்சியைத் தொடர்ந்து திராவிட இயக்கத்தின் மீதான பிரமைகளில் இருந்து விடுபட்டு, நக்சல்பாரி பேரெழுச்சியினால் ஈர்க்கப்பட்டனர். மார்க்சிய - லெனினிய இயக்கம் தமிழ்நாட்டில் வேரூன்றத் தொடங்கிய உடனே வீரமணிகள் அதற்கு எதிரான அவதூறுப் பிரச்சாரத்தையும் தொடங்கிவிட்டனர். ''மஜூம்தார்'' என்பது வங்கத்தில் உள்ள பார்ப்பன சாதிப்பெயர் என்றும், இந்த இயக்கத்தின் தலைவரான சாரு மஜூம்தார் ஒரு பர்ர்ப்பனர், ஆகவே இதுவும் ஒரு பார்ப்பன இயக்கம் தான் என்று தாங்களாகவே ஒரு அண்டப் புளுகைக் கட்டவிழ்த்து விட்டனர்.

அதேபோல கடந்த சில ஆண்டுகளாக புரட்சிகர நடைமுறையோடு நமது இயக்கம் தனித்தன்மை வாய்ந்ததாக ஒரு வீச்சுடன் பரவத் தொடங்கியது. இது பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட இளைஞர்களை அதிக அளவில் ஈர்த்தது. இதனால் பீதியுற்ற வீரமணிகள் மீண்டும் பழைய ''பார்ப்பனத் தலைமை'' என்கிற பல்லவி பாடத் தலைப்பட்டனர்; அதற்குக் கூட்டுக் குரல் கொடுக்கச் சில ''தமிழ் இனவாதக்'' குழுக்களும் சேர்ந்து கொண்டன. முதலில் வாய்வழி அவதூறு செய்து வந்ததோடு, வீரமணியின் ''உண்மை'', பொழிலனின் ''தாயகம்'' ஏடுகள் நமது அமைப்பு ''பார்ப்பனத் தலைமையிலானது'' என்று புளுகின. இதற்கு ஆதாரம் தருவதாகக் கருதிக் கொண்டு பொழிலன் கும்பல் தனது ''புதிய அவதார''த்தின் பெயரில் நடத்தும் ''உழைக்கும் மக்கள் தமிழகம்'' ஏட்டில், இந்த இயக்கத்திலேயே இல்லாத ஒருவரின் பெயரையும், பார்ப்பனரே அல்லாத ஒருவரின் பெயரையும் குறிப்பிட்டு ''பார்ப்பனத் தலைமை'' என்று பச்சையாகப் புளுகியது.

உண்மையா, பொய்யா என்று சோதித்தறியக் கொஞ்சமும் நேர்மையோ, துணிவோ இல்லாத இந்த நபர்கள் இப்போது ''புதிய ஜனநாயக'த்தின் நிலைப்பாடுகளைத் திரித்துப் புரட்டி தமது அவதூறுகளை நியாயப்படுத்த முனைகிறார்கள். அதன் ஒரு பகுதியாக, ''பார்ப்பனர்கள் 'சூத்திரர்களாகவும், பஞ்சமர்களாகவும் வாழ்கிற தோழர்கள்' - என்று புதிய ஜனநாயகம் கூறியுள்ளதற்கு நாம் விளக்கம் அளிப்பது நமது கடமையாகும்'' - எனக் கூறி வீரமணியின் விடுதலை தனது பித்தலாட்டங்களைத் தொடர்கிறது.

நமது தோழர்களைப் பற்றி ''புதிய ஜனநாயகம்'' கூறியுள்ளதற்கு ''விடுதலை'' தரும் விளக்கம் பின்வருமாறு உள்ளது. பெரியார் முன்பு கூறியதைவிட 1947-க்குப் பிறகு - இப்போது பார்ப்பனர்கள் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொண்டுள்ளார்கள்; வருணாசிரம (பிறப்பு) தர்மத்தை சட்டமும் நீதி மன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளன; அதன்படி சூத்திரனும் பஞ்சமனும் அர்ச்சகனாவதும், கருவறைக்குள் நுழைவதும் முடியாது; உழைக்காமல் உண்டு கொழுக்கும் பார்ப்பனர்களால் உடல் உழைப்புத் தொழிலில் ஈடுபடும் சூத்திரன் இழிவுபடுத்தப்படுகிறான்; ''சூத்திரனாக - பஞ்சமனாகப் பிறந்த தோழன் கர்ப்பகிரகத்தில் உள்ள சாமியைத் தொட்டால் தீட்டு. ஆனால், பார்ப்பனராகப் பிறந்து 'சூத்திரனாக, பஞ்சமனாக வாழும்' புதிய ஜனநாயகத் தோழன் சாமியைத் தொட்டால் தீட்டு ஆகுமோ? இல்லையே''. பி. ராமமூர்த்தி பார்ப்பனராகப் பிறந்தவர் என்பதால்தானே மதுரை வருணாசிரம வெறியர் வைத்தியநாத அய்யர், அவர் தலைமறைவாக வாழத் தனது வீட்டில் இடமளித்தார் - இவைதாம் விடுதலையின் வாதம்.

> பிறப்பால் பஞ்சமனாக, சூத்திரனாக, பார்ப்பனனாக உள்ள 'புதிய ஜனநாயக'த் தோழர்களிடையே முரண்பாட்டை உருவாக்கி மோதவிடலாம் என்கிற நப்பாசை கொள்கிறது, 'விடுதலை'. இதுவும் ஒரு வகை பார்ப்பன சூழ்ச்சி தான்.

பார்ப்பனரின் ஆதிக்க நிலை, சூத்திரன் - பஞ்சமனது இழிநிலை, உரிமை மறுப்பு, ராமமூர்த்தியின் துரோகம் ஆகியவை பற்றி வீரமணியும் விடுதலையும் சொல்லி நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவை நாம் ஏற்கனவே எதிர்கொண்டு, எமது ஏடுகளில் எழுதியும், போராடியும் வருபவைதாம். நமது ''இருண்ட காலம்'', ''அசுரகானம்'' ஒலி நாடாக்களைக் கேட்டாலே இது புரியும். ஆகவே அசுரன் என்கிற பெயரில் புகுந்து கொண்டுள்ள விடுதலைக் கட்டுரையாளர், அய்யா, ஆசிரியர், அண்ணன், மானமிகு என்று நன்றியுடன் அழைக்கும் வீரமணிக்குத்தான் இவற்றையெல்லாம் சொல்ல வேண்டும். அவர் தான் பெரியாரிடம் உலகு தழுவிய வெற்றி பெற்றிருப்பதாகப் பீற்றிக் கொள்கிறார். அவர்தான் பார்ப்பன ஆதிக்கம் வலுப்பெற்றிருப்பதன் ஒரு பகுதியாகக் கூட பார்ப்பன பாசிச ஜெயா ஆட்சி ஏற்பட்டிருப்பதைக் கருதவில்லை. ''வருணாசிரம (பிறப்பு) தர்மத்தை சட்டமும், நீதி மன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளன; அதன்படி சூத்திரனும் பஞ்சமனும் அர்ச்சகனாவதும் கருவறைக்குள் நுழைவதும் முடியாது'' என்பதை வீரமணிதான் ஏற்றுக்கொள்ளவில்லை; மறுக்கிறார். ''சமூக நீதி வீராங்கனை'' ஜெயலலிதா, சொல்லிவிட்டார், வேதாகமக் கல்லூரி திறக்கப்படும், அதில் பஞ்சமனுக்கும் சூத்திரனுக்கும் இட ஒதுக்கீடு செய்து தரப்படும், அவர்கள் அர்ச்சகராகவதும், கருவறைக்குள் நுழைவதும் எளிதாக நடந்துவிடும்; அதற்காகப் போராட வேண்டியதில்லை என்பதுதானே வீரமணி சொல்வது?

அதற்கு மாறாக வருணாசிரம (பிறப்பு) தர்மத்தை சட்டமும் நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளன; அதன்படி சூத்திரனும் பஞ்சமனும் அர்ச்சகராவதும், கருவறைக்குள் நுழைவதும் முடியாது; உழைக்காமல் உண்டு கொழுக்கும் பார்ப்பனர்களால் உடலுழைப்புத் தொழிலில் ஈடுபடும் சூத்திரனும் பஞ்சமனும் இழிவுபடுத்தப்படுகிறான் என்பதை எடுத்துக் காட்டி, அதை எதிர்த்துப் போராடுவது, ''புதிய ஜனநாயகம்'' இயக்கத்தினர்



படிப்பகம்

www.padippakam.com

தான். ஆகவே வீரமணிக்குச் சொல்லி, அவரது துரோகத்தை எதிர்த்துப் போராடத் துணிவில்லாத விடுதலைக் கட்டுரையாளர் அசுரன், புதிய ஜனநாயகத்தின் மீது பாய்வதன் மூலம் தனது நேர்மையற்ற எஜமான விசுவாசத்தையே காட்டுகிறார்.

அதேபோல, ''சூத்திரனாக - பஞ்சமானகப் பிறந்த தோழன் கர்ப்பகிரகத்தில் உள்ள சாமியைத் தொட்டால் தீட்டு. ஆனால் பார்ப்பனராக பிறந்த 'சூத்திரனாக - பஞ்சமனாக வாழும்' புதிய ஜனநாயகத் தோழன் சாமியைத் தொட்டால் தீட்டு ஆகுமா? இல்லையே'' என்று விடுதலை தரும் விளக்கமும் உள்நோக்கமுடையதுதானே தவிர, நமக்குத் தெரியாததல்ல. ''13 குடும்பங்களைச் சேர்ந்த, ஆகம விதிகளின்படி தகுதி உடைய பிராமணர்களுக்கு மட்டும்தான் அர்ச்சகராகவும் கர்ப்பகிரகத்துக்குள் நுழையவும் சாமியைத் தொடவும் உரிமையுண்டு; எல்லாப் பிராமணர்களுக்குக்கூட கிடையாது'' என்று வீரமணியின் 'சமூக நீதி வீராங்கனை' அரசில் உள்ள பார்ப்பனரல்லாத மந்திரிகள் சொன்னார்கள்; கருவறை நுழைவுப் போராட்டம் நடத்திய நாம்தான் இது எப்படிப் பார்ப்பனப் பித்தலாட்டம் என்பதை அப்போதே அம்பலப்படுத்தினோம். ஆகவே பஞ்சமனாகவும் சூத்திரனாகவும் பிறந்த தோழனுக்கும் பார்ப்பனனாகப் பிறந்து 'சூத்திரனாக - பஞ்சமனாக' வாழும் புதிய ஜனநாயகத் தோழனுக்கும் சமூக வாழ்வில் நிலவும் வேறுபாடு நாம் அறிந்திருப்பதுதான். ஆனால் இதை இங்கே எடுத்துச் சொல்வதன் மூலம் இத் தோழர்களிடையே கசப்புணர்வையும், முரண்பாட்டையும், பிளவையும் உருவாக்கி மோதவிடலாம் என்கிற நப்பாசை கொள்கிறது விடுதலை; இதுவும் ஒருவகை பார்ப்பன சூழ்ச்சி தான்.

பார்ப்பனராகப் பிறந்ததால் தனக்குக் கிடைக்கும் சமூகத் தகுதி, ஆதிக்க நிலை, வாழ்க்கை வசதிகள், சலுகைகளைக் காத்துக் கொள்ளவோ, அவற்றை அனுபவிக்கவோ மறுத்து, அவற்றை நிராகரித்து மற்றபிற தோழர்களுக்குரிய வாழ்க்கையைத் தானும் வாழ்ந்து, பார்ப்பன ஆதிக்கத்தை வீழ்த்த சூத்திர - பஞ்சம சாதிகளின் இழிநிலையை நீக்கவும், ஒரு புதிய சமுதாய அமைப்பை நிறுவவும் புரட்சிப்பணியில் ஈடுபடுபவர்கள் - அப்படிப்பட்டவர்களைத்தான் நமது அமைப்பில் உள்ள பிறப்பால் பார்ப்பனர்களாகவும், இருப்பால் சூத்திரர்கள் - பஞ்சமர்களாகவும் வாழும் தோழர்கள் என்று நாம் எழுதினோம். ஆனால் இதற்கு தனது விளக்கமாக, சமுதாயத்தில் பார்ப்பனர்களுக்குள்ள ஆதிக்க நிலை, சூத்திர - பஞ்சம சாதிகளுக்குள்ள இழிநிலை - உரிமை மறுப்பு, ராமமூர்த்தியிடம் வைத்திய நாத அய்யர் காட்டிய சாதிப்பாசம்



**தஞ்சையில் நடந்த 'சமூகநீதி வீராங்கனை' பட்டமளிப்பு விழாவில் கொஞ்சி குலாவும் பார்ப்பன ஜெயாவும் மானமிழந்த வீரமணியும்.**

பற்றியெல்லாம் எழுதுகிறது, விடுதலை. அத்தகைய சாதி ஆதிக்க நிலை - சலுகைகளை, வசதி - வாய்ப்புகளை நமது தோழர்கள் அனுபவிக்கிறார்களா? வைத்திய நாத அய்யர் போன்றவர்கள் காட்டும் பார்ப்பன சாதிப்பாசத்தை ஏற்று, ராமமூர்த்தியைப் போல துரோகம் செய்து இரட்டை வேடம் போடுகிறார்களா? இல்லையே! ஆகவே, புதிய ஜனநாயகத்தின் நிலைப்பாட்டிற்குத் தகுந்த பதில் கூற முடியாமல் வெறும் அவதூறுகளை எழுதி அவநம்பிக்கையை உருவாக்கும் வீண் முயற்சித்தான், விடுதலை செய்கிறது.

அதே நோக்கத்தோடு பின்வரும் கேள்விகளை அடுக்கடுக்காக எழுப்புகிறது, விடுதலை. ''பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்க்காமல் பார்ப்பனியத்தை எதிர்க்க முடியுமா? பார்ப்பனர்களை எதிர்க்காமல் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்க்க முடியுமா? பார்ப்பனியத்தையும், பார்ப்பனர்களையும், பார்ப்பன ஆதிக்கத்தையும் எதிர்க்கும் பணிக்கு பார்ப்பனர்களை தலைமையாகக் கொண்டு செயல்பட முடியுமா? அப்படி ஏற்றுச் செயல்பட்டால் அதனை ஏற்கத்தான் முடியுமா? ஒருவேளை புதிய ஜனநாயகம், தாம் ஏற்றுக் கொள்வதற்குத் தயார் என்று அறிவித்தாலும் அறிவிக்கலாம்! அப்படியெனில் முதலாளித்துவத்தை எதிர்ப்பதற்கு டாடா, பிர்லா போன்ற முதலாளிகள் புதிய ஜனநாயகத்திற்கு வந்தால் அவர்களையும் ஏற்றுச் செயல்படுவதற்கு 'புதிய ஜனநாயகம்' தயாரா?'' - இவை விடுதலை (4/1/94) எழுப்பும் கேள்விகள்.

மீண்டும் சொல்கிறோம், விடுதலைக் கட்டுரையாளருக்கு அறிவுஞானம் கொஞ்சமாவது இருப்பின் முடியுமா, முடியுமா என்று கேட்கும் அந்தக் கேள்விகளைத் தனது எஜமானர் வீரமணியிடம் கேட்க வேண்டும்! புதிய ஜனநாயகத்திடம் அல்ல. ஏனென்றால் வீரமணிதான் அந்தக் கேள்விகளுக்கு முடியும், முடியும் என்று சொல்லாமல், செய்து காட்டவே முயலுகிறார்! எப்படி? ''பெரியாரின் கொள்கைகள், இலட்சியங்களைப் பரப்புவதற்கு'' பார்ப்பன ஜெயா கொடுத்த நிதியை ஏற்றுக் கொள்வதும், அறக்கட்டளை மூலம் பள்ளி - கல்லூரிகள் நடத்துவதிலும், விடுதலைக்கு அரசு விளம்பரங்கள் பெறுவதிலும் பார்ப்பன ஜெயாவின் உதவிகளை நாடுவதும், வேதாகமக் கல்லூரியில் இட ஒதுக்கீடு செய்து சூத்திர - பஞ்சம சாதியினர் அர்ச்சகராகவும், கருவறைக்கு நுழையவும் பார்ப்பன ஜெயா செய்யும் ஏற்பாடுகளை நம்புவதும், காவிரி நீர் பிரச்சினையில் உண்ணாவிரதமிருந்த பார்ப்பன ஜெயாவைக் கண்டு பதறி துடிதுடித்ததும், இறுதியாக 69 சதவீத இட ஒதுக்கீடு தீர்மானம் நிறைவேற்றிய பார்ப்பன ஜெயாவுக்கு ''சமூகநீதி வீராங்கனை'' பட்டமளித்துப் பாராட்டியதும் எதைக் காட்டுகின்றன?

''பார்ப்பன ஜெயா தலைமையிலான அரசை, ஆதிக்கத்தை எதிர்க்காமல் பார்ப்பனியத்தை எதிர்க்க முடியும்! பார்ப்பன ஜெயா தலைமையிலான பார்ப்

**தி.க.வின் சமூக நீதி லட்சியத்தை பார்ப்பன ஜெயாவே 'நிறைவேற்றுவதால்' பார்ப்பனீயத்தையும் எதிர்க்கும் பணிக்கு பார்ப்பனர்களைத் (அமைப்புக்கு வெளியே) தலைமையாகக் கொள்ள முடியும் என்பதுதானே - வீரமணியின் செயல்பாடுகள் காட்டுவன?**



படிப்பகம்

www.padippakam.com

பன கும்பலை எதிர்க்காமல் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்க்க முடியும்! சூத்திரர் கருவறைக்குள் நுழைவது, அர்ச்சகராவது, இட ஒதுக்கீடு போன்ற திராவிட இயக்கத்தின் உயிர் மூச்சான இலட்சியமான சமூக நீதியை பார்ப்பன ஜெயாவே நிறைவேற்றுவதால் பார்ப்பனியத்தையும் பார்ப்பனர்களையும், பார்ப்பன ஆதிக்கத்தையும் எதிர்க்கும் பணிக்கு பார்ப்பனர்களைத் தலைமையாகக் கொண்டு செயல்பட முடியும் - இது தானே வீரமணியின் செயல்பாடுகள் காட்டுவன! ''அப்படி ஏற்றுச் செயல்பட்டால் அதனை ஏற்கத்தான் முடியுமா?'' என்கிற கேள்வியும் இந்த விடுதலையின் கட்டுரையாளர் தன்னைத் தானே கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்! அவர் தான் வீரமணி பார்ப்பன - பாசிச ஜெயாவின் பாதந்தாங்கும் அந்தச் செயல்பாடுகளை சூடு - சொரணையின்றி எஜமான விசுவாசத்தோடு ஏற்றுக் கொண்டு - சகித்துக் கொண்டு இருக்கிறார்.

வீரமணியும் அவரது ''கொத்தடிமை'' அசுரனும் செய்வதைப் போலன்றி, ''புதிய ஜனநாயகம்'' சொல்-செயல் இரண்டிலுமே தெளிவாகவும், நேர்மையாகவும் இருக்கிறது. பார்ப்பன ஆதிக்கத்தை வீழ்த்தி, பார்ப்பனியத்தை ஒழித்துக் கட்ட வேண்டும். இந்தப்பணியில் பார்ப்பனர்களாகப் பிறந்த சிலரும் பங்கேற்க முடியும். ஏனென்றால் விதிவிலக்கின்றி பார்ப்பனர்கள் அனைவருமே பார்ப்பனியம் காத்து, பார்ப்பன ஆதிக்கம் செலுத்துபவர்கள் அல்ல. பார்ப்பனியமும், பார்ப்பன ஆதிக்கமும் நீடிக்க முடியாது; அவை தூக்கி எறியப்படுவது தவிர்க்க முடியாது என்கிற சமூக மாற்றத்தை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டுள்ள சில பார்ப்பனர்களும் உண்டு. பார்ப்பனியமும், பார்ப்பன ஆதிக்கமும் அநீதியானவை; அவற்றை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று எண்ணும், அதற்காகப் போராட முன்வரும் 'பார்ப்பனர்'களும் உண்டு. ஆகவே, பார்ப்பனியத்தையும், பார்ப்பன ஆதிக்கத்தையும் காத்து, நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்கிற பார்ப்பனர்களை எதிர்த்துப் போராடுவதுதான் அவசியமே தவிர, விதிவிலக்கின்றி எல்லாப் பார்ப்பனர்களுமே எதிரிகள் என்று கருதி எதிர்த்திட வேண்டியதில்லை. இதுதான் புதிய ஜனநாயகத்தின் நிலைப்பாடு.

இதன் அடிப்படையில், பார்ப்பனியத்தையும், பார்ப்பன ஆதிக்கத்தையும் அநீதியானவை என்றும், அவற்றை ஒழித்துக் கட்ட மார்க்சிய - லெனினியப் பாதையையும் ஏற்கக் கூடியவர்கள் பிறப்பால் பார்ப்பனராய் இருந்தாலும், இருப்பால் சூத்திரர்களாகவும் பஞ்சமர்களாகவும் வாழும்போது அவர்களை நமது அமைப்பில் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை என்றே கருதுகிறோம். அவர்களில் மார்க்சிய - லெனினிய சித்தாந்தம், நடைமுறையில் மற்ற பிற தோழர்களுக்கு முன்னோடியாகத் திகழ்பவர்கள் எவரும் இருப்பின், ஜனநாயக முறைப்படி அத்தகையவர்கள் நமது அமைப்பின் தலைமைக்கு வருவதற்குத் தடையேதும் இல்லை; ஏற்போம்.

**''சமூக நீதி வீராங்கனை'' ஜெயலலிதாவின் வேதாகமக் கல்லூரி மூலம் பஞ்சமனும் சூத்திரனும் கருவறைக்குள் நுழைவது எளிதாகிவிடும். அதற்காகப் போராட வேண்டியதில்லை என்பதுதானே வீரமணி சொல்வது?**

இதைத் தெளிவுபடுத்தும் வகையில் பின்வருமாறு புதிய ஜனநாயகமே எழுதியுள்ளது. ''இன்னசாதி பிறப்புடையவர்கள் தலைமைக்கு வரலாம் அல்லது வரக்கூடாது என்ற விதி எதுவும் எமது அமைப்பில் கிடையாது'' - இந்த மேற்கோளை எடுத்துக் காட்டுவதற்கு முன்பாக ''ஒருவேளை புதிய ஜனநாயகம் தாம் ஏற்றுக் கொள்வதற்குத் தயார் என்று அறிவித்தாலும் அறிவிக்கலாம்! அப்படியெனில் முதலாளித்துவத்தை எதிர்ப்பதற்கு டாடா, பிர்லா போன்ற முதலாளிகள் புதிய ஜனநாயத்திற்கு வந்தால் அவர்களையும் ஏற்றுச் செயல்படுவதற்கு புதிய ஜனநாயகம் தயாரா?'' என்று அனுமானமும் கேள்வியும் எழுப்புகிறது விடுதலை. புதிய ஜனநாயகத்தின் நிலைப்பாடு இதுதான் என்று அதிலிருந்து தானே மேற்கோள் காட்டிவிட்டு, அப்புறம் அனுமானம், கேள்வி ஏன்? இது வெறும் விதாண்டாவாதத்திற்கா அல்லது விடுதலையே பீடிகை போட்டதுபோல திரும்பவும் நேரத்தையும் உழைப்பையும் விரயப்படுத்தவா?



ஒரு வர்க்கமாக, சாதியாக, குழுவாக, அமைப்பாக, நிறுவனமாக, ஒரு கூட்டாக எவரும் எமது அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. சோதித்தறியப்பட்ட தனி நபர்களே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். டாடா, பிர்லா போன்ற முதலாளிகள் (மூப்பனார், வாண்டையார் போன்ற பரம்பரை பண்ணைகளோடு வீரமணி, ஜெயலலிதா போன்ற 'திடீர்' பண்ணைகள் தோன்றியிருப்பதைப் போல டாடா, பிர்லாவை விஞ்சிவிட்ட இந்துஜா, அம்பானிகள் தோன்றிருப்பது ஏனோ விடுதலைக்குத் தெரியவில்லை) தமது சொத்துக்களைத் துறந்து பாட்டாளியாக மாறி - வாழ்ந்து காட்டி புதிய ஜனநாயகத்தில் சேர முன்வந்தால் (விடுதலையின் குதர்க்கப்படியேகூட) அப்படிப்பட்டவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் - நமது அமைப்பு விதிப்படி!

மார்க்சிய சித்தாந்தத்தை உருவாக்கிய எங்கெல்ஸ் ஒரு முதலாளித்துவ குடும்பத்துப் பிள்ளையே. மார்க்சும், லெனினும் உடல் உழைப்பில் ஈடுபட்ட பாட்டாளிகள் அல்ல. சீன செஞ்சேனையின் தளபதியாகவும், பின்னர் சீனமக்கள் குடியரசின் தலைவராகவும் திகழ்ந்த சூடே என்பவர், சீனப் புரட்சியின் எதிரி வர்க்கமாகிய யுத்த பிரபுக்களில் ஒருவர்; அவர் சீனக் கம்யூனிஸ்டு கட்சியில் சேருவதற்காக தனது சொத்துக்கள் - படைகளைத் துறந்து, அடிமையாக்கி இருந்த அபினி போதையிலிருந்து விடுபட பல மாதங்கள் கரைக்கே வராமல் கடல்வாசம் புரிந்தார். சீன ஜனநாயகப் புரட்சியின் தலைவர் சன்-யாட்-சென்னின் மனைவியும், பின்னாள் சீனக் குடியரசின் துணைத் தலைவருமான சூங்லிங், சீனாவில் இருந்த நான்கு பெரும் ஏகபோக தரகு முதலாளி குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவர்; அவரது சகோதரி சீனப்புரட்சியின் எதிரியான, சியாங்கே-ஷேக்கின் மனைவி. இந்தியாவில், தமிழகத்தில் முதன் முதலில் தொழிற்சங்கம் நிறுவிய வாடியா ஒரு முதலாளித்துவ குடும்பத்தில் பிறந்தவர். இவை விதிவிலக்கல்ல; இப்படி ஏராளமான உதாரணம் காட்ட முடியும். இவ்வளவு ஏன்? பெரியார் தமிழின விடுதலைக்கும், வி.பி.சிங். இட ஒதுக்கீடு சமூக நீதிக்கும் தலைமை தாங்குவது எப்படி? இதெல்லாம் அறிவு பூர்வமான உணர்வின் வெளிப்பாடு - செயல்பாடு என்பது, குதர்க்கவாதமே தத்துவ ஆயுதமாகக் கொண்ட வீரமணிகளுக்கு தெரியுமா? (தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# பாமர மக்களுக்குப் பட்டை நாமம்
# பகாசுர கம்பெனிகளுக்குப் பட்டுக்கம்பளம்

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் நாட்டை மறு அடகு வைத்து விட்ட நிதியமைச்சர், இந்தியாவுக்கான பட்ஜெட் என்ற பெயரில் ஏகாதிபத்தியங்களின் நலனுக்கான பட்ஜெட்டை இவ்வாண்டும் தயாரித்துள்ளார். அன்னிய இறக்குமதிக்கான வரிகள், சுங்கத் தீர்வை, ஆயத்தீர்வைகளை பெருமளவு குறைத்தும், சில பொருட்களுக்கு சுங்கத் தீர்வையை முற்றாக ரத்து செய்தும் ரூ. 4000 கோடிக்கு மேல் வரிச் சலுகைகளை வாரியிறைத்துள்ளார். இறக்குமதியாகும் ஏகாதிபத்திய உரத்திற்கு மானியம்; உள்நாட்டு உரத்திற்கும், உணவுப் பொருட்களுக்கும் மானியம் குறைப்பு- இதுவொன்றே போதும்; இந்த பட்ஜெட் யாருக்காகத் தயாரிக்கப்பட்டது என்பதை நிரூபித்துக் காட்டுவதற்கு!

பட்ஜெட்டுக்கு முன் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தின் மூலம் ரூ. 4000 கோடியும், ரயில்வே கட்டண உயர்வின் மூலம் ரூ. 1000 கோடியும், உணவுக்கான மானியக் குறைப்பின் மூலம் ரூ. 1200 கோடியும் என நாட்டு மக்களைக் கசக்கிப் பிழிந்து 6200 கோடி ரூபாய் வருவாய் தேடிக் கொண்டபோதிலும், ஏறத்தாழ 6000 கோடி ரூபாய்க்கு பட்ஜெட்டிலே பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இது தவிர, நிதிப் பற்றாக்குறை ஏறத்தாழ 60,000 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. பற்றாக் குறை பட்ஜெட், பணவீக்கத்துக்கும் விலையேற்றத்துக்கும் வழிவகுக்கும் என்பது பொருளாதார அரிச்சுவடி. ஆனால் அப்படியெல்லாம் நடக்காது என்று நம்பச் சொல்கிறார் நிதியமைச்சர்.

உண்மையில் நிதியமைச்சர் மன்மோகன்சிங் தயாரித்திருப்பது பட்ஜெட்டே அல்ல; இந்த பட்ஜெட்டுக்கு முன்னரே உலக வங்கியின் கட்டளைகளை ஆட்சியாளர்கள் செயல்படுத்தத் தொடங்கிவிட்டனர். நாட்டின் சுயாதிபத்தியம், தற்சார்பு மற்றும் அரசியல்-பொருளாதார நலன்களை ஏற்கனவே ஏகாதிபத்திய வல்லரசுகளிடம் மறு அடகு வைத்துவிட்டனர். பட்ஜெட்டுக்கு வெளியே, நாடாளுமன்றத்துக்கோ அமைச்சர்களுக்கோ கூடத் தெரியாமல் இத்தகைய அயோக்கியத்தனங்கள் நடக்கின்றன. எனவே தற்போதைய பட்ஜெட்டை மட்டும் தனியே எடுத்துக் கொண்டு பரிசீலிப்பது அரை வேக்காட்டுத்தனமாகவே இருக்கும். பட்ஜெட்டுக்கு முன்பே கடந்த மூன்றாண்டுகளாக பின்பற்றப்படும் மறுஅடகு வைக்கும் கொள்கைகளையும், பட்ஜெட்டுக்குப் பிறகு ஏற்படப் போகும் கோரமான விளைவுகளையும் தொகுப்பாக பரிசீலிப்பதுதான் ஒருங்கிணைந்த கண்ணோட்டத்தைத் தரும்.

உலக வங்கியின் உத்திரவுக்குக் கோலெடுத்தால் ஆடும் குரங்காக மாறிவிட்ட ஆட்சியாளர்கள், புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் இவற்றைத் தீவிரமாகச் செயல்படுத்தினர். அன்னியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தை (FERA) முடக்கி, நேரடியாக ஏகாதிபத்திய நிறுவனங்கள் எவ்விதத் தடையுமின்றி முதலீடு செய்ய உரிமை அளித்தனர். உரவிலை உயர்த்தப்பட்டது. மானிய விலையில் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவது படிப்படியாக குறைக்கப்பட்டது. நலிவடைந்த அரசு ஆலைகள் நட்டத்தில் இயங்குவதாகக் கூறி அவற்றின் பங்குகள் தனியார் முதலாளிகளுக்கு விற்கப்பட்டன. ரூபாயின் மதிப்பைக் குறைத்ததன் விளைவாக பணவீக்கம் யானைக் காலாக வீங்கி விலைவாசி தாறுமாறாக ஏறியது. பற்றாக்குறையை ஈடுகட்ட மானியங்களைக் குறைப்பது என்ற பெயரில் ரேஷன் கடை மூலம் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு குறைக்கப்பட்டது. அவற்றின் விலைகள் உயர்த்தப்பட்டன. கல்வி-சுகாதாரம்-நல்வாழ்வுத் திட்டங்கள் சுருக்கப்பட்டது. கல்விக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. ஏற்கனவே தாறுமாறாக ஏறிவிட்ட விலைவாசியால் மக்கள் பரிதவித்துக் கொண்டிருந்தபோது, அடுத்தடுத்து பெட்ரோல், மின்சாரம், ரயில்-பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன.



இவையெல்லாம் இந்தியப் பொருளாதாரத்தைச் சீரமைக்கும் நடவடிக்கைகளாகச் சித்தரிக்கப்பட்டன. பொருளாதாரச் சுமைகள் தற்காலிகமானவை; நாட்டு நலன் கருதி மக்கள் இவற்றை சகித்துக் கொள்ள வேண்டும் என்று ஆட்சியாளர்கள் உபதேசித்தனர். இவ்வளவுக்குப் பிறகும் கடந்த மூன்றாண்டுகளில் புதிய பொருளாதாரக் கொள்கை சாதித்தது என்ன?


1990-91 ஐ விட இப்போது நிதிப் பற்றாக்குறை ரூ. 13919 கோடி அதிகரித்துள்ளது. பணவீக்கம் 8% லிருந்து இன்னமும் குறையவில்லை. 5% தொழில் துறை வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்டு 1.5% அளவைக் கூட இன்னமும் தாண்டவில்லை. பட்ஜெட்டுக்கு முந்தைய விலையேற்றம் மட்டும் கடந்த மூன்றாண்டுகளில் ரூ. 500 கோடியைத் தாண்டிவிட்டது. அனைத்து பொருட்களும் 50% முதல் 120% வரை விலை உயர்ந்துள்ளது.

கடந்த ஈராண்டுகளில் சுங்கத் தீர்வை 50% அளவுக்கு குறைக்கப்பட்டதன் விளைவாக, அன்னிய நுகர் பொருட்கள் மலையெனக் குவியத் தொடங்கிவிட்டது. மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை; ஆனால் கோகோ-கோலாவும் பெப்சியும் குவிந்து கிடக்கிறது. நாட்டின் பெரும்பாலான மக்களால் 10 ரூபாய் கொடுத்து ஆட்டா மாவு வாங்க முடியவில்லை; ஆனால் மெக்டொனால்டு கேக்குகள் ரூ. 100க்கு தாராளமாகக் கிடைக்கிறது.

அன்னியக் கடனோ 2,70,000 கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது. நாளொன்றுக்கு சராசரியாக 300 கோடி ரூபாய் அளவுக்கு அந்நியப் பணம் இந்தியாவில் பாய்கிறது. இந்தியாவின் பார்லே நிறுவனத்தை அமெரிக்காவின் கோகோ-கோலா நிறுவனமும், டாம்கோ நிறுவனத்தை யுனிலீவரும், காத்ரெஜ் நிறுவனத்தை ப்ராக்டர் அண்டு காம்பிள் எனும் அமெரிக்க நிறுவனமும் ஏற்கனவே கைப்பற்றி விட்டன. நலிவடைந்த என்.டி.சி. மில்கள் மூடப்பட்டு, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வீதியில் வீசியெறியப்பட்டு வருகின்றனர். நூல் விலையேற்றம், உற்பத்தித் தேக்கம் காரணமாக கைத்தறி நெசவாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் ஆந்திராவில் 70 பேர் பட்டினியால் மாண்டு போயுள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com




இப்படிக் கோரமான விளைவுகளை ஏற்படுத்தி புதிய பொருளாதாரக் கொள்கை படுதோல்வி அடைந்த போதிலும், மீண்டும் அதையே புதுவேகம், புதுமோகத்தோடு காங்கிரசு துரோகிகள் செயல்படுத்தக் கிளம்பி விட்டனர். அதன் வெளிப்பாடாகவே தற்போதைய பட்ஜெட் அமைந்துள்ளது. நாட்டை மறுகாலனியாக்கும் இக் கொள்கையின் தோல்வியை மூடி மறைக்க நாடாளுமன்றத்திலேயே நிதியமைச்சர் கூசாமல் புளுகியுள்ளார்.

கடந்த மூன்றாண்டுகளாகப் பின்பற்றிவரும் கொள்கையின் விளைவாக, அந்நியச் செலாவணி இருப்பு ரூ. 39,000 கோடியாக உயர்ந்துள்ளது என்று பெருமையாக நிதியமைச்சர் தனது பட்ஜெட் உரையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இது நமது நாட்டின் ஏற்றுமதியிலிருந்து கிடைத்த உபரி அல்ல. உலகவங்கி மற்றும் சர்வதேச கடன் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட தொகையாகும். இன்றைய நிலையில் நமது நாட்டின் மொத்த நிதியில் 38% அன்னியக் கடன்கள் மூலம் பெறப்பட்டதாகும். இது 1995-96ல் 50% க்கு மேல் உயரும். இந்நிலையில் ஏற்றுமதிமூலம் கிடைக்கும் அற்பஅளவு அந்நியச் செலாவணியும் கடனையும் வட்டியையும் கட்டவே போய்விடும். அப்புறம் உள்நாட்டுத் தேவைக்கு எதையும் இறக்குமதி செய்யவே முடியாத நிலை ஏற்பட்டு மீண்டும் ஏகாதிபத்தியங்களிடம் கடன் வாங்க நேரிடும். அது நாட்டை திவாலாக்கிவிடும்.

1993-94-ம் நிதியாண்டின் பட்ஜெட்டை ஒப்பிடும் போது தற்போதைய பட்ஜெட்டின் நிதிப்பற்றாக்குறை 11% ஆகும். ஆனால் நிதியமைச்சரோ, 1993-94-ம் ஆண்டின் திருத்தப்பட்ட பட்ஜெட்டை ஒப்பிட்டு, நிதிப்பற்றாக்குறை 7.3% தான் என்று மாய்மாலம் செய்துள்ளார். உண்மையில் நிதிப் பற்றாக்குறையானது 70,000 கோடி ரூபாயையும் தாண்டிவிடும் என்று முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களே அறுதியிடுகின்றனர். இதே போல 1993-94-ம் ஆண்டின் வளர்ச்சி பற்றி பொய்யான புள்ளி விபரங்களை நிதியமைச்சர் தனது பட்ஜெட் உரையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், உண்மையான விவரங்கள் அடுத்த ஆண்டின் துவக்கத்தில்தான் கிடைக்கும்.

அடுத்ததாக, கிராமப்புற வளர்ச்சிக்காக கடந்த ஆண்டை விட 40% கூடுதல் ஒதுக்கீடு செய்துள்ளதாக நிதியமைச்சர் கூறுவது கடைந்தெடுத்த மோசடியாகும். உண்மையில் 1991-92 ல் எந்த அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அதே அளவுக்குத்தான் தற்போதைய பட்ஜெட்டிலும் திட்ட முதலீடுகள் உள்ளன. இடைப்பட்ட காலத்தில் விலைவாசி 50% க்கு மேல் உயர்ந்து விட்டதால் ஒதுக்கீடு அதிகரித்தாலும் பயனேதும் இருக்காது. விவசாயத்துக்கான புதிய பாசனத்துக்கு பட்ஜெட்டில் மூலதன ஒதுக்கீடோ ஊக்குவிப்போ அறவே இல்லை. அதே சமயம், விவசாயிகள் நேரடியாக வெளிநாடுகளுக்கு விவசாய உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பணப்பயிர் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிப்பது; உணவு தானியம் உள்ளிட்ட அடிப்படையான விவசாயத்தைப் புறக்கணிப்பது என்கிற கொள்கைதான் தற்போதைய பட்ஜெட்டிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருரூபாய் ஒதுக்கீடு செய்தால் அதில் 6 பைசாதான் கிராமப் புறங்களைச் சென்றடைகிறது; மீதி 94 பைசாவை ஓட்டுப் பொறுக்கிகள், அதிகாரிகள், காண்டிராக்டர்கள் விழுங்கிவிடுகிறார்கள் என்று மாண்டுபோன பாசிசப் பிரதமர் ராஜீவே ஒப்புக் கொண்டுள்ளார். தற்போதைய பட்ஜெட்டிலும் கிராமப் புறங்களும் விவசாயமும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் போண்டியாகி பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படும் அபாயமே அதிகரித்துள்ளது. 1991-ஐ விட 1993ல் தனிநபருக்கான உணவுப் பங்கு 18% குறைந்து போயுள்ளது. கடந்த ஈராண்டுகளில் பருவமழை சாதகமாக இருந்ததால் உணவுப் பஞ்சம் ஏற்படவில்லை. ஆனால் வருமாண்டில் அதற்கான உத்திரவாதம் ஏதுமில்லை.

**புதிய பொருளாதாரக் கொள்கை படுதோல்வி அடைந்த பின்னரும் நாட்டை மறுகாலனியாக்கும் புதுவேகம் - புதுமோகத்தோடு மீண்டும் அதே பாதையில் காங்கிரசு கும்பல் பட்ஜெட்டைத் தயாரித்துள்ளது.**

கடுமையான நெருக்கடிக்கு மத்தியிலும், அரசுத் துறை நிறுவனங்களும், நிதியமைப்புகளும் கடந்த சில ஆண்டுகளில் கணிசமான லாபம் ஈட்டிய போதிலும், தற்போதைய பட்ஜெட்டில் அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்



படிப்பகம்

www.padippakam.com

என. தனியாருக்கு அவற்றைத் தாரை வார்க்கும் நோக்கத்தோடு, அவற்றின் பங்குகளை விற்று நிதிப் பற்றாக்கு றையை ஈடுகட்டப் போவதாக அரசு அறி வித்துள்ளது. இதன் விளைவாக அரசு நிறுவனங்களில் தொழிலாளர்கள் வேலையிழந்து, வேலையில்லாத் திண் டாட்டம் மேலும் அதிகரிக்கவே செய்யும்.

இத்தனையும் போதாதென்று, அடுத்த மூன்றாண்டுகளில் 1000 கோடி ரூபாய் அளவுக்கு அந்நியக் கடனுக்கு வட்டி கட்ட வேண்டும். தற்போது ''காட்'' ஒப்பந்தத்தில் கையெழுத்திட் டுள்ள நிலையில், ஏற்றுமதிக்கான வாய்ப்பே இல்லாமல் போய் இந்தியா திவாலாகி விடும் என்று முதலாளித்துவப் பொருளாதார வாதிகளே அஞ்சுகின்ற னர்.

**அடுத்த மூன்றாண்டுகளில் 1000 கோடி ரூபாய் அந்நியக் கடனுக்கு வட்டி கட்ட வேண்டும்; தற்போதைய "காட்" ஒப்பந்தப்படி ஏற்றுமதிக்கான வாய்ப்பே இல்லாமல் போய் இந்தியப் பொருளாதாரம் திவாலாகுவது தான் நடக்கும்.**

இவையனைத்தும் பொருளாதாரத் தின் மீது அரசு தனது கட்டுப்பாடுகள் அனைத்தையும் இழந்து, சீரழிந்து போய் விட்டதையே காட்டுகின்றன. மொத்தத் தில் திட்டமிடுவதே கைவிடப்படுகிறது; அரசுத்துறையும் விவசாயமும் கைகழு வப்படுகிறது; ஏகாதிபத்திய ஆதிக்கமும் கடனும் பெருகுகிறது; இந்தியாவின் தலைவிதி ஏகாதிபத்திய வல்லரசுகளிடம் சிக்கியுள்ள நிலையில், பட்ஜெட் என்பது வெறும் சடங்குத்தனமான காகித அறிக்கை என்பது மீண்டும் நிரூபணமாகி யுள்ளது. ஆனாலும் நிதியமைச்சர் இந்த பட்ஜெட் மூலம் மாபெரும் சாதனை புரிந் துள்ளதாக ஏகாதிபத்தியவாதிகள் புகழா ரம் சூட்டுகின்றனர். உண்மைதான்! பத விக்கு வந்த மூன்றே ஆண்டுகளில் இந்தி யப் பொருளாதாரத்தைத் திவாலாக்கி, பாதாளத்தில் தள்ளியிருக்கிறாரே, இது 'சாதனை' அல்லாமல் வேறென்னவாம்?!

♦குமார்

## மாயாவதி விவகாரம்:
# சாத்தானின் மகனும் சனாதன 'தேசிய'வாதிகளும்

இப்போது உத்திரப்பிரதே சத்தை ஆளும் இரு கூட்டணிக் கட்சிக ளுள் ஒன்று, பகுஜன் சமாஜ் கட்சி. இதன் அனைத்திந்தியப் பொதுச் செயலாளர் மாயாவதி. இந்த ''மாயாவதி நமது தேசப் பிதா மகாத்மா காந்தியை சாத்தானின் மகன் என்று கூறி அவமானப்படுத்தி விட் டார்'' என்று குற்றஞ்சாட்டி, வானத்துக் கும் பூமிக்கும் குதிக்கின்றன, காங்கிரசு, பாரதீய ஜனதா, ஜனதாதளம், போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் முதல் சுப்பிரம ணியசுவாமி, சந்திரசேகர், போன்றவர்க ளின் பெயர் பலகைக் கட்சிகள் வரை.

இதே பகுஜன் சமாஜ் கட்சியின், குறிப்பாக மாயாவதியின் நாடாளுமன்ற எம்.பி. பதவி ஓட்டின் தயவில் பிரதம ராகி, ஒரு அற்பகாலத்துக்கு அதில் ஒட் டிக் கொண்டிருந்த சந்திரசேகர், ''மாயா வதி ஒரு அரசியல் தற்குறி'' என்று இப் போது ஏசுகிறார். அவரை அண்டிப் பதவி பெற்ற அரசியல் தரகன் சு.சுவாமி, ''மாயாவதியை தடாச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும்'' என்று கூச்சல் போடுகிறார். இந்துவெறியர்களின் தாக் குதலில் இருந்து தப்பிக்க தலித்துக்களின் தயவை நாடிவந்த இசுலாமிய மதவாதி சையத் சகாபுதீன், ''மாயாவதியின் குற் றத்துக்கு சாத்தியமான தண்டனை வழங்க வேண்டும்'' என்று கோரி நாடா ளுமன்றத்தில் பிரச்சினையாக்குகிறார். போலிக் கம்யூனிஸ்டுகள் தங்கள் பங் குக்கு மாயாவதி மீது கண்டனக் கணை தொடுக்கிறார்கள்.

இதுவரை கன்ஷிராம், மாயாவதி முதலிய ஐந்து பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி.க்களின் தயவில் ஊசலாடிக் கொண்டிருந்தது மத்திய காங்கிரசு ஆட்சி. இப்போது, ''மாயாவதி மீது குற்ற நடவடிக்கை எடுக்கவில்லையானால் உ.பி. முலயம்சிங் ஆட்சியைக் கலைக்க வேண்டும்'' என்று மாநில காங்கிரசு நிர் பந்திக்கிறது; அதற்காக மாநிலந்தழுவிய உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகி றது.

**"காந்தி ஒரு மனுவாதி. வருணாசிரம சாதி அமைப்பின் உறுதியான ஆதரவாளர். தலித்துகள் அரிசனங்கள் என்றால் காந்தி உட்பட மேல்சாதிக்காரர்கள் என்ன சாத்தான்களின் பிள்ளைகளா?" – மாயாவதி**

நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சி களுமே மனுதர்மக் கட்சிகள் (மனுவாதி கள்)தாம் என்று சாடும் பகுஜன் சமாஜ் கட்சி, தனது கூட்டணி அரசின் முதல்வர் முலயம்சிங் மட்டும் மனுவாதி அல்ல; பகுஜன் சமாஜ்வாதி என்று நற்சான்று வழங்கியுள்ளது. அப்படி பகுஜன் சமாஜ் வாதியாகப் புது அவதாரம் எடுத்துவிட்ட முலயம்சிங் கூட ''காந்தியைப் பற்றி மாயாவதி கூறிய கருத்துக்கள் சரிதான்'' என்று ஏற்று ஆதரிக்கவில்லை. ''எனது அரசு காந்திஜியின் இலட்சியங்களைப் பின்பற்றுகிறது; காந்திஜியைப் பற்றி கருத்துக் கூற மாயாவதிக்கு ஜனநாயக உரிமை உண்டு; நான் என்ன செய்யமுடி யும்?'' என்று கூறி மழுப்புகிறார் முலயம் சிங். இதுவரை லோகியா, சரண்சிங், ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆகியோர் தாம் தமது அரசியல் குருமார்கள் என்று கூறிவந்த முலயம்சிங் இப்போது தவ றாது காந்தியையும் அம்பேத்காரையும் கூட சேர்த்துக் கொள்கிறார்.

இப்படி ''தேசிய''வாதிகள் அத் தனை பேரும் ஆத்திரம் கொள்ளும் அள வுக்கு காந்தியைப் பற்றி மாயாவதி பொய்யான அவதூறோ, இழிவான வசவு எதையோ கூறிவிட்டாரா? இல்லை. மனுவாதமும் காந்தியவாதமும் ஒழித்துக் கட்டப்பட வேண்டும்; அம்பேத்கார் வாதம் வரவேண்டும் என்கிற தனது வழக்கமான பிரச்சாரத்தின் ஒரு பகுதியா கப் பின்வருமாறு மாயாவதி பேசியுள் ளார். ''காந்தி ஒரு மனுவாதி. வருணாசி ரம சாதி அமைப்பின் உறுதியான ஆதர வாளர். தாழ்த்தப்பட்ட தலித்துக்களை அரிசனங்கள் என்று சொன்னதன் மூலம் சாதியக் கட்டுமானத்தைக் கெட்டிப் படுத் தவே செய்தார். தலித்துக்கள் அரிசனங் கள் என்றால் காந்தி உட்பட மேல்சாதிக் காரர்கள் என்ன சாத்தான்களின் பிள்ளை களா?'' என்று நியாயமாகத்தான் கேட் டுள்ளார்.

இதையே, காந்தியை இழிவுபடுத்தி விட்டதாகவும், மாயாவதி திருந்த மறுக்கி றார், மன்னிப்புக் கேட்க மறுக்கிறார் என் றும் விஷத்தைக் கக்குகிறார், நெருப்பை உமிழ்கிறார் என்றும் வெறியேற்றும் வண்



படிப்பகம்

www.padippakam.com



மாயாவதி

ணம் எழுதுகின்றன, மனுவாதிகள் என்று மாயாவதியே குறிப்பிடும் பார்ப்பன ஏடுகள். இந்துமதவெறி பாசிச ஆபாசப் பெண்சாமியார்களான சாத்வி ரிதம்பரா, உமாபாரதியுடன் மாயாவதியை ஒப்பிட்டு இழிவுபடுத்தியும், பகுஜன் சமாஜ் கட்சி - சமாஜ்வாதி கட்சி கூட்டணியைப் பிளவுபடுத்தத் தூண்டியும் அந்த ஏடுகள் எழுதுகின்றன. ஆனால், காந்தியை தேசப் பிதாவாக ஏற்கமுடியாது என்று பாரதிய ஜனதாவின் டில்லி முதல்வர், மதன்லால் குரானா கூறியபோதும், காந்தியை சுட்டுக் கொன்றதை கோட்சேயின் தம்பி நியாயப்படுத்திய போதும் இதே ஏடுகள் வெறும் முணுமுணுப்போடு அடங்கிவிட்டன.

மாயாவதி இந்தத் தாக்குதல்களுக்குப் பணிந்துவிடவில்லைதான்; என்றாலும், காந்தியின் யோக்கியதைகளை நேரடியாக அம்பலப்படுத்துவதற்கு அஞ்சி, நாடாளுமன்ற அரசியல்வாதிக்கே உள்ளவாறு அம்பேத்காருக்குப் பின்னே ஒளிந்து கொள்ள முயலுகிறார். ''தலித்துக்களின் எதிரி காந்தி என்று நான் கூறவில்லை; தலித்களின் எதிர்ப்பாளர் என்றுதான் சொன்னேன்; இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. காந்தியைப் பற்றி நான் சொன்னவை எல்லாம் அம்பேத்காரும், கெய்குவாடும் கூறியவைதாம். பார்ப்பனர்கள் பெரும்பான்மையாக இருந்த மராட்டிய அமைச்சரவை, தலித்துக்களை 'அரிசனங்கள்' என்றழைக்கும் சதிகாரத் தீர்மானத்தை நிறைவேற்றிய போது எங்கள் தலைவர்கள் கூறியதைத்தான் நான் சொன்னேன். காந்தி எப்போதுமே தலித்துக்களின் நண்பர் அல்ல; தலித்துக்களுக்காக அவர் எதுவுமே செய்ததில்லை. தலித்துக்களுக்காக அம்பேத்கார் உரிமைகள் பெற்றுத்தந்த போதெல்லாம் காந்தி அவற்றை எதிர்த்தார். 1932 - இல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று தனித்தொகுதி உரிமை கோரி,பிரிட்டிஷார் அதை ஏற்றனர்; ஆனால் அதை எதிர்த்து காந்தி சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார்; அம்பேத்கார் சமரசம் செய்து கொள்ளும்படி நிர்பந்தித்து பூனா ஒப்பந்தத்தைத் திணித்தார். தலித்துக்கள் அப்படி உரிமை பெற்றால் இந்துக்களை சார்ந்து நிற்பதில் இருந்து விடுதலை பெற்று விடுவார்கள் என்று காந்தி அஞ்சியதே இதற்குக் காரணம்'' என்கிறார், மாயாவதி.

மாயாவதி எழுப்பும் கேள்விகள், கருத்துகளுக்குப் பதில் கூறமுடியாத மனுதர்மவாதிகள், ''நமது தேசப் பிதாவையே குறை கூறுவதா?'' ''மகாத்துமா காந்தியையே அவமானப்படுத்துவதா'' ''மாயாவதியை தண்டியுங்கள் - சிறையில் தள்ளுங்கள்'' என்று கூச்சல் போடுகின்றனர். ''ஒரு தலித் என்பதற்காக ஜெகஜீவன்ராம், சம்பூர்ணானந்தா திறந்த சிலைக்கு பாலும், கங்கை நீரும் ஊற்றித் தீட்டுக் கழித்த காசி பார்ப்பனப் பண்டிதர்களை ஏன் தண்டிக்கவில்லை'' என்று கேட்கிறார் மாயாவதி! சரிதானே.

''தலித் என்பதற்காக ஜெகஜீவன்ராம் திறந்த சம்பூர்ணானந்தா சிலைக்கு தீட்டுக் கழித்த காசி பார்ப்பனர்களை ஏன் தண்டிக்கவில்லை''
— மாயாவதி

தேசத்துரோகியான காந்தி, மனுவாதிதான்! வருணாசிரம சனாதன, சாதிய அமைப்பைத் தூக்கிப்பிடிக்கவும், மீண்டும் உயிர்ப்பிக்கவும் அவர் பாடுபட்டதற்கு ஏராளமான சான்றுகள் காட்டமுடியும். ஆங்கிலக் கல்வி எதிர்ப்பு என்கிற பெயரில் வா.வே.சு. அய்யர் சேரன்மாதேவியில் துவங்கிய காங்கிரசு பள்ளியில் குருகுலமுறையும், வருணசிரமப்படி தீண்டாமையும் கடைப்பிடித்ததை பெரியார் ஈ.வெ.ரா. கடுமையாக எதிர்த்தார். இதற்கு சமரசம் செய்ய வந்த காந்தி பார்ப்பன கும்பலுக்கு ஆதரவாக நின்று வருணாசிரம சாதிய தீண்டாமை அமைப்பு தொடர்வதை ஆதரித்தார். அப்போதே காந்தியின் வருணாசிரம சாதிய வெறியை பெரியார் அம்பலப்படுத்தி எதிர்த்தார். பார்ப்பன - பனியா ஆளும் கும்பலின் அரசியல் தரகனாக இருந்தார் காந்தி என்பதை நிரூபிக்கும் இப்படிபட்ட சான்றுகளை மக்களிடம் எடுத்துச் சென்று அம்பலப்படுத்திவிடக் கூடாது என்பதற்காகக் கொண்டுவரப்பட்டதுதான் ''தேசிய சின்னங்கள் அவமான தடுப்புச் சட்டம்''! ஆள்தூக்கித் ''தடா'' சட்டத்தைப் போன்றதுதான் இந்த வாய்ப்பூட்டுச் சட்டம். ''தேசீய கீதம்'',''காந்தி'' ஆகியவற்றை ''தேசிய சின்னங்களா''க அறிவித்து இத்துரோகத்தின் சின்னங்களை விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதாக வைத்து 'புனித'த்தை செயற்கையாகக் காத்து வருகிறார்கள், இந்த சனாதன வாதிகள்.

O குணசேகரன்



படிப்பகம்

www.padippakam.com

# இந்துமத வெறியர்களின் வக்கிரமும் மிரட்டலும்

திருச்சி - சிறீரங்கம் கருவறை நுழைவுப் போராட்டத்தை மக்கள் கலை இலக்கிய கழகத்தினர் நடத்தியதிலிருந்து தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பலின் முதலாவது முக்கிய எதிரிகளாகி விட்டனர். பா.ஜ.க., இந்து முன்னணியினர் தமது கூட்டங்கள், துண்டு பிரசுரங்கள், பத்திரிக்கைகளில் (விஜயபாரதம், அந்தணமுரசு, ஹிந்துகுரல்) எல்லாம் ம.க.இ.க.வை கடுமையாகத் தாக்கிப் பேசவும் எழுதவும் தவறுவதில்லை. அதேபோல் ''ஆழ்வார்களின் தமிழ் பாடல்களால் நடத்தப்படும் அரையர் சேவை ஸ்ரீரங்கத்தில் உண்டு'', ''அந்தணர், வேறு ஜாதி அர்ச்சகர், பூஜாரி அவரவர் முறை உள்ள ஆலயத்தில் மட்டுமே கருவறையில் நுழையவும் அபிஷேக ஆராதனை செய்யவும் முடியும். இதில் ஜாதி பிரச்சினையோ, உயர்வு தாழ்வோ இல்லை'', ''முறையான பயிற்சி பெற்ற அனைத்து சமூகத்தினரும் அர்ச்சகராக வழிகாட்டுகிறது தமிழக அரசின் புதிய திட்டம். இதையும் ஏற்று நடைமுறைபடுத்தி வருகிறது இந்து சமுதாயம்'' என்றெல்லாம் தன்னிலை விளக்கம் கொடுக்கவும் தவறுவதில்லை. கிறிஸ்து, முஸ்லீம் மதங்களில் உள்ள பிற்போக்குத் தனங்களை - முறைகளைச் சுட்டிக்காட்டி சர்ச், மசூதியில் நுழையத் தயாரா என்ற அடிப்படையில் கேள்வி கேட்டு ''புதிய ஜனநாயகம்'' கேள்வி-பதில் பகுதிக்கு அடிக்கடி மிரட்டலோடு இணைந்த கேள்விகள் வருகின்றன.

''நக்சலைட்டுகள், தேச விரோதிகள், சமூக விரோதிகள், ரத்தக் காட்டேரிகள், இந்து விரோதிகள், அந்நிய நாடுகளின் - கிறித்துவர், முஸ்லீம்களின் - கைக்கூலிகள்'' என்பவைதான் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் தலைமை முதல் அணிகள் வரை வைக்கும், குறிப்பிட முடியும் நாகரீகமான வார்த்தைகள், மற்றவை அனைத்தும் ''வேசியின் மகன், துலுக்கனுக்கு தாயையும் தங்கையையும் கூட்டிக் கொடுப்பவன்'' என்று பொருள்படும்படியான எழுத முடியாத, ''செக்ஸ்'' பத்திரிக்கைகாரன்களும் கற்பனை செய்து பார்க்க முடியாத வசவுகளும் வாசகங்களும் தான். குறிப்பாக ம.க.இ.க. கோவை கிளைச் செயலாளர் மணிவண்ணன் அவர்களுக்கு அடிக்கடி இத்தகைய கடிதங்கள் ''உயிர்மேல் ஆசையிருந்தால் உன் செயல்பாட்டை நிறுத்திக் கொள்'' என்ற கொலை மிரட்டலோடு வருகின்றன. இதில் ஒரு கடிதத்தை இங்கே சுருக்கிப் பிரசுரிக்கிறோம்; நாடு மறுகாலனியாவதையும் இந்துமதவெறியையும் எதிர்த்து மார்ச் 28-ல் மதுரையில் நடக்கும் பு.மா.இ.மு. கருத்தரங்கு பிரசுரம் விநியோகித்ததற்காக வந்த எதிர்ப்பு கடிதம் இது.

''நண்பா மணிவண்ணா நீ இப்போ ஆரம்பிச்சுருக்கியே மாணவர் இளைஞர் முன்னணி, அதைப் பார்த்து சந்தோசப்படுகிறோம். மதச்சார்பற்ற நாடாக்க வேணும்னு சொல்றியே அதையும் பார்த்து சந்தோசப்படுகிறோம். ஆனா இந்துவெறி பாசிஸ்டுகளை ஒழித்துகட்ட வேண்டும்னு சொன்னியே அப்ப எனக்கு ஒன்று தோணுது. ஒன்று நீ முசுலீமா அல்லது கிறிஸ்தவனா இருக்கனும். இல்லேனா அவனுக கிட்ட பணம் வாங்கிட்டு இப்படி கட்சி ஆரம்பிச்சுருக்கோனும்.

''உலகத்துல நான்கில் மூன்று பங்கு முஸ்லீம், கிறிஸ்துவர்கள், ஆனா இந்த இந்துக்கள் ஒரே ஒரு பங்குதான் இருக்காங்க. இந்துக்களுக்கு சொந்த நாடுனு இந்தியா மட்டும்தான் இருக்கு. நீ உன்னோட கட்சியப் பெருக்கி இந்தியா லெவல்ல வந்து காங்கிரசையும் ஜெயாவையும் தொரத்திட்டு ஆட்சிக்கு வந்துடறேனு வச்சுக்கோ நீ எழுதியிருக்கிறபடி இந்துமதத்தை அழிச்சு ஒழிச்சுடுவே. அப்போ கிறிஸ்துவர்களும் முஸ்லீம்களும் பெரும்பான்மையாகி நாளடைவில் இந்தியாவை ஆளுவாங்க. சந்தேகம் இல்ல. அப்போ இந்துமதம் மியூசியத்தில் வைக்கும் பார்வைப் பொருளாகப் போயிடும். இந்துக்கள்ல எவன் கடைசியாகச் சாகிறானோ அவனை ஐஸ் பெட்டியில வச்சு இவன்தான் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாள் வாழ்ந்த இந்து என்பார்கள், விஞ்ஞானிகள் எல்லாம் இந்துக்கள் பற்றி அறிய அகழ்வாராய்ச்சியில் இறங்கீடுவாங்க. நாளடைவில் இந்த நாட்டுக்கு இந்தியாங்குற பேர் போய், காலிஸ்தான், பாகிஸ்தான் என்றோ கிறிஸ்தவன், முஸ்லீம் பேரோ நாட்டுக்கு வச்சுருவாங்க.



''அட மணிவண்ணா இப்ப உன்ன எடுத்துக்க; நீ ஒரு இந்து. நீ சொல்றபடி மதச்சார்பற்ற ஆட்சி இங்கு வந்துடுச்சுன்னு வச்சுக்கோ, வெளிநாட்டுல இருந்து முஸ்லிம், கிறிஸ்தவர்கள்தான் வருவாங்க. சவுதி அரேபியாவிலிருந்து ஒரு முஸ்லீம் வந்து இங்க பொண்ணு கேட்பான். இங்க வர்ற ''துலுக்கன்'' உன் பக்கத்து வீட்டுல தங்கராருன்னு வச்சுக்க. அப்ப உங்க அம்மாவை படுக்க கூப்பிடுவான். உன் அக்காவை பொண்ணு கேட்பான். நீ சம்மதிப்பியா? ஏன்னா அவன் நாட்டுல இது சகஜம். ஆயிரத்தெட்டு பொண்டாட்டி கட்டுவான். நிமிஷத்துக்கு நிமிஷம் டைவர்ஸ் பண்ணுவான்க. ஒரு வேளை நீ இதுக்கு சம்மதிச்சாலும் சம்மதிப்ப. முஸ்லீமா மாறுனாவும் மாறுவ.

''ஆனா நாம இந்துக்கள். ஆயிரம் அலும்பு செஞ்சாலும்(?) ஒருவனுக்கு ஒருத்திங்கர கட்டுப்பாட்டை கடைபிடிக்கிறோம். 'மாற்றான் மனைவியைப் பார்க்கக் கூடாது', 'சிறியவர்களை சகோதரியாக பாவிக்க வேண்டும்' என்கிற தாரக மந்திரம் இந்துக்களின் கட்டுப்பாடு. இது தாண்டா இந்துமதத்துக்கும் இதர மதத்துக்கும் உள்ள வேறுபாடு. மணிவண்ணா உன்னோட நெனப்புல இந்திய மதச்சார்பற்ற நாடு ஆச்சுன்னா 'பைஜாமாவுக்கும் பட்டுபுடவைக்கும்' வித்தியாசம் இல்லாம போயிடும்.

''இந்துமதத்தை ஒழிக்கனும்னு இந்த நோட்டீசுல முக்கியமா நீ சொல்றது மாதிரி தோணுது. அப்போ நிச்சயமா நீங்கள் வெளிநாட்டின் கைக்கூலிகள்தான். இந்த நாட்டை துண்டாட நினைக்கும் பசுத்தோல் போர்த்திய புலிகள். மதச்சார்பற்ற நாடு வேண்டும் எனச் சொல்லி புனித இந்து மதத்தை - இந்து பாசிஸ்டுகளை அழிக்கனும்னு நினைச்சு அழகான மணிவண்ணன் என்ற மனித காவியத்தை நீயே அழிச்சுக்காதே''.

மேற்படி கடிதம் பெயர், முகவரி இல்லாமல் வழக்கம் போலவே மொட்டையாகத் தான் வந்தது. ஆர்.எஸ்.எஸ். கும்பல் திரும்ப திரும்பக் கூறும் வாதங்கள்தான் இதில் உள்ளன. எஞ்சியவை அவர்கள் இத்தொண்டருக்கு ஊட்டியிருக்கும் இந்துவெறி நஞ்சே. அதை வாந்தியெடுத்திருக்கிறார். இக்கும்பலின் வாதங்கள், குதர்க்கங்களுக்கு எல்லாம் புதிய ஜனநாயகத்திலும் ம.க.இ.க.வின் பொதுக்கூட்டங்கள், துண்டு பிரசுரங்கள், ஒலிப் பேழைகளிலும் தக்க பதிலடி கொடுத்துள்ளோம். அதேபோல் திருச்சி, மதுரை, சென்னை, ராமேசுவரம் பகுதிகளில் நம்மோடு மோதி வாங்கிக் கட்டிக் கொண்டும் போயுள்ளார்கள். இருந்தாலும் மதவெறி அவர்களை சும்மா இருக்க விடாது. விட்டில் பூச்சிபோல் தீயோடு மோதியழிவது இந்துமதவெறியர்களின் 'தலையெழுத்தோ' என்னவோ?!



படிப்பகம்

www.padippakam.com

# வறட்சியும் பட்டினிச்சாவும் நிரந்தரமானது ஏன்?

**ஒரிசா, பீகாரின் கடுமையான வறட்சியும் தீரவில்லை; தீவிரமாகிறது; பல மாநிலங்களுக்குப் பரவுகிறது. ஆள்பவர்களும் இவர்களை ஆட்டுவிப்பவர்களும் இந்தியாவை சோமாலியாவாக மாற்றி வருகிறார்கள்.**

விவசாயிகள், ஆதிவாசிகள், நெசவாளர்கள், சிறுதொழிலாளர்கள், கைவினைஞர்கள், மீனவர்கள், கூலி உழைப்பாளிகள் சொந்த பூமியில் வாழ வழியின்றி பஞ்சம் பிழைக்கச் செல்வது இன்று பரவலாக நடக்கிறது. ஒரிசா - கலகாந்தி, கோராபுட், பீகார் - பாலாமு மாவட்டங்களில் விவசாயிகளும் பழங்குடி மக்களும் கடுமையான வறட்சியால் பட்டினிச் சாவுக்குப் பலியானார்கள். சத்துக் குறைவால் நோய் வாய்ப்பட்டு குழந்தைகள் துன்பப்படுவதைக் காணச் சகிக்காமல் கொத்தடிமைகளாகப் போவது; பெண்களை அற்பத் தொகைக்காக விற்பது போன்ற அவலம் நடக்கிறது. ஆந்திரா - குண்டூர், பிரகாசம் மாவட்டங்களில் நெசவாளர்கள் பட்டினிச் சாவுக்குப் பலியாவதும் தற்கொலை செய்து கொள்வதும் அடிக்கடி நிகழ்கிறது. ராஜஸ்தான் - பார்மெர், மத்தியப் பிரதேசம் - சர்குஜா, திரிபுரா - அதரமுரா, மஹாராஷ்டிரம் - தானே, குஜராத் - பாச்செள, தமிழ்நாடு - ராமநாதபுரம் என இந்தியாவெங்கும் வறட்சிப் பகுதிகள் உருவாகி அங்கு மக்கள் படும் துயர் எழுதி மாளாதது.

வறட்சிப் பகுதிகள், பட்டினிக் கொடுமைகளின் நிலைமை தீவிரமடைந்து வருவதுதான் நடக்கிறதே ஒழிய குறையவில்லை. இத்தகைய இந்திய அவல நிலைமையோடு ஆட்சியாளர்களின் ''புதிய பொருளாதார கொள்கை'', ''டங்கல்'' திட்டங்களால் விளையும் நாசமும் சேர்ந்து நாட்டை கடுமையான உணவுப் பஞ்சத்தை நோக்கி இட்டுச் செல்ல இருக்கின்றன. இன்னும் சில பத்தாண்டுகளில் இந்தியாவில் 40 கோடி மக்கள் பஞ்சத்தால் பரிதவிப்பதும் ஏறக்குறைய பாதி பகுதிகள் வறட்சிப் பகுதிகளாகவதும் நடக்கும். சூடான், எத்தியோப்பியா, சோமாலியா வரிசையில் இந்தியாவும் சேரும். கொத்து கொத்தாக தினம் மக்கள் பட்டினிக்குப் பலியாவது நிகழும்.

வல்லரசுகள் மற்றும் பன்னாட்டு பகாசுர கம்பெனிகள் கொள்ளைக்குப் பின்னிலமாக இந்தியாவை மாற்றுவதில் ராவ் - மன்மோகன் சிங் கும்பல் துரிதமாக செயல்பட்டு வருகிறது. தனியார் துறைக்கும் அந்நிய - பன்னாட்டு பகாசுர கம்பெனிகளின் கொள்ளைக்கும் பாய் விரித்துவிட்டு 'தொழிற் புரட்சி' செய்துவிட்டதாக கூச்சமின்றி கூச்சல் போடுவதோடு பட்ஜெட் பற்றாக்குறையையும் இதன் மூலம் ஈடு செய்யப் போவதாக மாயாஜால வித்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்று இக்கும்பலின் ஒட்டுமொத்த நலனுக்காக அனைத்து பகுதிகளிலும் துறைகளிலும் மக்கள் நிர்கதியற்றவர்களாக்கப்பட்டு பட்டினிச் சாவின் விளிம்பில் தள்ளப்படுவதே இந்தியா சோமாலியாவாக மாறிவருவதை உணர்த்துகிறது.

### காடுகளை அழித்து வாழ்வை அழிக்கும் கயவர்கள்

வறட்சிக்கு, மழையளவு அப்பகுதிகளில் குறைவாக இருப்பதைக் காட்டித் தப்பித்துக் கொள்ள முயல்வது ஆட்சியாளர்களின் வாடிக்கையாக உள்ளது. கடுமையான வறட்சிப் பகுதி கலகாந்தி, கோராபுட், பாலாமு மாவட்டங்களை எடுத்துக் கொண்டாலே, உபரியாக உணவு தானிய உற்பத்தி நடந்த பகுதியாக இருந்ததும் மழையளவு வருடந்தோறும் 50 மில்லி மீட்டர் வரை குறைந்து வருவதும் உண்மைதான். ஆனால் இதற்குரிய காரணத்தைப்பற்றி ஆட்சியாளர்கள் வாய் திறப்பதே இல்லை. மரங்களை வெட்டுவதும் முறையான பாசன வசதி முறைகள் இல்லாததும் முறையே மழையளவு குறைந்ததற்கும் தானிய உற்பத்தி குறைந்ததற்கும் மூக்கிய காரணங்களாக உள்ளன.



**வறட்சியில் வாடும் ஒரிசா - சிக்காபர் மக்களை நாடோடிகளாக்குகிறது, அரசு.**

பாலாமு பகுதியில் 70% மரங்கள் வெட்டி சந்தைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. ஜாபார் என்ற ஒரு கிராமத்தில் மட்டும் 60,000 மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. உள்ளூர் நிலப்பிரபுகள், வட்டி-லேவாதேவிக்காரர்கள், மர வியாபாரிகள், அரசியல்வாதிகள், காட்டிலாகா அதிகாரிகள் கூட்டாக சட்ட விரோதமாக கடத்தும் மரத்தின் அளவே மிக அதிகம். நல்ல தரமான மரம் நான்கு வெட்டினாலே 1.2 லட்சம் ரூபாய்க்கு விற்க (ஒரு கன சதுரடி 700 ரூபாயிலிருந்து 800 வரை விலை பெறும்) முடியும் என்றால் இக்கும்பலின் கொள்ளையை அளவிட்டுப் பாருங்கள். பேப்பர் ஆலைக்காக, மருந்து உற்பத்திக்காக, வெட்டப்படும் மரக்கடத்தலில் பல தரகு முதலாளிகள், பெரும்புள்ளிகள், அந்நிய நாட்டு கடத்தல் புள்ளிகள் எல்லாம் தொடர்பு வைத்திருக்கிறார்கள். மரங்களை வெட்டி முறைப்படுத்தி கடத்துவதற்கென்றே நவீன - உயர்ரக எந்திரங்கள், கருவிகளைக் கொண்ட ரகசிய - மர ஆலைகளை காட்டுக்குள் நடத்துகிறது, இக்கும்பல். கடந்த நவம்பரில் கேரளா - ஜீராகப்ரா காடுகளில் இத்தகைய கருவிகளோடும் 30 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மரத்தோடும் 42 பேரை அதிகாரிகள் கைது செய்தனர் (கைது செய்யப்பட்டவர்கள் பெரும்பாலும் கூலியாட்களே, சூத்திரதாரிகள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது)

குடிசை போட்டுக் கொள்வதற்காகவும், காய்கறி தோட்டம் வைப்பதற்காகவும், விறகுக்காகவும் மக்கள் வெட்டும் (பாஹ்ரியா எனும் பழங்குடிப் பெண்கள் வாரம் ஒருமுறை 40 கி.மீ. தொலைவு நடந்துபோய் மரத்தை வெட்டி சந்தையில் விற்று சம்பாதிக்கும் தொகை 8, 9 ரூபாய் தான்) கையளவு மரத்தைச் சுட்டிக்காட்டி காடு அழிவதாகக் கூச்சல் போடுகிறார்கள், திமிர் பிடித்த அதிகாரிகள். அம்மக்களை இதற்காக கைது செய்து வழக்குப்



படிப்பகம்

www.padippakam.com

போட்டுச் சிறையில் தள்ளுவதில் மட்டும் தீவிரமாக உள்ளனர். அவர்களைச் சித்திரவதை செய்வது கற்பழிப்பது போன்ற முறைகளையும் கையாளத் தவறுவதில்லை.

பழங்குடி மக்களின் வாழ்க்கை காட்டு வளப் பொருட்களோடு இயைந்த வாழ்க்கை. மூங்கில், மரப்பட்டை, நார், பூ போன்றவற்றிலிருந்து குடை, கூடை, தரை விரிப்பு, முறம் முதலான பொருட்களைச் செய்து தாமும் பயன்படுத்திக் கொண்டு எஞ்சியதை விற்றும் பிழைப்பு நடத்துகிறார்கள். ஒரிசா அரசு, கோயா பழங்குடி மக்கள் மூங்கில் மரங்களை வெட்டக் கூடாது என தடையுத்தரவு பிறப்பித்திருக்கிறது. காட்டு வளப் பொருட்களைப் பயன்படுத்துவது பழங்குடிகளின் பாரம்பரிய உரிமை; வாழ்க்கைக்கான உயிராதாரம். இதைப்பறித்து இன்று அவர்களை விரட்டியடிக்கிறார்கள்.

மரங்களை வெட்டுவதால் மட்டுமல்ல; மரங்களை நடுகிறோம் என்றும் பழங்குடிகளின் வாழ்வைப் பறிப்பது தான் நடக்கிறது. பீகாரில், பாஹ்ரியாஸ், பிர்ஹோர்ஸ், ஆசுர்ஸ், குர்வாஸ், பிஜியாஸ் ஆகிய பழங்குடியினர் எண்ணற்றோர் இப்படி பட்டினிச் சாவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். மரம் வெட்டப்பட்ட திறந்த வெளியில் மட்டுமல்லாமல் விளை நிலங்களில் கூட காடு வளர்க்கும் திட்டத்தை உலக வங்கி நெருக்கடியால் நடைமுறைப்படுத்துகிறது. அரசு. யூக்கலிப்டஸ், சவுக்கு, கருவேலம் மரங்களை நடுவதுதான் அரசின் காடு வளர்ப்புத் திட்டம். இது செயற்கை இழை துணியாலை, காகித ஆலை முதலாளிகள், தொழிலதிபர்கள், அந்நிய முதலாளிகளின் கொள்ளைக்கு உதவுகிறது. நிலத்தடி நீர், மண் வளத்தைப் பாதிக்கக் கூடியதும், காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி, சுற்றுச்சூழலை மாசுபடுத்தக் கூடியதுமான யூக்கலிப்டஸ் மரம் நடுவதற்கு எதிர்ப்புகள் பரவலாக இருந்தும் அரசு மீறி, அதை நட்டு ஆற்றுப்பாங்கான - வளமான பூமியைப் பாழடிக்கிறது. இம் மரங்கள் நடப்பட்ட சுற்றுவட்டாரத்தில் நிலத்தடி நீர் குறைந்து போய் மண்ணை தோட்டப் பயிர் முறை சாகுபடிக்குக் கூட வாய்ப்பில்லாமல் செய்து விடுகிறது.

### பாசன வசதி இல்லை பாழாகுது நிலங்கள்

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல் மழை பெய்யும் காலங்களிலும் அதை பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலையில்தான் ஒரிசா, பீகார் விவசாயிகள் இருக்கிறார்கள். குளம், ஏரி, ஆற்று நீரை தமது வயல்களுக்கு கொண்டு செல்வதற்கான பாசன வசதி முறைகள் இல்லாமல் தவிக்கிறார்கள். நவீன முறையில் பாசன வசதிகள் செய்து தருவதற்கோ நீர் இறைக்கும் எந்திரம், மின்சாரம் போன்ற வசதிகளை கடனுதவிகளை செய்து தருவதற்கோ அரசு அக்கறை செலுத்துவதே இல்லை. இருக்கும் பழமையான பாரம்பரிய பாசன முறைகளும் பராமரிக்கப்படாததால் பாழாகி வருகின்றன. பீகார் அரசு, தனது ''பட்ஜெட்''டில் பாசன வசதிக்காக வெறும் 40 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. இது 50 வருடத்திற்கு முன்பு 9 மடங்களவு இருந்தது. தேவைகள் பெருகி விரிவடைந்து வருகிற போக்கிற்கு எதிர்மறையில் அரசின் பொது மராமத்துப் பணிகள் சுருங்கி வருவதே நடக்கிறது.

பாலாமு பகுதியில் பாசன வசதிக்காகவென கட்டப்பட்டுவரும் குத்கு அணை 22 வருடங்களாகியும் முடிக்கப்படவில்லை. இப்பொழுதே சில இடங்களில் விரிசல் விட்டிருக்கும் இந்த அணை, திட்டமிட்ட செலவு 58 கோடி ரூபாயைவிட பல மடங்கு அதிகமாகி (இன்றைய மதிப்பீடு 425 கோடி ரூபாய்) காண்டிராக்டர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் கொழுக்கவே உதவியுள்ளது. 14000 குடும்பங்கள் இந்த அணை கட்டுவதற்காக நிலத்தையும் வீட்டையும் விட்டு விரட்டியடிக்கப்பட்டதுதான் சுற்று வட்டார மக்கள் கண்ட பலன்! ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் (IRDP), வறட்சிப் பகுதிக்கானத் திட்டம் (DPAP), வறுமை ஒழிப்புத் திட்டம் (ADAPT), மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் (ITDP), முதலான அரசு அறிவிக்கும் பல



**பட்டினிக் கொடுமையால் 40 ரூபாய்க்காக விற்கப்பட்ட பனீட்டா பூஞ்ச் தனது கணவர், குழந்தை, நாத்தனார் மற்றும் ஊர்ப்பெரியவருடன்.**

*வறட்சி - வறுமையின் கொடுமையால் பனீட்டா பூஞ்சி என்கிற 14 வயது சிறுமியை விற்ற ஒரிசா - கலாகாந்தியைச் சேர்ந்த பெண்மணி பானால் பூஞ்சியை அநேகம்பேர் மறந்திருக்கக்கூடும். 1985-ல் நடந்த இச்சம்பவத்தை மூடி மறைக்க - திசை திருப்ப முயன்ற ஆட்சியாளர்களின் தகிடுதத்தங்களை மீறி பத்திரிக்கை உலகம் உண்மை என நிரூபித்தது. ஒன்பது வருடங்களுக்குப் பிறகு இன்றும் பத்திரிக்கையாளர்கள் பானாஸ், பனீட்டாவின் வாழ்க்கையோடு ஒரிசா, பீகாரின் நிலைமையையும் படம் பிடித்துக் காட்டுகிறபோது அதன் அவலநிலைமை நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கவே செய்கிறது.*

*சத்துணவு ஊழியர்களான பானாஸும், பனீட்டாவும் வெறும் 210 ரூபாய் மாதச்சம்பளத்தில்தான் காலந்தள்ள வேண்டியுள்ளது. 9 வருடமாக இருந்த நிலத்தை விற்றும், கடன் உடன் வாங்கியும், உறவினர்களை அண்டிப் பிழைத்துமே வாழ்க்கை நடத்தியுள்ளனர். பனீட்டா, தனது கண்தெரியாத கணவருடனும், நோய் வாய்ப்பட்ட - எலும்புந்தோலுமான மூன்று குழந்தைகளுடனும் கால் வயிறும் பட்டினியுமாக எவ்வளவு நாளைக்குத் தாக்குப் பிடிப்பார் என்று தெரியவில்லை! பனீட்டா தனது குழந்தைகளை விற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.*

*பிரதமர் ராசீவ்காந்தியும் முதல்வர் ஜே.பி. பட்நாயக்கும் வந்து சந்தித்து அன்று கூறிய ஆறுதலும், கொடுத்த வாக்குறுதிகளும் இவர்கள் வாழ்வுக்குக் கூட வழிகாட்டவில்லை. ஒரிசா - கலாகாந்தி, கோராபுட்டை வறட்சிப் பகுதியாக அறிவித்து பல நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்கியதாகக் காட்டி ஓட்டுப் பொறுக்கும் நோக்கில் விளம்பரம் தேடிக் கொண்டார்கள். பின்னர் வந்த பிஜூபட்நாயக்கும் (ஜனதாதளம்) ஏகப்பட்ட வாக்குறுதிகளைத்தான் அள்ளி வீசிக் கொண்டே உள்ளார்.*



படிப்பகம்

www.padippakam.com

திட்டங்களின் நிலையும் இதுதான். இவற்றால் பொட்டு காசும், துரும்பளவு உதவியும் இம்மக்களை வந்து தொட்டதாக சரித்திரம் இல்லை.

### குடியிருக்கவும் முடியவில்லை குண்டு போடுகிறார்கள்

பல இன்னல்களையும் மீறி இப்பகுதியில் வாழும் மக்களையும் அரசு நிம்மதியாக விட்டு வைக்கவில்லை. கோராபுட் - சிக்காபர் கிராமத்தில் மட்டும் பல்வேறு திட்டங்களுக்காக மக்களை இரண்டு முறை துரத்தியடித்த அரசு, மூன்றாவது முறையாகவும் முயற்சிக்கிறது. 1968-ல் ''மிக்'' விமான கட்டுமானப் பணிக்காகவும் 1987-ல் கப்பல் - ஆயுதக் கிடங்கு மற்று ''கெயாட்'' எனும் கம்பெனிக்காகவும் 1000-க்கும் மேற்பட்ட குடும்பங்களை விரட்டியடித்தார்கள். இன்று ராணுவத் தொழில் நுட்ப பயிற்சி தளத்திற்காக விரட்ட முயற்சிக்கிறார்கள்.

பாலாமு - மாஹெளடான் என்ற இடத்தில் ராணுவ பயிற்சி தளத்தை அமைத்திருக்கிறார்கள். ராஞ்சியிலிருந்து ராணுவப் படைகள் அடிக்கடி இப்பகுதிகளில் தனிப்பயிற்சியெடுக்க வந்து குவியும். ஒட்டுமொத்த இக்கும்பல் சேர்ந்து கொண்டு போடும் கூச்சல், பொழியும் குண்டு மழை, கொடுக்கும் தொல்லைகள் ஏராளம். விமானங்களிலிருந்து குண்டு போட்டு காளனிகளை, காடுகளை அழிக்கிறார்கள். செகுயா பொனி கிராமத்தில் 7,000 ஏக்கர் நிலத்தை அழித்துள்ளனர். குடியிருப்புகளிலும் குண்டுகள் விழுவதால் அச்சத்துடன் தான் மக்கள் நடமாடுகிறார்கள். திருமணம் போன்ற விழாக்களை நடத்த முடியாமல் அவதியுறுகின்றனர். ஏறக்குறைய பாலாமு பகுதியில் 120 கிராம மக்கள் இப்படி பீதியில் உறைந்துள்ளனர்.

மாஹெளடான் பகுதியிலிருக்கும் கோழிப் பண்ணையில் இருந்து தினம் 10 லட்சம் முட்டைகள் இந்த ராணுவக் கும்பலுக்கு சென்றும் ஆதிவாசிகளின் குடியிருப்புகளில் புகுந்து கோழிகளை, ஆடுகளைத் திருடித் தின்பது இக்கும்பலின் வாடிக்கை. ராணுவத்தினர் இரவில் பயிற்சியெடுக்கும் போது கிராமத்தினர் காட்டுக்குள் சென்று உறங்குகிற கொடுமை நடக்கிறது. இதற்கு அவர்களுக்கு ஈட்டுத் தொகை (ரூ 1.50 ஒரு நாளைக்கு) கொடுத்துவிடுவதாகப் பெருமையாகக் குறிப்பிடுகிறது, ராணுவ அதிகார வர்க்கம். தற்போது இப்பயிற்சிக்காகவே நிரந்தரப் பகுதியை குமலா எனுமிடத்தில் உருவாக்க முயற்சிக்கிறார்கள். இங்கு குடியிருக்கும் ஆதிவாசிகளை விரட்டியடிக்க உள்ளனர். இப்படி இந்த ராணுவ கும்பலால் மக்கள் படும் துன்பத்தைவிட காடுகளில் விலங்குகள் அழிவதைப் பற்றி கவலை கொண்டு எதிர்ப்புத் தெரிவித்து உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்க முயல்கிறார்கள், சுற்றுச்சூழல்வாதிகள் மற்றும் சமூக நலவாதிகள்.



**பயிற்சி என்ற பெயரில் ஆதிவாசிகளை காடுகளிலிருந்து துரத்தியடிக்கும் ராணுவக் கும்பல்.**

ஒரிசா, பீகார் பகுதியில் இப்படி பல்வேறு காரணங்களுக்காக வெளியேற்றப்படும் கிராம மக்களுக்கு மாற்று குடியிருப்பு வசதி செய்து தரப்படுவதில்லை. ஒரிசா - சிக்காபர், சுனாபேதா பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட 2938 குடும்பங்களில் 600 குடும்பங்களுக்கே அதிலும் 450 ஆதிவாசி குடும்பங்களுக்கே மறு குடியிருப்பு வசதி செய்து கொடுத்துள்ளது, அரசு. இந்திய அளவில் நர்மதா அணைத்திட்டம் போன்றவற்றிற்காக வெளியேற்றப்பட்ட 2 கோடியே 20 லட்சம் பேரில் 40% பேர் ஆதிவாசிகள். இதில் 25% பேருக்கே மறு குடியிருப்பு கிடைத்துள்ளது.

### நீர்வாழ் உயிரினங்களை அழித்துக் கொள்ளை

ஆதிவாசிகள், விவசாயிகளின் வாழ்க்கைக்கு அடுத்தாற் போல் இந்திய ஆளுங்கும்பல் கை வைப்பது, மீனவர்கள் தலையில். ஆதிவாசிகளுக்கு காடு எப்படி உயிராதாரமாக இருக்கிறதோ அதேபோல் மீனவர்களுக்கு நீர்வாழ் உயிரினங்கள். குளம், குட்டை, ஏரிகளை ''காண்டிராக்ட்'' எடுத்து பண முதலைகள் - ஆதிக்க சக்திகள் கொழுக்கிறார்கள் என்றால் கடற்கரையோரம் அரசு மற்றும் தனியார் முதலாளிகள், பன்னாட்டுக் கம்பெனிகள் மீன் பிடித்தும் உற்பத்தி பண்ணைகள் வைத்தும் கொழுக்கின்றன. இக்கம்பெனிகள் நவீன விசைப்படகுகள், கருவிகளை வைத்து ஏராளமான மீனைப் பிடித்து செய்யும் வியாபாரத்தோடு போட்டியிட முடியாமல் கட்டுமரம், சிறு படகுகளை நம்பியிருக்கும் மீனவர்கள் நசிவுறுகிறார்கள்; பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படுகிறார்கள்.

> **ஆட்சியாளர்களின் மக்கள் விரோதக் கொள்கை நடைமுறைகளால் இயற்கையோடு இயைந்த பழங்குடி மக்கள், மீனவர்கள், பழைய - பின்தங்கிய உற்பத்தியைச் சேர்ந்த விவசாயிகள், நெசவாளர்கள், கைத்தொழிலாளர்கள் வாழ்விழந்து பஞ்சம் பிழைக்கச் செல்வது அதிகரிக்கும்; கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்படும்.**

ஆனால், அதே சமயம் பிடிக்கும் மீனை பல நாள் பதப்படுத்துவதற்கும் உணவுப் பொருளாக்குவதற்கும் புதிய ரக மீன்களை உற்பத்தி செய்வதற்கும் என பல விதப் பண்ணைகள் - நிறுவனங்களை வைத்துள்ள அரசும் தனியார் கம்பெனிகளும் வருடந்தோறும் இந்தியாவிலிருந்து 4.25 மில்லியன் டன் மீன்களை (சுமார் 1800 கோடி ரூபாய்க்கு) ஏற்றுமதி செய்கின்றன. இதனளவை 7 மில்லியன் டன்னாக உயர்த்தத் திட்டமிட்டு தனியார் மற்றும் அந்நிய முதலாளிகளை கூவியழைக்கிறது, இந்திய அரசு. ஒரிசாவில் கொனாரக் - பூரி கடற்கரைத்திட்டம் என 864 கோடி ரூபாயில் சுற்றுலா கடற்கரை அமைப்பதற்காக அப்பகுதிகளில் வாழும் மீனவர்களை அரசு விரட்டியடிக்கிறது. அரசும் தரகு முதலாளி ''டாடா''வும் கூட்டு சேர்ந்து ''சில்கா அக்குவேடிக் லிமிடெட்'' எனும் இறால் மீன் பிடி பண்ணையை ஒரிசாவில் அமைத்து வருகிறார்கள். இதனால் பாதிக்கப்படும் ஆயிரக்கணக்கான மீனவர்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்ததால் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

தனியார் கம்பெனிகள் மீன்களையும் கடல் வாழ் உயிரினங்களையும் லாபம் கருதி இயற்கைக்கு முரணாகப் பிடித்து அழித்து வருவதால் கடல் வளம் - சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. போதாததற்கு கழிவுகளையெல்லாம் கடலில் கொட்டியும் நீர் வாழ் உயிரினங்களை அழிக்கிறார்கள். ஒரிசா கடற்கரையில் எப்பொழுதும் ஏராளமான நண்டுகள் இருப்பதால், இதிலிருந்து ''லிசாட் டெஸ்ட்'' எனும் மருத்துவ பரிசோதனைக்கானப் பொருளை எடுத்து உலகச் சந்தையில் காசாக்க அமெரிக்காவுடன் சேர்ந்து (இதன் தொழில் நுட்பம் அமெரிக்கா, சைனாவிடம் மட்டுமே உள்ளது) நண்டு ஆராய்ச்சிப் பண்ணைத் தொடங்க இந்திய அரசு, திட்டமிட்டு வருகிறது. நண்டு மீனவர்களுக்கு உணவு மட்டு



படிப்பகம்

www.padippakam.com

மல்ல; விற்றுப் பிழைக்கும் மூலாதாரமும் கூட. இதே போல் உப்பு உற்பத்தித் தொழிலும் மீனவர்களுக்கு சோறு போடக் கூடியது. தரகு முதலாளிகள், அந்நிய கம்பெனிகள் இதிலும் நுழைந்து நவீன முறையில் உற்பத்தி செய்து பெருவீத சந்தையைப் பிடித்து விட்டார்கள். துடுப்பை இழந்த படகுபோலாகி விட்டது மீனவர்களின் பாடு! கடல் கொந்தளிப்பு, புயல் நாட்களில் மட்டுமல்ல சாதாரண நாட்களிலும் இவர்களின் அடுப்பு பானை கவிழ்ந்தே இருக்கிறது.

இப்படி பல்வேறு தாக்குதலால் வாழ்விழந்து போகும் விவசாயிகள், ஆதிவாசிகள், மீனவர்கள் பம்பாய், சூரத், ரெய்ப்பூர் போன்ற நகரங்களில் குடியமர்கிறார்கள். இங்குள்ள வேலையில்லாத் திண்டாட்டம், அற்பக் கூலியோடு போராடி வாழ்க்கை நடத்தினாலும் நிம்மதியாக இருக்க முடியவில்லை. மதக் கலவரத்தின் போது சேரிப்பகுதிகளில் வாழும் இவர்கள்தான் முக்கியமாக தாக்குதலுக்கு இலக்காகிறார்கள். ஒரிசாவிலிருந்து குடிபெயர்ந்த ஏராளமானோருக்கு சூரத்தில் நடந்த மதக் கலவரத்தின் போது பல கொடுமைகள் நேர்ந்தது. இது வல்லாமல் மதவெறியர்கள், கலவரத்திற்கு இவர்களை கருவியாக்கியும் கைது, தாக்குதல், உயிரிழப்பிலிருந்து எளிதாக தப்பித்துக் கொள்கிறார்கள்.

### வளமானப் பகுதியும் வறட்சிப் பகுதியாகிறது

ஒரிசா, பீகார் போன்ற வறட்சிப் பகுதிகளில்தான் இந்நிலைமை என்றில்லை; வளமான பகுதிகளிலும் உணவுப் பஞ்சத்தை எப்படித் தோற்றுவிக்கிறார்கள் பாருங்கள்! இந்தியாவில் நுழைய முடியாமல் இருந்த பெப்சிகோ கம்பெனிக்கு 90'ல் பாசிச ராஜீவ் அனுமதியளித்து பஞ்சாப்பின் வளமானப் பகுதியை தாரை வார்த்துக் கொடுத்தார். உலக குளிர்பான சந்தையில் கொக்கோ கோலாவுடன் போட்டியிட முடியாமல் நலிந்த பெப்சிக்கோ தனது கவனத்தை உணவுச் சந்தையை நோக்கித் திருப்பி, முன்னேறியும் வருகிறது. பிஸ்ஸா ஹட், கென்சுகிப்ராய்டு சிக்கன், டாகோ பெல்ஸ் ஆகிய விரைவு உணவு விடுதிகள், ''ரெஸ்டாரண்டுகளை'' உலக நாடுகளில் திறந்தது. இதன் தேவைக்காக உணவு தானிய உற்பத்தியை தாமே செய்யும் பொருட்டு பஞ்சாப்பை குறிவைத்து நுழைந்து 3500 ஏக்கர் நிலத்தை வளைத்துப் போட்டு தக்காளி, உருளைக் கிழங்கு பயிர் செய்தது.

குறுகிய கால நலனோடு பல செயற்கை முறைகளில் ஒரு ஏக்கர் நிலத்தில் பல மடங்கு அதிகமாக (22 டன் தக்காளி) சாகுபடி செய்து 90 சதவிகிதத்தை பெப்சிகோ ஏற்றுமதி செய்து வருகிறது. இதன் மூலம் அத்தியாவசிய உணவு தானிய உற்பத்தியை இந்நிலப்பரப்பில் இழந்ததோடு மீண்டும் விவசாயிகள் தானியப் பயிர் செய்ய முடியாத வண்ணம் நிலத்தடி நீரையும், மண்வளத்தையும் பாழாக்கி விட்டார்கள். இன்று ராவ் கும்பல் ''பெப்சிகோ''விற்கு 40 கோடி ரூபாய் மூலதனத்தில் 30 இடங்களில் இந்திய நகரங்களில் விரைவு உணவு விடுதி, ''ரெஸ்டாரண்டு''களை திறந்து கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. இதன் தேவைக்காக பெப்சிகோ நாளை தஞ்சையை வளைத்துப் போட்டு பாழாக்கலாம். படிப்படியாக விவசாய உற்பத்தியை விரைவு உணவு விடுதிக்கானதாக மாற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இப்படி வளமான நீர்ப்பாங்கானப் பகுதியை பஞ்ச பூமியாக்குகிறார்கள்; வறட்சிப் பகுதியை தொடர்ந்து புறக்கணித்து பாலைவனமாக்குகிறார்கள்; விளைநிலங்களை பெப்சிகோக்களும், வறண்ட நிலங்களை ராணுவமும் கைப்பற்றி மக்களை வறுமைக்கும் சாவுக்கும் தள்ளுகின்றன. ஆட்சியாளர்கள் ஒரிசா - கலாகாந்தி, கோராபுட் வறட்சிப் பகுதியை கவனம் செலுத்தியிருந்தால்கூட பட்டினிச் சாவுகளைத் தடுத்து நிலைமையை முன்னேற்றியிருக்க முடியும். ஆனால் சிறிதும் அக்கறைசெலுத்தாத கும்பல்தான் இன்னமும் வெற்றுச் சவடாலடித்துக் கொண்டிருக்கிறது.

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவதுபோல் வறட்சி, பட்டினிச் சாவை தோற்றுவிப்பதற்கும் ('தொழில் வளர்ச்சி' என பன்னாட்டு முதலாளிகளுக்கு சேவை செய்வதற்கும் அவர்களைப் பாதுகாக்கும் ராணுவத்திற்கு செலவு செய்வதற்கும்) அதன் நிவாரணப் பணிக்காகவும் இந்தியா ஏராளமான கடனையும் கடனுக்கு கடனையும் வாங்குகிறது. இப்படியே அமெரிக்காவிற்கு மெல்ல அடகு வைத்து மறுகாலனிக்கு வித்திடுகிறார்கள். வறட்சிப் பகுதிகளையும் பட்டினிச் சாவையும் தோற்றுவிக்கும் வல்லரசு நாடுகள், நாளை சோறு கேட்டு தட்டேந்தும், வாழ்வு கேட்டு மனு ஏந்தும் கைகள் தடியையும் ஆயுதத்தையும் ஏந்தினால் ''அமைதியை நிலைநாட்ட'' என படையனுப்பி தாக்கவும் தயாராகவே உள்ளன.

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை, பழைய உற்பத்தியுடன் பிணைக்கப்பட்டிருக்கும் ஆதிவாசிகள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், கைத்தொழிலாளர்கள் என கோடிக்கணக்கானவர்கள் பட்டினிச் சாவின் விளிம்பில் நிற்பதற்கு நிலப்பிரபுத்துவம் மற்றும் ஏகாதிபத்திய சுரண்டலே காரணம். பின்தங்கிய உற்பத்தியிலிருக்கும் மக்களுக்கும் வறட்சிப் பகுதிகளுக்கும் முன்னுரிமை சலுகைகள், உதவிகள் செய்வது, நிலப்பிரபுக்களை ஒழித்து நிலங்களை கூலி ஏழை விவசாயிகளுக்கு உரிமையாக்குவது, தரகு முதலாளிகள் பன்னாட்டு கம்பெனிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து ஏகாதிபத்திய கொள்ளைக்கும் ஆதிக்கத்துக்கும் கதவு சாத்துவது போன்றவற்றின் மூலமே இந்தியா ஒரு சோமாலியா, எத்தியோப்பியாவாக, மீண்டும் காலனி நாடாக மாறிவருவதை தடுக்க முடியும்.

○ சுப்பு

**லாரிகளில் 'டன்' கணக்கில் மரத்தை வெட்டிக் கடத்துவதற்கு 'கை கொடுக்கும்' அதிகாரிகள் ஆதிவாசிகள் பிழைப்புக்காக வெட்டும் கையளவு மரங்களால் காடுகள் அழிவதாக புளுகுகிறார்கள்.**





படிப்பகம்

www.padippakam.com

### காஷ்மீர் விவகாரம்:

# குறுகிய 'தேசிய' வெறியூட்டி குற்றங்களை மறைக்க முடியாது

காஷ்மீர் விவகாரத்தில் உலக அரங்கில் இந்தியா மீண்டும் தனிமைப் பட்டுப் போயுள்ளது. அண்மையில் ஜெனீவாவில் நடந்த ஐ.நா. மனித உரிமைக் கமிஷன் கூட்டத்தில், காஷ்மீர் விவகாரத்தை உலக நாடுகளின் கவனத்துக்குக் கொண்டு வருவதில் மீண்டும் பாகிஸ்தான் வெற்றி பெற்றுவிட்டது.

காஷ்மீரில் இந்திய அரசு மேற்கொண்டு வரும் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறை, பயங்கரவாதப் படுகொலைகளால் ஏற்கனவே உலக அரங்கில் அம்பலப்பட்டுக் கிடக்கிறது. காஷ்மீரில் தொடரும் மனித உரிமை மீறல் பற்றி ஐ.நா. பொதுச்சபையில் 49-வது கூட்டத் தொடரில் ஏற்கனவே பாகிஸ்தான் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அதை சௌதி அரேபியா ஆதரித்தது. அதன் பிறகு அமெரிக்காவின் தெற்காசிய விவகார துணைச் செயலாளரான ராபின் ராப்பேல், காஷ்மீரில் மனித உரிமை மீறல் பற்றி கண்டனம் தெரிவித்ததோடு, காஷ்மீர், இந்தியாவின் பகுதியே அல்ல என்றும் குறிப்பிட்டார். அமெரிக்க அதிபர் கிளிண்டன், காஷ்மீர் போராளி ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் காஷ்மீரிகளின் நியாயமான போராட்டத்தை ஆதரித்தார். இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பும் காஷ்மீரில் தொடரும் அரசு பயங்கரவாதப் படுகொலைகளை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

இந்நிலையில், காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவதைக் கண்டித்து ஐ.நா. மனித உரிமைக் கமிஷன் கூட்டத்தில் பாகிஸ்தான் கொண்டு வரும் தீர்மானம் வெற்றி பெற்றுவிட்டால், உலக அரங்கில் மேலும் அம்பலப்பட்டு தனிமைப்பட நேரிடும் என்று இந்தியா பீதியடைந்தது. மனித உரிமை மீறல் விவகாரத்தை சாதகமாக்கிக் கொண்டு, மேலை நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதிக்குமோ என்றும் அஞ்சியது. வாக்குரிமை இல்லாத போதிலும் சௌதி அரேபியா, போஸ்னியா, டுனீசியா ஆகிய நாடுகள் பாக். தீர்மானத்தை ஆதரித்து செல்வாக்கு செலுத்தியதையும், அமெரிக்கா மற்றும் பிற மேலைநாடுகள் 'நடுநிலை' வகித்ததையும் கண்டு இந்தியா பயபீதியடைந்தது.

எனவே, பாரதீய ஜனதா கட்சித் தலைவர் வாஜ்பாய், காஷ்மீரின் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா, வெளியுறவு அமைச்சர்களான தினேஷ்சிங், சல்மான் குர்ஷீத், பிரதமரின் முதன்மைச் செயலாளரான ஏ.என்.வர்மா, மற்றும் வெளியுறவு - தூதரக அதிகாரிகள் என ஒரு பெரும் பட்டாளமே ஜெனீவாவுக்குச் சென்று பாகிஸ்தானின் தீர்மானத்தை முறியடிக்க தீவிரமாக முயன்றது. நாள்தோறும் 10 நாடுகளது பிரதிநிதிகளுக்கு ஆடம்பர விருந்தும் விபச்சாரமும் செய்து பேரங்கள் நடத்தப்பட்டன. இதற்கென தூதரக சேவகர்கள் என்ற பெயரில் பெண்கள் கொண்டு செல்லப்பட்டனர். இந்தியாவின் இத்தகைய கீழ்த்தரமான பேரங்களை மாநாட்டுப் பிரதிநிதிகளே வெளிப்படையாக கேலி செய்யுமளவுக்கு சந்தி சிரித்தது.

இத்தனைக்கும் பிறகும் ஐ.நா. மனித உரிமைக் கமிஷனின் 53 உறுப்பினர் நாடுகளில் 43 நாடுகள் தாங்கள் ஓட்டெடுப்பில் கலந்து கொள்வதில்லை என்றே அறிவித்தன. ஆனால் அவை பாக். தீர்மானத்துக்கு எதிராக வாக்களிக்க முன்வரவில்லை. எஞ்சிய 10 நாடுகள் ஓட்டளித்தால் கூட பாக். தீர்மானம் வெற்றி பெற்றுவிடும் என்பதால், பாகிஸ்தானின் நீண்டகால நட்பு நாடுகளான சீனாவுடனும் ஈரானுடனும் இந்தியா கடைசி நேர பேரங்களில் இறங்கியது.

சீனாவில் மனித உரிமை மீறல் பற்றி மேலை நாடுகளின் கண்டனத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கக் கூடாது; அதேபோல், பாக்.கின் தீர்மானத்தை சீனா ஆதரிக்கக்கூடாது என்று இந்தியா - சீனாவுக்கிடையே ஓர் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. இந்திய-ஈரான் கூட்டுத்தொழில் நிறுவனங்களின் எதிர்கால நலன்களை விளக்கி இந்தியா கெஞ்சிய பிறகு ஈரானும் காஷ்மீர் பற்றிய தீர்மானத்தை தற்போது முன்னிறுத்த வேண்டாம் என்று பாகிஸ்தானைக் கேட்டுக் கொண்டது. அதன் பின்னரே பாகிஸ்தான் தனது தீர்மானத்தை ஒத்தி வைக்குமாறு கமிஷனிடம் கோரியது.

ஆனால், இவற்றையெல்லாம் மூடி மறைத்துவிட்டு, பாக். தீர்மானத்துக்கு ஆதரவில்லாமல் தோல்வியடைந்துவிட்டதாக அரசும் பத்திரிகைகளும் கூசாமல் புளுகி வருகின்றன. பாகிஸ்தானின் தீர்மானம் தற்போதைய கூட்டத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதே தவிர, விலக்கிக் கொள்ளப்படவில்லை. ஆனாலும் பாகிஸ்தான் படுதோல்வி அடைந்து தனது தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொண்டதாக பத்திரிகைகள் அண்டப்புளுகை அவிழ்த்து விட்டுள்ளன. இதே போல, பயங்கரவாதிகளால் மனித உரிமை பாதிக்கப்படுவதைக் கண்டித்து அனைத்து நாடுகளும் கூட்டாக நிறைவேற்றிய தீர்மானத்தை, பாகிஸ்தானுக்கு எதிராக தீர்மானம் போடப்பட்டதாக திரித்துப் புரட்டின.

இதிலே ஆளும் காங்கிரசோடு இந்துவெறி பாரதீய ஜனதாவும் பாக். எதிர்ப்பில் கைகோர்த்து நின்றது. விலைவாசி






படிப்பகம்

www.padippakam.com

ஏற்றம், ''காட்'' ஒப்பந்தம் முதலான எல்லாவற்றையும் விட்டுவிட்டு நாட்டுக்கு ஏற்பட்டுள்ள தலையாயப் பிரச்சினையாக பாக்கிஸ்தான் எதிர்ப்பு பிரச்சினையை எடுத்துக்கொண்டு 'தேசிய' வெறியைக் கக்குகிறது. ''துலுக்கனும் கம்யூனிஸ்டும் எதிரிகள்'' என்று சாடும் இந்துவெறியர்கள் ஈரானுடனும் சீனாவுடனும் பேரம் நடத்தி, கெஞ்சி பாக். தீர்மானத்தை தள்ளி வைத்ததையே மாபெரும் வெற்றியாகக் காட்டிக் கொண்டு, ''காஷ்மீரைக் காத்த பாரதத்தின் தலைமகன்'' என்று வாஜ்பாய்க்கு வாழ்த்து தெரிவித்து வெட்கமின்றி பா.ஜ.க.வினர் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

அதேசமயம் காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றிய தீர்மானத்தைக் கொண்டு வருவதில் பாகிஸ்தான் சரியாக செயல்பட்டிருப்பதாகக் கருத முடியாது. பேரங்கள், விருந்து - விபச்சாரம் மூலம் பிறநாடுகளை தம்பக்கம் இழுக்க அந்நாடும் முயற்சி செய்தது. உள்நாட்டில் சிறுபான்மை தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கும் பாகிஸ்தான்

**விலைவாசி ஏற்றம், ''டங்கல்'' ஒப்பந்தம் முதலானவற்றை விட்டுவிட்டு நாட்டுக்கு ஏற்பட்டுள்ள தலையாயப் பிரச்சினையாக காஷ்மீர் விவகாரத்தை சித்தரித்து 'தேசிய' வெறியைக் கக்குகிறது, பா.ஜ.க.**

அதே சமயம், அரசியல் ஆதாயம் கருதி காஷ்மீர் விவகாரத்தை முன்னிறுத்துவதும், சில பயங்கரவாதக் குழுக்களை ஆதரித்து ஆயுத உதவி செய்து வருவதும் உண்மைதான். ஆனால் இதைக்காட்டி இந்திய அரசு காஷ்மீரில் கட்டவிழ்த்து விட்டுள்ள அரசு பயங்கரவாத அடக்குமுறையை நியாயப்படுத்திவிட முடியாது. உண்மையில், காஷ்மீரில் எதார்த்த நிலை என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

காஷ்மீரின் எதிர்காலம் பற்றி அம்மக்களிடம் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்துவதாக ஒப்புக் கொண்டு விட்டு, காஷ்மீரை ஆக்கிரமித்துக் கொண்டு இந்திய அரசு பயங்கரவாதத்தை ஏவி வருவது எவ்வகையிலும் நியாயமானதல்ல. எனவே, ஐ.நா. மனித உரிமைக் கமிஷன் கூட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றுவிட்டதாகக் கூறப்படும் மாய்மாலச் சவடால்களைக் கண்டு இந்திய மக்கள் ஏமாந்துவிட முடியாது. சர்வ கட்சி ஆதரவுடன் பாகிஸ்தானுக்கு எதிராக தேசிய வெறியூட்டி, தனது அடக்குமுறையை மறைத்துக் கொள்ளும் இந்தியாவின் முயற்சிக்கு நாட்டு மக்கள் பலியாகிவிடவும் முடியாது.

### பங்குச் சந்தை:

# திடீர் கவர்ச்சியின் மர்மம்


**பங்குச் சந்தையும் சர்வதேசமயமாகி வருகிறது. அந்நிய நிறுவனங்கள் நுழைவும் செயற்கையான விலையேற்றமும் தில்லுமுல்லுகளும் பெருகி இந்தியத் தொழிற் துறையை யூகப் பொருளாதாரத்திற்குள் முடக்கப்போகிறது.**

எதனின் வளர்ச்சி ஆட்சியாளர்களின் ''தூக்கத்தைக் கலைத்துவிடுமோ'', அந்தப் பங்குச் சந்தை ஊக வியாபாரம் மீண்டும் நாலுகால் பாய்ச்சலில் தலைதெறிக்க ஓட ஆரம்பித்துள்ளது. கடந்த நவம்பரிலிருந்து சனவரி முடிய மூன்று மாதத்திற்குள் 1400 புள்ளிகள் அதிகரித்து, சனவரி இறுதியில் பங்குச் சந்தைக் குறியீடு 4,088 புள்ளிகளைத் தொட்டுள்ளது. இக்குறியீடு இவ்வருடத்திற்குள் 6,000 புள்ளிகளைத் தொடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. பங்கு மூலதனச் சந்தை ஏறுமுகமாக உயரத் தொடங்கியவுடனேயே பொருளாதார அமைச்சகம், ''இது 1992-ம் வருடத்திய நிலை போன்றதல்ல; வலிமையான போட்டியாளர்கள் நுழைந்துள்ளதன் காரணமாக எழுந்துள்ள ஆரோக்கியமான வளர்ச்சி'' என்று அறிக்கை விடுத்தது.

பன்னாட்டு முதலீட்டு நிறுவனங்களின் வருகை, வரவு-செலவு திட்டத்துக்கு முந்தைய எதிர்பார்ப்பு, அரசியலில் நிலவும் ஓரளவு ஸ்திரத்தன்மை - இவையெல்லாம் இப்பாய்ச்சலுக்கு காரணங்களாகக் கூறப்படுகின்றன. இவற்றோடு, ''தரகர்களிடையே நிலவும் முன்னோக்கு விற்பனை (Forward Trading) என்ற ஊக வியாபாரமும், அந்நிய நிறுவனங்களின் வருகையையொட்டி பங்குகளை மொத்தமாக வாங்கிப் பதுக்குவதில் 35 சதவீதம் அளவுக்கு கள்ளப் பணம் புகுந்திருப்பதும் இப்பெருக்கத்திற்குத் துணை புரிந்துள்ளன'' என பங்கு பத்திர பரிமாற்ற வாரியத்தின் (SEBI) முன்னாள் தலைவர் ஜி.வி.இராமகிருஷ்ணாவும், சில முதலீட்டாளர்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இவற்றுள் பன்னாட்டு முதலீட்டு நிறுவனங்களின் வருகையைத்தான் முக்கிய காரணமாக பெரும்பாலானவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். பங்குச் சந்தையை சீர்திருத்தும் முகமாக 1992 செப்டம்பரில் பன்னாட்டு முதலீட்டு நிறுவனங்கள் இந்திய மூலதனச் சந்தையில்

**பங்குச்சந்தை கனவுலகம்**





படிப்பகம்

www.padippakam.com

நுழைய அனுமதித்தது ராவ் அரசு. இரண்டே வருடங்களுக்குள் தற்பொழுது 132 அந்நிய நிறுவனங்கள் இத்துறையில் இயங்கி வருகின்றன. 94-ம் ஆண்டு தொடக்கம் வரை 4000 கோடியளவு முதலீடு செய்துள்ள இந்நிறுவனங்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் தங்கள் முதலீட்டை 12000 கோடிக்கு அதிகரிக்கத் திட்டமிட்டிருக்கின்றன. இதோடு இந்தியாவிலேயே மூலதனத்தைத் திரட்டி பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு வாய்ப்பாக இந்த அந்நிய நிறுவனங்கள் தங்களின் சொந்த ''பரஸ்பர நிதி''த் தொழிலைத் (Mutual Fund) தொடங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இது ஒருபுறமிருக்க, இது நாள் வரை இந்தியத் தொழில் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான மூலதனத்தை இந்திய பங்குச் சந்தையிலிருந்து மட்டுமே திரட்டிக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தன; தற்பொழுது சர்வதேச மூலதனச் சந்தையில் பங்குகளையும், கடன் பத்திரங்களையும் வெளியிட்டு, அமெரிக்க டாலர்களாக மூலதனத்தைத் திரட்டிக் கொள்ள இந்தியத் தொழிலதிபர்களால் முடியும். இதன் மூலம் அந்நிய மூலதனம் கொல்லைப்புற வாசல் வழியாக இந்தியத் தொழில்துறையினுள் நுழைய கதவுகள் திறந்துவிடப்பட்டிருக்கின்றன.

அம்பானியின் 'ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்'; 'ஸ்பிக்' உர நிறுவனம், 'பாம்பே டையிங்' போன்ற மிகப் பெரிய தனியார் தொழில் நிறுவனங்கள் மட்டுமின்றி அரசின் பொதுத்துறை நிறுவனங்களும் தற்பொழுது போட்டி போட்டுக் கொண்டு சர்வதேச பங்குகளை ஐரோப்பிய மூலதனச் சந்தையில் விற்பதற்காக வெளியிட்டு வருகின்றன. இதன் மூலம் மட்டும் அந்நிய மூலதனம் 12000 கோடி வரை இவ்வருடத்திற்குள் நாட்டினுள் நுழையலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

சர்வதேச மூலதனச் சந்தையில் இப்பங்குகளை வாங்கும் முதலீட்டாளர்கள் அந்நிறுவனத்தின் பங்குதாரர்களாகக் கருதப்படுவார்கள்; முதலீட்டு நிறுவனங்களே இப்பங்குகளை வாங்குவதில் ஆர்வம் காட்டுவது; இதன் மூலம் அவை அடையவிருக்கிற வோட்டுரிமை - இவை காரணமாக குறிப்பிட்ட தொழிலகத்தின் நிர்வாகம், உற்பத்தி, தொழில் நுட்பம், ஊழியர் கொள்கை போன்றவற்றில் அவை குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்த முடியும். இதோடு புதிய இந்நிலை ஐரோப்பிய மூலதனச் சந்தையின் ஏற்ற, இறக்கங்களோடு இந்தியத் தொழிற்துறையை நேரடியாக பிணைப்பதாகவும் அமையும்.

மறுபுறம், பங்குச் சந்தையில் மாறியுள்ள இச்சூழலை மையமாக வைத்து ''சம்பிரதாயமான முறையில் சேமிப்பதைவிட பங்குகளிலோ அல்லது முதலீட்டு நிறுவனங்களிலோ தங்கள் சேமிப்பை மூலதனமாக இடுவதுதான் இன்றுள்ள சூழலுக்குப் புத்திசாலித்தனமான முடிவு'' என்ற வகையில் நடுத்தர வர்க்கத்தினர் தொடர்ச்சியாக மூளைச் சலவை செய்யப்படுகின்றனர். மிகச்சிறிய அளவில் சேமிக்கும் சக்தியுடையவர்களைக் கூட பொறி வைத்துப் பிடிக்கும் வண்ணம் ''பரஸ்பர நிதி'த் தொழில் நிறுவனங்கள் தங்கள் காய்களை நகர்த்துகின்றன. மிகைப்படுத்தப்பட்ட அளவில் இலாப ஈவு தருவதாக மூணு சீட்டுக்காரனைப் போல வாக்குறுதி அளித்து விளம்பரங்களை வெளியிடுகின்றன, இவை.

உதாரணமாக மூன்றே நாட்களில் 1000 கோடி அளவுக்கு இந்தியாவில் மூலதனத்தைத் திரட்டியுள்ள ''மார்கன் ஸ்டான்லி'' எனும் அந்நிய நாட்டு நிறுவனம், தனது பங்குதாரர்களுக்கு 26 சதவீதம் இலாப ஈவு தருவதாக அறிவித்துள்ளது. இதற்கு இந்நிறுவனம் 250 கோடி ரூபாய் அளவு இலாபம் ஈட்ட வேண்டும். ஆனால் வருடத்திற்கு இந்நிறுவனத்தால் 58 கோடிதான் இலாபம் ஈட்ட முடியும். பின் எப்படி தனது வாக்குறுதியை நிறைவேற்றும் என்பது அந்நிறுவனத்திற்கே வெளிச்சம்!



அடுத்து, வழக்கமான தொழில்கள் என்றில்லாது கணிப்பொறி தொழில் நுட்பம், இறால் வளர்ப்பு பண்ணை, ஏற்றுமதி தொழில் என ''காற்று பலமாக வீசும்'' தொழில்களைத் தொடங்கப் போவதாக அறிவிக்கும் பெயர்ப் பலகை கம்பெனிகள்; இவை புற்றீசல் போல் பங்குச் சந்தையினுள் நுழைந்து பொது மக்களிடமிருந்து முதலீட்டைக் கோருகின்றன. பம்பாய் பங்குச் சந்தையில் மட்டும் கடந்த வருடம் இதுபோன்ற 74 போலி நிறுவனங்கள் 373 கோடி பெறுமான அளவுக்கு பங்கு பத்திரங்களை வெளியிட்டுள்ளன.

இதோடு சில தனியார் நிறுவனங்கள் ''தேக்கு மரம் - பழ மரங்கள் வளர்ப்புத் திட்டம்'', ''கோடை வாசஸ்தலங்களில் விடுமுறையைக் கழிக்க தங்குமிடங்கள்'' என விளம்பரம் செய்து முதலீடுகளைக் கோருகின்றன. ''தங்கள் பழப் பண்ணையில் 25000/- முதலீடு செய்தால், 20 வருடம் கழித்து 12 லட்ச ரூபாய் இலாபமடையலாம்'' என்கிறது வி.ஜி.பி. நிறுவனம். ''கோடை வாசஸ்தல'' நிறுவனங்கள் 99 வருடங்களுக்கு முதலீடு செய்தவர் இறந்துவிட்டால் கூட, அவரது வாரிசு - தங்கள் சலுகைகளை அனுபவிக்கலாம் என்கின்றன. ''20 வருடங்கள் கழித்து பணத்தின் மதிப்பு, இவர்கள் குறிப்பிடும் கால அளவு அந்நிறுவனம் தொடருவதற்கான உத்தரவாதம்'' என்பது பற்றியெல்லாம் இவை வாய் திறப்பது கிடையாது.

இந்திய மூலதனச் சந்தையின் இந்த ''திடீர்'' ஏற்றத்தை புதிய பொருளாதாரக் கொள்கையின் வெற்றியாகச் சித்தரிக்கிறது ராவ் அரசு. ஆனால் தொழிற்துறை வளர்ச்சியோ எதிர்பார்க்கப்பட்ட 7 சதவிகிதத்தை எட்ட முடியாமல், 1.5 சதவிகிதத்தைத் தாண்டுவதற்கே மூச்சுத் திணறுகிறது. மேலும் இப்படி குவிக்கப்படும் மூலதனம் புதிய தொழில்களையோ, வேலை வாய்ப்புகளையோ உருவாக்கப் போவதும் கிடையாது. இந்தியத் தொழில் துறையின் குரல் வளையை அந்நிய நிறுவனங்கள் மேலும் இறுக்கிப் பிடிப்பதோடு, தாங்கள் அடையும் இலாபங்களைச் சட்டபூர்வமாக எடுத்துச் செல்லவும்தான் வாய்ப்பாக அமையும்.

மேலும் இந்நிறுவனங்கள் தங்கள் மூலதனத்தை எப்போது வேண்டுமானாலும் திருப்பி தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றுவிடலாம். இதற்கு எந்தத் தடையும் கிடையாது. அப்படி ஒரு நிலை வருமாயின் அது பங்கு மூலதனச் சந்தையை அதல பாதாளத்தில் தள்ளுவதுடன், நடுத்தர 'அப்பாவி' முதலீட்டாளர்களை நடுத்தெருவிற்கு கொண்டு வந்துவிடும். இப்படியான பின்விளைவுகள் இருக்கும் பொழுது ராவ் அரசோ, ''அந்நிய செலாவணி'' உயரும் என தனது செயலுக்கு நியாயம் கற்பிக்கிறது. ஆனால் ஒரு பிரிவு தரகர்களே இந்நிலையை கிழக்கிந்தியக் கம்பெனியின் வருகையோடு ஒப்பிட்டு ராவுக்குச் சரியாகவே பதிலடி கொடுத்துள்ளனர்.

— ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

## நாட்டை அடகுவைத்து ஈரச்சாணி இறக்குமதி

அன்னிய இறக்குமதிக்கு கதவை அகலத் திறந்து விட்டுள்ள காங்கிரசு துரோகிகள், இப்போது ஹாலந்து (நெதர்லாந்து) நாட்டிலிருந்து மாட்டுச் சாணியையும் இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ள னர். இதன்படி ஆண்டுக்கு ஒரு கோடி டன் டச்சு நாட்டு ஈரச் சாணி 450 கோடி ரூபாய் செலவில் குஜராத்திலுள்ள கண்ட்லா துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும். பின்னர் அதை உலர்த்தி நாடு முழுவதும் விவசாயிகளுக்கு எருவாக விற்பனை செய்யப்படும்.

இதிலே கொடுமை என்னவென்றால், இந்தச் சாணி நச்சுத் தன்மை கொண்டதாகும். நெதர்லாந்தில், கறவை மாடுகள் அதிகமாக பால் கொடுப்பதற்காக வைக்கப்படும் தீவனத்தில் நச்சு ரசாயனப் பொருட்கள் கலக்கப்பட்டுள்ளன. இதனால் சாணியும் நஞ்சாகிப் போவதால், அதை இந்தியாவில் ''ஃபாரீன்'' சரக்காக கொண்டுவந்து கொட்டுகின்றனர். நெதர்லாந்து, கடல் மட்டத்தைவிட தாழ்வான நாடு என்பதால், நச்சு சாணியை கடலில் கொட்டினாலும் அது மீண்டும் நாட்டுக்குள் புகுந்துவிடும் அபாயம் உள்ளது. மேலும் ஐரோப்பிய நாடுகளது சுற்றுச் சூழல் பாதுகாப்பு விதிகளின்படி நச்சுக் கழிவுகளைக் கடலில் கொட்டக்கூடாது. எனவேதான் அந்தச் சாணியைக் கொண்டு வந்து இந்தியாவில் கொட்டுகிறது. இந்த உண்மைகளை மூடி மறைத்துவிட்டு, காங்கிரசு துரோகிகள் இந்தியாவை நச்சுக் குப்பைத் தொட்டியாக்கிவிட்டு ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாச சேவை செய்யக் கிளம்பி விட்டனர்.


இந்த நச்சுச் சாணியை இறக்குமதி செய்யும் தரகு வேலையை தமிழகத்தின் பிரபல சர்க்கரை நிறுவனமான ஈ.ஐ.டி. பாரி நிறுவனம் மேற்கொள்ளப் போகிறது. இனி ''ஃபாரீன்'' சாணியிலிருந்து தயாரிக்கப்படும் எரு மட்டுமல்ல; வாசனை விபூதியும் நச்சுத் தன்மை கொண்டதாகவே இருக்கும்.

**''...இனி பன்னி சாணத்தையும் இறக்கிடப் போறான், அதை ஃபாரீன் சரக்குன்னு வித்திடப் போறான்''**

என்று ஈராண்டுகளுக்கு முன்னர் மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர், நாடு அடகு போனதைப் பற்றிய தமது பிரச்சாரப் பாடலில் வேடிக்கையாகக் குறிப்பிட்டனர். இன்று அது உண்மையாகி விட்டது.

## பத்திரிகைகள் மீது பாயும் பாசிச சிவசேனா

சிறுபான்மை முஸ்லிம்களையும், பிழைப்புக்காக பம்பாயில் குடியேறிய தமிழர்களையும் தொடர்ந்து தாக்கி வரும் இந்துவெறி-இனவெறி பிடித்த சிவசேனா, இப்போது பத்திரிகையாளர்கள் மீதும் ''தர்மயுத்தம்'' நடத்தி வருகிறது. கடந்த பிப்ரவரி 19-ந் தேதியன்று மகாராஷ்டிராவின் அவுரங்காபாத் நகரில் சிவசேனா தலைவர் பால்தாக்கரே, பத்திரிகையாளர் கூட்டத்தைக் கூட்டி, அதில் பங்கேற்ற ''டெய்லி சிட்டிசன்'' நாளேட்டின் ஆசிரியரான முஸ்தபா ஆலம் என்பவரை ''வெளியே போடா!'' என்று விரட்டியதோடு, தனது குண்டர்களை ஏவி அவரைத் தாக்குமாறு உத்திரவிட்டார். சிவசேனா குண்டர்கள் நடத்திய மிருகத்தனமான தாக்குதலில் முஸ்தபா



சிவசேனா குண்டர் களால் தாக்கப்பட்ட பத்திரிக்கை ஆசிரியர் நிகில் வாக்லே.

ஆலம் படுகாயமடைந்ததோடு, இதைத் தடுக்கப் போன இதர பத்திரிகையாளர்களுக்கும் அடி விழுந்தது. இத்தனைக்கும் '' அவுரங்காபாத்தில் சிவசேனா தலைவருக்கு எதிர்பார்த்த வரவேற்பு இல்லை'' என்று செய்தி வெளியிட்டதுதான் அப்பத்திரிக்கையாளர் செய்த குற்றம்! சிவசேனாவின் இக்காட்டுமிராண்டித் தனத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய பத்திரிகையாளர்களும் நிருபர்களும் இனி சிவசேனாவின் நிகழ்ச்சிகள், பேட்டிகளைப் புறக்கணிப்பது என்று முடிவெடுத்துள்ளனர். சிவசேனாவினால் பத்திரிகை சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தைப் பற்றி ''பிரஸ் கவுன்சிலில்'' முறையிட்டதோடு, நீண்ட போராட்டத்துக்குப் பிறகு சிவசேனா தலைவர் பால் தாக்கரே மீது அவுரங்காபாத் போலீசு நிலையத்தில் குற்ற வழக்கையும் பதிவு செய்துள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த சிவசேனா குண்டர்கள் டைம்ஸ் ஆப் இந்தியா, ஜன்சத்தா, அப்னாமகாநகர், ஆஜ்தினக், டெய்லி சிட்டிசன் ஆகிய பத்திரிகைகளை நாங்கள் புறக்கணிப்போம் என்று அப்பத்திரிகைகளை நடுவீதியில் கிழித்துக் கொளுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். இப்பத்திரிகை முகவர்களையும், விற்பனை செய்யும் பெட்டிக் கடைக்காரர்களையும் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கினர். இது தவிர, சிவசேனாவின் பாசிச கோர முகத்தை அம்பலப்படுத்தும் பத்திரிக்கையாளர்கள், நிருபர்களை தனிப்பட்ட முறையில் மிகவும் ஆபாசமான, கொச்சையான கீழ்த் தரமான வசவுகளால் சாடி தமது நாளேடுகளில் சிவசேனா எழுதி வருகிறது. பெண் நிருபர்களை, ஆங்கிலம் படித்த விபச்சாரிகள், தினம் ஒரு கணவனைத் தேடும் பத்தினிகள் என்று வக்கிரமான முறையில் அவதூறு செய்து வருகிறது. இவற்றை, இந்து தர்மத்தையும் ஒழுக்கத்தையும் காக்க தாங்கள் நடத்தும் ''தர்மயுத்தம்'' என்று சிவசேனா நியாயப்படுத்தி வருகிறது.

இத்தனைக்கும் பிறகும் மகாராஷ்டிரத்தை ஆளும் காங்கிரசு, சிவசேனா மீது எந்த நடவடிக்கையுமின்றி கைகட்டி நிற்கிறது. பாபர் மசூதி இடிக்கப்பட்


படிப்பகம்

www.padippakam.com

டதும் சிவசேனா குண்டர்கள் சிறுபான்மை முஸ்லிம்கள் மீதும், தமிழர்கள் மீதும் நடத்திய கொலை வெறியாட்டங்களைப் பற்றிய கிரிமினல் வழக்குகளைக் கிடப்பில் போட்டு விட்டது. அதே சமயம், இந்து வெறி பாசிசத்தின் எதிர் விளைவாக பம்பாயில் கடந்த ஆண்டு நடந்த வெடிகுண்டு பயங்கரத்தைப் பற்றிய விசாரணையை மட்டும் நடத்தி வருகிறது. சிவசேனாவின் சகிப்புத்தன்மையற்ற மூர்க்கத்தனமான பாசிசத் தாக்குதலாலும், அதனுடன் கள்ளக் கூட்டு சேர்ந்து அனுசரணையாக நடந்து கொள்ளும் காங்கிரசின் துரோகத்தாலும், இந்துவெறி பாசிசம் வேரூன்றி வேகமாகப் பற்றிப் படர்ந்து வருவதையே நிலைமைகள் சுட்டிக் காட்டுகின்றன.

**'மார்க்சிஸ்டு'கள் பத்திரிக்கையில் வெளிவந்த கொக்கோ கோலா விளம்பரம்.**

## மேடைக்கு அமெரிக்க எதிர்ப்பு தாகத்துக்கு கோகோ-கோலா

கோகோ-கோலா குளிர்பானம் என்பது அமெரிக்க ஆதிக்கத்தின் சின்னம் என்று சாடிவந்த 'மார்க்சிஸ்டுகள்' இப்போது தமது வங்க நாளேடான "ஜன சக்தி"யில் கோகோ-கோலாவின் பலவண்ண விளம்பரத்தை முழுப்பக்க அளவுக்கு வெளியிட்டு வருகின்றனர். பல்வேறு முதலாளித்துவப் பத்திரிகைகள் இப்போலிகளின் சந்தர்ப்பவாதத்தைக் கேலி செய்யத் தொடங்கியதும், "இது கட்சியின் மார்க்சியக் கண்ணோட்டத்தைக் கைவிடும் செயல் அல்ல; நாங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியானவர்கள். கம்யூனிச நாடான சீனாவில் கூட கோகோ கோலா விளம்பரம் உள்ளது. இதனால் சீனா, ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கைவிட்டுவிட்டதாக கருத முடியுமா? இந்திய மக்கள் மட்டுமின்றி மார்க்சிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் கூட கோகோ கோலா குடிக்கிறார்கள். நாங்கள் விளம்பரம் வெளியிடா விட்டாலும் இது நடக்கத்தான் செய்யும். "கோல்கேட்" பற்பசை விளம்பரத்தை வெளியிடும் போது, கோகோ கோலா விளம்பரத்தை வெளியிடுவதில் தவறேதுமில்லை. இரண்டுமே பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் தானே?" என்று வெட்கமின்றி நியாயப்படுத்துகிறார், 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மத்தியக்கமிட்டி உறுப்பினரான பிஸ்வாஸ்.






ஆனால் போலிகளின் இச்சந்தர்ப்பவாதம் அக்கட்சிக்குள்ளேயே எதிர்ப்பைத் தோற்றுவித்துள்ளது. மே.வங்க தகவல் துறை அமைச்சரான காந்திபிஸ்வாஸ், "இத்தகைய விளம்பரங்களை வெளியிடக்கூடாது; மார்க்சிஸ்ட் கட்சியினர் கோகோ கோலாவை குடிக்கக் கூடாது" என்று கட்சி முடிவை எதிர்த்துக் கலகம் செய்கிறார். தமிழக 'மார்க்சிஸ்டு'ளோ, "கோகோ கோலாவைப் பகிஷ்கரிக்க வேண்டும்; அது பன்னாட்டு ஏகபோக நிறுவனம் என்பதால் மட்டுமல்ல; சட்டவிதிகளை மீறி குழந்தைத் தொழிலாளர்களைக் கொண்டு இக்குளிர் பானத்தைத் தயாரிக்கிறது " என்று 'தீக்கதிர்' நாளேட்டில் அறைகூவல் விடுத்துள்ளனர். ஆனால் இவர்களே தமது "செம்மலர்" மாத இதழில் மற்றொரு ஏகபோக குளிர்பானமாகிய "பெப்சிகோலா"வை பலவண்ணத்துடன் முழுப்பக்க அளவுக்கு விளம்பரம் செய்கின்றனர்.

வியாபாரத்துக்கு அந்நிய விளம்பரம்; கொள்கைக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதே பிழைப்புவாதிகளாகிவிட்ட போலிக்கம்யூனிஸ்டுகளின் அரசியலாகி விட்டது. ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்திவிட்டு தாகத்துக்கு கோகோ கோலா குடிக்கக் கிளம்பிவிட்ட இச் சந்தர்ப்பவாதிகளிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

## ஈழத்தமிழ் குழுக்களின் துரோகம் கிழக்கு மாகாணம் பிரியும்

ஈழத்தின் கிழக்கு மாகாணத்தில் 11 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த மார்ச் 1 ம் தேதியன்று உள்ளூராட்சித் தேர்தல் நடந்துள்ளது. இத்தேர்தலில் ஈழ துரோகக் குழுக்களான டெலோ(TELO), ப்ளாட் (PLOT), ஈ.பி.டி.பி (EPDP) ஈராஸ் (EROS) ஆகியவையும்; முஸ்லிம் காங்கிரசும், ஆளும் சிங்கள இனவெறிக் கட்சியான யு.என்.பி.யும் எதிர்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் போட்டியிட்டன. இதில் தமிழர் வாழும் பகுதிகளில் ஈழ துரோகக் குழுக்களும், முஸ்லிம்கள் பகுதியில் முஸ்லிம் காங்கிரசும் கணிசமான இடங்களைக் கைப்பற்றி யு.என்.பி. கட்சியை வீழ்த்தியுள்ளன. மட்டக் கிளப்பில் துரோகக் குழுக்கள் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றிய போதிலும் திரிகோணமலை பிரதேச சபைத் தேர்தலில் ஒரு இடம் கூட கைப்பற்றவில்லை. வெறும் நகரசபையை மட்டுமே கைப்பற்றியுள்ளன. வவுனியா நகரசபையில் "ப்ளாட்" குழு பெரும் பான்மையைப் பெற்றுள்ளது. மொத்தம் 36 பிரதேச சபைகளுக்கு நடந்த தேர்தலில் ஈழ துரோகக் குழுக்கள் 10 இடங்களையும், ஆளும் யு.என்.பி. கட்சி 17 இடங்களையும், முஸ்லிம் காங்கிரசு 6 இடங்களையும், சுதந்திரக் கட்சி 3 இடங்களையும் கைப்பற்றியுள்ளன. இத்தேர்தலை புலிகள் மட்டுமின்றி, ஈழத்துரோகிகளான ஈ.பி.ஆர்.எல்.எப் (EPRLF) மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) ஆகியனவும் புறக்கணித்துள்ளன.

இத் தேர்தலில் தாங்கள் போட்டியிடாவிட்டால், ஆளும் யு.என்.பி. கட்சி வெற்றி பெற்று வடக்கு-


படிப்பகம்

www.padippakam.com

கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டு விடும் என்று துரோகக் குழுக்கள் நியாயம் கற்பிக்கின்றன. இதே காரணத்தைக் கூறித்தான் முன்பு தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) மாகாணசபை தேர்தல்களில் போட்டி யிட்டது. அப்போது இவர்களை அவர்கள் துரோகி கள் என்று கூறியதோடு, தேர்தலைக் குலைக்கவும் முயன்றனர். ஆனால் இப்போது அதே காரணத்தைக் கூறி துரோகக் குழுக்கள் தேர்தலில் வெட்கமின்றி பங்கேற்றுள்ளன.

தேர்தலைப் புறக்கணித்த ஈ.பி.ஆர்.எல்.எப் (EPRLF) தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக் கையை இத்தேர்தல் சிதைப்பதாக இருப்பதால் தாம் தேர்தலைப் புறக்கணித்ததாகக் கூறுகிறது. ஆனால் இதே துரோகக் குழு தான், சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை சிதைத்த மாகாணசபை தேர்தலில் போட்டியிட்டதோடு, நாடாளு மன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு எம்.பி. பதவியையும் அனுபவித்து வருகிறது. இப்படி தமது பாத்திரங்களை மாற்றிக் கொண்டு ஈழத்துரோகிகள் அரசாங்க சலுகை, பதவி, சன்மானங்கள் எனும் எலும்புத் துண்டுக்காக நாயாய் அலைந்து கொண்டிருக்கின்றன.

இதைச் சாதகமாக்கிக் கொண்டு, வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கும் வகையில் கிழக் கில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும் நோக் கத்துடன், அதற்கான முன்னேற்பாடாகவே தற்போ தைய பிரதேச சபை தேர்தல்களை சிங்கள இனவெறி அரசு நடத்தியுள்ளது. ''வடக்கு-கிழக்கு மாகாணங் களை உள்ளடக்கிய ஈழத்தில் தேசிய இனப் பிரச் சினை எதுவும் கிடையாது; கிழக்கில் அமைதியும் ஜனநாயகமும் நிலவுகிறது; வடக்கில் புலிகளின் பயங்கரவாதம் நீடிக்கிறது''; என்ற ஒரு போலியான தோற்றத்தை உலகுக்குக் காட்டி தன்னை ஒரு ஜனநா யக அரசாக காட்டிக் கொள்வதில் இலங்கை அரசு வெற்றி பெற்றுள்ளதையே தற்போதைய தேர்தல் நிரு பித்துக் காட்டுகிறது. அரசு தயவில் 'புரட்சி' செய்யும் தமிழ்க் குழுக்களின் துரோகத்தனத்தால் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையும் புறக்கணிக்கப்பட்டு, கிழக்கு மாகாணத்தை ஈழத்திலிருந்து பிரிக்கும் அபாயம் தான் பெருகியுள்ளது. படுகொலை, இனவெறி பயங்க ரவாதத் தாக்குதல், பேரிழப்புகளை அனுபவித்து வரும் தமிழ் மக்களுக்கு, பத்தாண்டுகளுக்குப் பிற கும் எந்தத் தீர்வுமில்லை.

## ஆசிரியர்களின் பட்டினிப் போராட்டம் போலிகளின் அலட்சியம்

உலகிலேயே மிக நீண்ட உண்ணாவிரதப் போராட்டம் எது என்றால், அது மே.வங்கத்தில் வேலையிழந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் நடத் தும் போராட்டமாகத்தான் இருக்க முடியும். இவ் வாண்டு மார்ச் 20-ந் தேதி முடிய அவர்களது போராட்டம் 1625-வது நாளைத் தொட்டு விட்டது. கவர்னர் மாளிகை அருகே கிழக்கு எஸ்பிளனேடு பகுதியில், சாலை ஓரத்தில் கோணிகள் -பாலிதீன் பைகளையே கூரையாக்கிக் கொண்ட ஒரு சிறு கொட் டகையில் அவர்களது தொடர் உண்ணாவிரதப் போராட்டம் இன்னமும் நீடித்துக் கொண்டிருக்கிறது.

மே.வங்கத்தில், படித்த இளைஞர்கள் கிராமங்க ளில் ஆரம்பப் பள்ளியைத் தொடங்கி நடத்தினால், அப்பள்ளியை அரசு அங்கீகரிக்கும் போது, அவர் களுக்கு அப்பள்ளியில் நிரந்தர வேலை அளிக்கப்




படும் என்ற நடைமுறை 1975 வரை நீடித்தது. ஆனால், பின்னர் ஆட்சிக்கு வந்த 'இடது' முன்னணி இத்திட்டத்தை நிறுத்தி விட்டது. ஏற்கனவே துவங்கி நடத்தப்பட்ட ஆரம்பப்பள்ளிகளை அங்கீகரித்த போதிலும், பள்ளிகளை துவக்கி நடத்திய ஆசிரியர் களை ஏற்க மறுத்து வேலையிலிருந்து நீக்கி விட்டது. வேலையிழந்த ஆசிரியர்கள் தொடர்ந்து போராடியும் அவர்களது கோரிக்கை ஏற்கப்படவில்லை. வீதியில் வீசியெறியப்பட்ட ஆசிரியர்கள் கூலி வேலை செய் தும், காட்டிலே மரம் வெட்டிப் பிழைத்தும் அவல வாழ்வு நடத்துகின்றனர்.

தங்களை ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களாக நிய மிக்கக் கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தியும், 'இடது' முன்னணி அரசு செவிசாய்க்காத நிலையில், நான்காண்டுகளுக்கு முன்பு தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து நடத்தி வருகின்றனர். ஒவ்வொரு முறையும் இரு ஆசிரியர்கள் ஒருவார காலத்துக்கு வெறும் தண்ணீரை மட்டும் குடித்துக் கொண்டு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்து கின்றனர். ஒருவாரம் முடிந்ததும் போலீசார் வந்து அவர்களை அருகிலுள்ள மருத்துவமனைக்கு இழுத் துச் செல்கின்றனர். அடுத்த இரு ஆசிரியர்கள் உண் ணாவிரதத்தைத் தொடர்கின்றனர். இப்படி கடந்த நான்காண்டுகளுக்கும் மேலாக இப்போராட்டம் தொடர்கிறது.

**1625 நாட்களாக தொடரும் மே.வ. ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டம்.**

'இடது' முன்னணியின் கல்விக் குழுத் தலைவ ரான பிமன்போஸ், ''இவர்களை ஆசிரியர்கள் என்றே ஏற்க முடியாது. அரசு தீர்மானித்துள்ள கல்விச் சட்ட விதிகளின் படி இவர்கள் ஆசிரியர்களாக தேர்ச்சி பெற்றவர்கள் அல்ல. 15 ஆண்டுகளாக இவர் கள் வேறு தொழிலைச் செய்து வரும்போது எப்படி ஆசிரியர்களாகக் கருதமுடியும்?'' என்று எதிர் வாதம் செய்கிறார். ''இது முந்தைய அரசுகள் மேற்கொண்ட தவறான கொள்கையின் விளைவு; அதற்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது'' என்கிறார் பள்ளி-கல்வி அமைச்சரான அசிண்டோராய். 'இடது' முன்னணி அரசின் வறட்டுத் தனமான பிடிவாதத்தால் 2500க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் 15 ஆண்டுக்கும் மேலாக பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர். புரிந்து கொள் ளுங்கள்; இதுதான் போலிக் கம்யூனிஸ்டுகளின் 'புரட் சிகர' ஆட்சியின் லட்சணம்!


படிப்பகம்

www.padippakam.com

# திண்பது நரமாமிசம் பேசுவது புலால் மறுப்பு

## ஆயுதக் குவிப்பிலும் ஆக்கிரமிப்பிலும் ஈடுபட்டுவரும் அமெரிக்கா, அணு ஆயுத பீதியூட்டி வளரும் நாடுகளை மிரட்டிப் பணியவைக்க முயல்கிறது.

ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்! அதிலும் ஏகாதிபத்திய ஓநாய்கள் உலக நலன்குறித்த ஆழ்ந்த அக்கறையோடு இப்போது ஒப்பாரியே வைக்கின்றன. மிகவும் சக்தி வாய்ந்த அணு ஆயுதங்களை வைத்துக் கொண்டு உலகையே அச்சுறுத்தி வரும் ஏகாதிபத்திய வல்லரசுகள், ஏழை நாடுகள் அத்தகைய ஆற்றலைப் பெற்றுவிட்டால் உலகுக்கே பேராபத்தாகிவிடும் என்று பெருங்கூச்சல் போட்டு வருகின்றன. ஏற்கனவே ஜனநாயகத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவது, போதை மருந்து -பயங்கரவாதத்தை முறியடிப்பது, மனித உரிமைகளைக் காப்பது என்ற பெயரில் ஆக்கிரமிப்பு யுத்தங்களை நடத்திவரும் ஏகாதிபத்தியங்கள், இப்போது அணு ஆயுத பரவல் தடுப்பு என்கிற முகாந்திரத்தின் பேரில் ஏழைநாடுகளை அச்சுறுத்தி வருகின்றன.

### அமெரிக்காவின் கையில் மற்றொரு ஆக்கிரமிப்பு ஆயுதம்

அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி ஆகிய ஏகாதிபத்திய வல்லரசுகள் தவிர, சீனா, இந்தியா, பாகிஸ்தான், ஈரான், ஈராக், வட கொரியா, ஆஸ்திரேலியா, லிபியா முதலான நாடுகளும் அணு ஆற்றலைப் பெற்றுள்ளன. அணுவாற்றலைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் இந்நாடுகள், செறியூட்டப்பட்ட புளுட்டோனியத்தைக் கொண்டு அணுகுண்டுகளைத் தயாரிக்க முடியும். இவற்றில் சில நாடுகள் வெளிப்படையாகவும், சில நாடுகள் ரகசியமாகவும் அணு ஆயுதங்களைத் தயாரித்து வைத்துள்ளன. இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா, ஈரான் முதலான நாடுகள் தாங்கள் அணு ஆயுத சோதனைகளை நடத்தியுள்ளோமே தவிர, அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடவில்லை என்று அறிவித்துள்ளன. சர்வதேச அணுசக்தி ஏஜென்சி, இந்நாடுகளின் அணு உலைகளை ஆய்வு செய்து, ஆயுதங்கள் ஏதும் தயாரிக்கப்படவில்லை என்று சாட்சியமும் அளித்துள்ளது. ஆனால் அமெரிக்க வல்லரசு இவற்றை ஏற்க மறுக்கிறது.

ஏனெனில் மின்சாரம் தயாரிப்பதற்கான அணு உலைகளிலேயே சில மாற்றங்களைச் செய்து புளுட்டோனியத்தைக் கொண்டு அணு ஆயுதங்களைத் தயாரிக்க முடியும். சில நாடுகள் இவ்வாறு ரகசியமாக அணு ஆயுதங்களைத் தயாரித்து வைத்துள்ளன. இவை தனக்கு எதிராகத் திரும்பிவிடுமோ என்று அமெரிக்கா அஞ்சுகிறது. எனவேதான் ஏகாதிபத்திய வல்லரசுகளைத் தவிர வேறு எந்த பின்தங்கிய நாடும் அணு ஆயுதச் சோதனைகளை நடத்தக் கூடாது என்று மிரட்டுகிறது. ரஷியாவுடனான ''பனிப்போர்'' முடிவுக்கு வந்துவிட்ட நிலையில், அணுவாற்றல் பெற்ற நாடுகளால் உலகில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக பீதியூட்டுகிறது. அணு ஆயுதப் பரவலைக் கட்டுப்படுத்துவது, அணு ஆயுத சோதனைகளை நிறுத்தி வைப்பது, பிற நாடுகளுக்கு அணுசக்தி தொழில் நுட்ப பரிமாற்றத்துக்குத் தடை விதிப்பது, படிப்படியாக அணு ஆயுதங்களையே முற்றாக அழிப்பது முதலானவற்றை உள்ளடக்கிய அணு ஆயுதப்பரவல் தடுப்பு (NPT) ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு ஏழை நாடுகளை மிரட்டி வருகிறது.

இதன் மூலம் போர்களற்ற அமைதியான உலகைக் கட்டியமைக்க முயற்சிப்பதாக அமெரிக்கா நாடகமாடினாலும் உண்மையில் இது, அமெரிக்காவின் கையில் கிடைத்துள்ள மற்றுமொரு மறுகாலனியாதிக்க ஆயுதமாகும். எந்த நாடு அமெரிக்காவுக்கு கீழ்ப்படிய மறுக்கிறதோ, அந்த நாட்டின் மீது அணு ஆயுதப் பரவல் தடுப்பு எனும் ஆயுதம் ஏவப்படுகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டு சேர்ந்து கொண்டு ஐ.நா. மன்றமும் அந்நாட்டைத் தனிமைப்படுத்தி பொருளாதாரத் தடைகளை விதிக்கிறது. ஏற்கனவே ஈராக் மீது அணு ஆயுத - ரசாயன ஆயுதத் தடுப்பு என்கிற பெயரில் தாக்குதல் நடத்திய அமெரிக்கா, இப்போது இந்தியா, பாகிஸ்தான் மீதும் குறிப்பாக வடகொரியா மீதும் இத்தகைய தாக்குதலுக்குத் தீவிரமாக முயற்சித்து வருகிறது.



### வடகொரியாவை மிரட்டும் அமெரிக்க வல்லரசு

சீனாவுக்குத் தென் கிழக்கேயுள்ள சிறிய தீபகற்ப நாடுதான் கொரியா. 1950-களில் நடந்த தேச விடுதலைப் போரின் போது, வடபகுதியில் கம்யூனிஸ்டுகளும், தேச பக்தர்களும் ஏகாதிபத்தியவாதிகளை வீழ்த்தி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினார். தென் பகுதியில் விடுதலைத் தீ பரவுவதற்குள் அமெரிக்க ஏகாதிபத்தியம் அதை ஆக்கிரமித்து தனது பொம்மையாட்சியை நிறுவி நாட்டைத் துண்டாடியது. அன்றிலிருந்து கம்யூனிஸ்டுகள் தலைமையிலான வடகொரியா எனவும், அமெரிக்க கைக்கூலிகளின் தலைமையிலான தென்கொரியா எனவும் இரு நாடுகளாகியது.

ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்தியைக் கொண்ட நவீன வகை காலனியாக தென் கொரியா மாறியுள்ள அதே சமயம், வட கொரியா, போலி சோசலிச பாணியிலான, அரசுத் துறை ஏகபோக முதலாளித்துவ உற்பத்தியைக் கொண்ட அதிகார வர்க்க இராணுவ கும்பலின் ஆட்சியைக் கொண்டதாக உள்ளது. அமெரிக்காவின் ஒற்றைத் துருவ பொருளாதார ஆதிக்க நோக்கங்களுக்கு ஏற்ப, போலி சோசலிசக் கொள்கைகளைக் கைவிட்டு அந்நிய முதலீட்டிற்கும் தனியார் முதலாளித்துவ சந்தைக்கும் கதவுகளை அகலத் திறந்துவிட தயக்கம் காட்டுகிறது. இதன் காரணமாகவே கடந்த ஓராண்டு காலமாக அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு வட கொரியாவை அமெரிக்க வல்லரசு தொடர்ந்து மிரட்டி வருகிறது.

அமெரிக்காவின் குற்றச்சாட்டைத் தொடர்ந்து தமது நாட்டின் அணு உலைகளை சர்வதேச அணு சக்திக் கமிஷன் பார்வையிட 1992 இறுதியில் வட கொரியா அனுமதித்தது. அக்கமிஷன் இரண்டுமுறை வருகை தந்து அணு உலைகளைப் பரிசோதித்து, அவை மின்சக்தி தயாரிக்க மட்டுமே பயன்படுத்தப்படுவதாக அறிக்கை அளித்தது. ஆனால் அமெ



படிப்பகம்

www.padippakam.com

ரிக்கா இதை ஏற்கவில்லை. ஈராக்கில் செய்தது போலவே, அமெரிக்க ஆதிக்கத்தின் கீழான மற்றொரு குழுவை இரு முறை அனுப்பி வைத்து சோதித்தது. அக்குழுவும் அமெரிக்க ஏற்பாட்டின்படி, எதிர்காலத்தில் வடகொரியா அணு ஆயுதங்களைத் தயாரிக்க சாத்தியக் கூறுகள் உள்ளதாக கூறியது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு, வடகொரியா ரகசியமாக அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வந்தது. வடகொரியாவைக் கருப்புப் பட்டியலில் சேர்த்து பொருளாதாரத் தடைகளை விதித்தது.

இருப்பினும், அமெரிக்க மிரட்டலுக்கு வடகொரியா பணியத் தயாராக இல்லை. "அணு ஆயுத உற்பத்தியோ, சோதனையோ நடத்தாத நாங்கள் அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மாட்டோம்" என்று உறுதியாக மறுத்துவிட்டது. இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா, தனது விசுவாச நாடான தென்கொரியாவைத் தூண்டிவிட்டது. அதன்படி தென்கொரியா, "அணு ஆயுதங்களை வட கொரியா தயாரித்து வைத்துள்ளது; இதனால் எங்கள் நாட்டுக்கு மட்டுமின்றி கிழக்கு, தென்கிழக்காசியாவுக்கே பேரபாயம் ஏற்பட்டுள்ளது" என்று கூப்பாடு போட்டு ஐ.நா. மன்றத்தில் முறையிட்டது.

அதைத் தொடர்ந்து கடந்த ஆண்டின் இறுதியில், சர்வதேச அணுசக்திக் கமிஷனின் பரிசோதனைக்கு வடகொரியா தனது நாட்டின் 7 அணு உலைகளையும் உட்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா மிரட்டியது. அணு உலைகளைப் பரிசோதிக்க வட கொரியா உடன்படாவிட்டால், தென்கொரியாவில் "பேட்ரியாட்" ஏவுகணைகளைக் கொண்டு வந்து குவிப்போம் என்று கொக்கரித்தது. அமெரிக்க நாடாளுமன்றம் வட கொரியா மீது கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிபர் கிளிண்டனுக்கு முழு அதிகாரம் அளிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது. வட கொரியாவைப் பணிய வைக்க, கொரிய தீபகற்பத்தில் அமெரிக்காவின் அணு ஆயுத நீர் மூழ்கிக் கப்பற்படையை நிறுத்துவது; இதற்கென நடப்பு ஆண்டில் 600 கோடி டாலர் செலவிடுவது என ஓர் ஆக்கிரமிப்புப் போருக்கான முயற்சிகளில் அமெரிக்கா இறங்கியது. இதுதவிர இப்பகுதியில் அமெரிக்காவின் ஒரு லட்சம் துருப்புக்களும் கடற்படையும் வடகொரியாவைக் கண்காணிக்கும் பணியில் இறக்கிவிடப்பட்டன. மேலும், தென்கொரியாவும் அமெரிக்காவும் கூட்டாக இப்பகுதியில் போர் ஒத்திகை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கின. சர்வதேசப் பரிசோதனைக்கு தனது நாட்டு அணுஉலைகளை உட்படுத்தாதவரை ஐ.நா. மன்றம் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று அமெரிக்கா ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் அவசரத் தீர்மானம் கொண்டு வந்தது. கடந்த பிப்ரவரி மாத மத்தியில் அமெரிக்க அதிபர் கிளிண்டனும், மற்றொரு ஏகாதிபத்திய வல்லரசான ஜப்பானின் பிரதமர் கொசாகோவாவும் வடகொரியாவுக்குத் தண்டனை அளிக்கும் நடவடிக்கைகளைக் குறித்து பேச்சு வார்த்தை நடத்தினர். கொரிய தீபகற்பத்தில் போர் மேகங்கள் சூழத் தொடங்கியது.

அமெரிக்காவை எச்சரித்த வடகொரியா, அனாவசியமாகப் போரில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும், ஐ.நா.வின் பொருளாதாரத் தடை பற்றிய நிர்பந்தம் காரணமாகவும் தனது நாட்டு அணு உலைகளை சர்வதேசப் பரிசோதனைக்கு அண்மையில் அனுமதித்துள்ளது. தென்கொரியாவும் அமெரிக்காவும் கூட்டாக போர் ஒத்திகை நடத்துவதை நிறுத்த வேண்டும்; கொரிய தீபகற்பத்தில் வட்டமிடும் அமெரிக்கக் கடற்படை உடனடியாக வெளியேற வேண்டும் முதலான கோரிக்கைகளை அமெரிக்கா ஏற்ற பின்னரே, வட

# சாவு வியாபாரிகளின் சமாதான நாடகம்

அணு ஆயுதப் பரவலைக் கட்டுப்படுத்துவது, அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்தி வைப்பது, தொழில் நுட்பப் பரிமாற்றத்துக்குத் தடை விதிப்பது முதலான அம்சங்களை உள்ளடக்கிய அணு ஆயுதப் பரவல் தடுப்பு (NPT) ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு ஒடுக்கப்பட்ட நாடுகளை அமெரிக்கா மிரட்டி வருகிறது. இதுதவிர பன்முகப்பட்ட பெருந் தொகுதி அணு ஆயுதச் சோதனைத் தடுப்பு (EIBT) ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு ஏவுகணை ஆற்றல் பெற்றுள்ள நாடுகளை நிர்பந்தித்து வருகிறது. இந்த ஒப்பந்தங்களுக்கு தானும் கட்டுப்படுவதாக அமெரிக்கா கூறினாலும், இதனை நடைமுறைப்படுத்தினால் கூட அடுத்த பத்தாண்டுகளுக்குப் பின்னரும் அணு ஆயுத பலத்தில் அமெரிக்கா முதலிடம் வகிக்கும். ஏனெனில் இந்த ஒப்பந்தம் அணு ஆயுதப் பரவலைக் கட்டுப்படுத்துமே தவிர அவற்றை முற்றாக ஒழித்து விடாது. அணுவாற்றலைப் பெற்றுள்ள பின்தங்கிய நாடுகள் ஆயுதத் தயாரிப்பில் இறங்குவதைத் தடுத்து நிறுத்துவது, அதேசமயம் தாங்கள் மட்டும் அணு ஆயுதங்களைக் குவித்துக் கொண்டு உலகை அச்சுறுத்துவது என்பதே ஏகாதிபத்தியங்களின் நோக்கமாக உள்ளது.

இதன்படியே, உலகின் அணு ஆயுத பலத்தில் 3-வது இடத்தை வகிக்கும் முன்னாள் சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த உக்ரைன் நாட்டுடன், அமெரிக்காவும் ரஷியாவும் கடந்த ஜனவரியில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. இவ்வொப்பந்தப்படி இம்மூன்று நாடுகளும் ஒருவருக்கெதிராக மற்றொருவர் அணு ஆயுதத்தை ஏவக்கூடாது. அதேசமயம்; உக்ரைனின் அணு ஆயுதங்கள் படிப்படியாக அழிக்கப்படும்; இதற்காக உக்ரைனுக்கு அமெரிக்கா தாராளமாகப் பொருளாதார உதவிகளைச் செய்யும், உக்ரைனின் அணு ஆயுதங்களை அழிக்கத் துடிக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகள் தங்களிடமுள்ள அணு ஆயுதங்களை அழிக்க முன்வர மாட்டார்களாம்! "மாஸ்கோ பிரகடனம்" என்றழைக்கப்படும் இந்த ஒப்பந்தத்தை வரலாற்றுச் சிறப்புமிக்க சமாதான ஒப்பந்தம் என்று ஏகாதிபத்தியவாதிகள் பெருமையுடன் குறிப்பிடுகிறார்கள்.

போர் ஆயுதப் பெருக்கத்தைத் தடுப்பது, அணு ஆயுதங்களைக் குறைப்பது என்ற பெயரில் ஏகாதிபத்தியவாதிகள் நடத்தும் சமாதான நாடகங்கள் இப்போது முதன்முறையாக நடப்பது அல்ல. உலகின் இருபெரும் மேலாதிக்க வல்லரசுகளாகத் திகழ்ந்த அமெரிக்காவும் ரஷியாவும் ஏற்கனவே "சால்ட்" (SALT) எனப்படும் ஆயுதக் கட்டுப்பாடு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. அதை நடைமுறைப்படுத்தாமல் கிடப்பில் போட்டுவிட்டு அதிநவீன அழிவுப் போர் ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் (START I) ஒப்பந்தம் போட்டனர். பின்னர் அதையும் செயல்படுத்தாமலேயே இரண்டாவது (START II) ஒப்பந்தம் போட்டுள்ளனர்.

21-ம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டில் நிறைவடையும் இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தினாலும் கூட, அமெரிக்காவிடம் உலகை அழிக்கக் கூடிய அளவுக்கு அணு ஆயுதம் குவிந்திருக்கும். ஒருமுறை இருமுறை அல்ல; உலகை 17 முறை அழிக்கக் கூடிய அளவுக்கு அதனிடம் அணு ஆயுதம் குவிந்திருக்கும். இதேபோல 2093-ம் ஆண்டில் முடிவடையும், பன்முகப்பட்ட அணு ஆயுத சோதனைத் தடுப்பு (CTBT) ஒப்பந்தத்தை நிறைவேற்றினால்கூட அதன்பிறகும் அமெரிக்காதான் அணு ஆயுத பலத்தில் முதலிடம் வகிப்பதாக இருக்கும்!



படிப்பகம்

www.padippakam.com

கொரியா இம்முடிவுக்கு உடன்பட்டது. இதன் விளைவாக, வடகொரியா மீதான அமெரிக்காவின் தாக்குதல் போர் தவிர்க்கப்பட்டுள்ள போதிலும், பதற்ற நிலைமை இன்னமும் நீறுபூத்த நெருப்பாக நீடிக்கவே செய்கிறது.

### இந்தியா, சீனாவுக்கும் அமெரிக்கா மிரட்டல்

நிர்பந்த நடவடிக்கையின் அளவு சற்றுகுறைவாக உள்ளதே தவிர இந்தியா மீதும் இதே பாணியிலான மிரட்டலை அண்மைக் காலமாக அமெரிக்கா தொடுத்து வருகிறது. ''இந்தியா ரகசியமாக அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது; உலகின் மிகவும் பாதுகாப்பற்ற அணு உலைகள் இந்தியாவில்தான் உள்ளன; இதுவரை 147 விபத்துகள் நடந்துள்ளன'' என்று அமெரிக்க தொலைக்காட்சி மூலம் பீதியூட்டும் பிரச்சாரத்தைச் செய்து வருகிறது. இதோடு, ஏவுகணைத் தொழில் நுட்பத்தைப் பெற்ற நாடாக இந்தியா திகழ்வதால், தெற்காசியாவில் அணு ஆயுதப் போருக்கான அபாயம் ஏற்பட்டுள்ளதாக பயபீதியூட்டி



வருகிறது. ஏற்கனவே, ரஷியாவிடமிருந்து ஏவுகணை தொழில்நுட்பம் மற்றும் கிரியோஜெனிக் என்ஜின்களை வாங்கக் கூடாது என்று இந்திய வானியல் ஆராய்ச்சித் துறை (ISRO) மீது அமெரிக்கா தடை விதித்துள்ளது.

இதேபோல பாகிஸ்தான், சீனாவிடமிருந்து M 11 ரக போர் விமானங்கள், ஏவுகணைகளை வாங்கியதற்காக இரு நாடுகள் மீதும் அமெரிக்கா சில தடைகளை விதித்துள்ளது. ''தெற்காசியாதான் உலகின் அணு ஆயுதப் போருக்கான ஊற்றுக்கண்ணாக உள்ளது. சீனா, இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா ஆகிய நாடுகள் அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளன. இதனைத் தடுக்க அமெரிக்கா உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்'' என்று அமெரிக்க ஆயுதக் கட்டுப்பாடு நிறுவனம் எச்சரித்து வருகிறது.

அமெரிக்காவின் அடவாடித்தனமாக மிரட்டலையும் நிர்ப்பந்தங்களையும் எதிர்கொண்டு முறியடிக்கத் திராணியற்றவர்களாகவே இந்நாடுகளின் பிற்போக்கு ஆட்சியாளர்கள் உள்ளனர். அணு சக்தியைப் பயன்படுத்துவதா, கூடாதா என்பதைக் கூட அமெரிக்கா தீர்மானிக்கும் அளவுக்கு தமது சுயாதிபத்திய உரிமையை இழந்து நிற்கின்றனர். கதிரியக்க அபாயம் கொண்ட பாதுகாப்பற்ற அணு உலைகளை இந்நாடுகள் கொண்டிருப்பதால் அமெரிக்காவின் மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுதளிக்க முடியாமல் திணறுகின்றனர்.

அணுவாற்றலைப் பெற்றுள்ள நாடுகள் - குறிப்பாக, இந்தியாவும் பாகிஸ்தானும் ஒருவர் மீது மற்றொருவர் அணு ஆயுதத்தை ஏவமாட்டோம்; அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடமாட்டோம் என்று ஓர் உடன்பாட்டுக்கு வந்தாலே, அமெரிக்காவின் தலையீட்டையும், மிரட்டலையும் முறியடிக்க முடியும். இருநாடுகளும் நட்புறவை வளர்த்து தமது பாதுகாப்பையும் பலப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் இந்தியாவும் பாகிஸ்தானும் அரசியல் ஆதாயம் கருதி நீண்டகாலமாக பகைமை பாராட்டிக் கொண்டு ஆயுதக் குவிப்பிலும் ரகசிய அணுஆயுதத் தயாரிப்பிலும் முனைப்பாக உள்ளன. இதனைச் சாதகமாக்கிக் கொண்டு, இந்தியா ஒரு பிராந்திய வல்லரசாக வளருவதைத் தடுக்கும் நோக்கத்தோடு, அடுத்தடுத்து நிர்பந்தங்களையும் மிரட்டல்களையும் அமெரிக்கா தொடுத்து வருகிறது. அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுவதாக இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகள் மீது குற்றம் சாட்டினாலும், தனது நம்பகமான எடுபிடியாகக் கருதும் பாக். மீது அமெரிக்கா நடவடிக்கைகள் எதுவும் எடுப்பதில்லை. அதேசமயம் பாகிஸ்தானுக்கு மறைமுகமாக ஆயுத உதவிகள் செய்து ஊக்குவிக்கிறது. இதேபோல, இனவெறி பிடித்த இஸ்ரேல் அணு ஆயுதக் குவிப்பு, பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ள போதிலும், தனது விசுவாசி என்பதால் அதன்மீது அமெரிக்கா எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. ஐ.நா. மன்றமும் வாய் திறப்பதில்லை.

### உலகின் முதல் கிரிமினல் குற்றவாளி

உலக அமைதி குறித்தும், அணு ஆயுதத் தடுப்பு பற்றியும் பெருங்கூச்சல் போடும் அமெரிக்காவுக்கு அதில் மயிரளவும் அக்கறை கிடையாது. உலகிலேயே அமெரிக்காதான் பெருமளவு அணு ஆயுதங்களையும் இரசாயன ஆயுதங்களையும் குவித்து வைத்துள்ளது. அதுதான் உலகெங்கும் ஆக்கிரமிப்புப் போர்களை நடத்துகிறது. உலகெங்கும் தனது எடுபிடி நாடுகளில் ராணுவத் தளங்களை அமைத்து அணு ஆயுதங்களைக் குவித்து வைத்துக் கொண்டும், ஆழ்கடலிலும் அணு ஆயுதக் கப்பல்களில் வலம் வந்தும் உலகை அச்சுறுத்திக் கொண்டிருப்பது அமெரிக்காதான். கடந்த ஆண்டில் பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலநடுக்கம் ஏற்பட்ட போது அப்பகுதியிலிருந்த அமெரிக்காவின் ''கிளார்க்'' அணு ஆயுத ராணுவத் தளத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், கதிரியக்கம் பரவி பிலிப்பைன்ஸ் நாட்டுக்கும் தெற்காசியாவுக்கும் பேரழிவு நேர்ந்திருக்கும்!


இப்படி அடுத்தடுத்து ஆயுதக் குவிப்பிலும், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு பேரழிவை விளைவிக்கும் அமெரிக்காதான் உலகின் முதல் கிரிமினல் குற்றவாளி. அணு ஆயுதப் போர்களற்ற உலக அமைதி குறித்து உண்மையில் அமெரிக்காவுக்கு அக்கறை இருக்குமானால், தானே முன்னோடியாக இருந்து அணு ஆயுதங்களையும், இரசாயன ஆயுதங்களையும் அழித்திட வேண்டும். ஆனால் அமெரிக்கா உள்ளிட்டு எந்த ஏகாதிபத்திய வல்லரசும் அதற்கு உடன்படாது. தமது அணு ஆயுதங்களை அழிக்க முன்வராத அதேசமயம், அணு ஆயுத ஆற்றல் பெற்றுள்ள நாடுகளை, குறிப்பாக தெற்காசியாவின் பிராந்திய வல்லரசுகளை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதே அமெரிக்காவின் நோக்கமாக உள்ளது. இதற்காகவே அணு ஆயுத பீதியூட்டி, இந்நாடுகளை மிரட்டிப் பணிய வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

இம்மோசடிகளையும், அணு ஆயுதப் பரவல் தடுப்பு என்ற பெயரில் மறுகாலனியாதிக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்கள் விழிப்புடனிருந்து அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். ஒடுக்கப்பட்ட நாடுகள் தமக்குள் ஐக்கியப்பட்டு, ஆயுதக் குவிப்பிலும், அணு ஆயுதத் தயாரிப்பிலும், ஆக்கிரமிப்பிலும், ஒருபோதும் ஈடுபட மாட்டோம் என்று ஓர் உடன்பாட்டுக்கு வர வேண்டும். இன்றைய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல்களை முறியடிக்கவும், நாளைய வெற்றியை உறுதிப்படுத்தவும் அவசியமாகும்.



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

★ நெய்வேலியில் அனல் மின் நிலையம் தொடங்கிக் கொள்ள பன்னாட்டு தனியார் நிறுவனத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதுடன், தொழிற்சாலை தொடங்குவதற்காக 200 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம், ஏக்கர் ஒன்றுக்கு ஆறாயிரம் ரூபாய் என்று அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டுள்ளது. அந்த நிலத்தின் இன்றைய சந்தை மதிப்போ கிட்டத்தட்ட ஏக்கர் ஒன்றுக்கு 1,32,000/- ரூபாய், இதனால் ஏற்பட்டுள்ள இழப்பு மட்டும் இரண்டரை கோடிக்கும் அதிகம். இதோடு 850 கோடி ரூபாய் மதிப்புள்ள அத்தொழிற்சாலையை நிர்வகிக்கப் போகும் அத்தனியார் போடும் மூலதனம் வெறும் 200 கோடி மட்டும் தான்!

★ குவைத் அரசாங்கம், வளைகுடாப் போரின் போது ''ஈராக்குடன் ஒத்துழைத்தவர்கள்'' என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 1000-க்கும் அதிகமானோரை கடந்த இரண்டு ஆண்டுகளாக முறையான விசாரணையின்றி சிறையில் அடைத்து வைத்துள்ளது. இவர்கள் மிகப் பெரும்பாலோர் ''குவைத்தியர்கள் அல்லாத வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள்'' என்ற ஒரே காரணத்தினாலேயே சிறை வைக்கப்பட்டுள்ளனர்; மேலும் தற்பொழுது 62 பேர் ''காணாமல் போய் விட்டதாக'' அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மாறுபட்ட அரசியல் கருத்துடையவர்கள் என்ற தீர்ப்பின்படி ஒரு ஈராக்கியர் உட்பட 19 பேருக்கு தூக்கு தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

★ சமீபத்தில் கல்கத்தாவில் இருந்து வெளிவரும் ஆங்கில தினசரியொன்றில், ''அமெரிக்காவுக்கு எதிராக சதி செய்வதாக சந்தேகப்படும் நபர்கள் பற்றியும், அப்படி சதி ஆலோசனை செய்யும் எந்தவொரு இந்தியனையும் இந்திய மண்ணிலேயே கைது செய்ய முடியும் என்றும் விசாரணைக்கு அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்ல முடியும் என்றும்'' அமெரிக்க நீதிமன்றம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. குற்றவாளிகளை பரிமாறிக் கொள்ள தனியாக ஒப்பந்தம் போட்டுக் கொள்ள வேண்டும் என்பது சர்வதேச நியதி. ஆனால் தனக்கென்று வரும்பொழுது எந்த நியதியையும் காலில் போட்டு மிதிக்கிறது, அமெரிக்கா.


★ போபால் விசவாயு விபத்துக்குக் காரணமான ''யூனியன் கார்பைடு'' நிறுவனம் இந்தியாவிலுள்ள தனது 65 கோடி பெறுமான சொத்துக்களைக் கொண்டு அவ்விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவமனை ஒன்றை அமைக்கப் போவதாக அறிவித்திருந்தது. இரு ஆண்டுகளுக்கு முன்பு இதனை எதிர்த்துத் தொடர்ந்த வழக்கில் இச் சொத்துக்களை முடக்கி அந் நிறுவனத்துக்கு எதிராக தீர்ப்புக் கூறியது போபால் முதல்தர குற்றவியல் நீதிமன்றம். தற்பொழுது உச்சநீதி மன்றம், நிறுவனத்தை எதிர்த்து வழக்குத் தொடர்ந்த இரு அமைப்புகளுக்கும் எந்தவிதமான நோட்டீசும் அனுப்பாமல், யூனியன் கார்பைடு நிறுவனம் 'தான் விரும்பியபடி' இச் சொத்துக்களைப் பயன்படுத்தலாம் எனத் தீர்ப்புக் கூறியுள்ளது.

★ சர்வதேச ஆயுதத் தரகர்களும் மற்றும் பிரதமர் ராவின் கூட்டாளிகளுமான இந்துஜா குடும்பத்தினர் போதைப் பொருட்கள் கடத்தலில் ஈடுபட்டிருப்பதும் தற்பொழுது அம்பலமாகியுள்ளது. மேலும் இச்சமூக விரோதச்செயலில் கிடைத்த கள்ளப் பணத்தை சட்டபூர்வமாக மாற்ற சுவிஸ் நாட்டில் ஒரு முதலீட்டு நிறுவனம் நடத்தி வருவதையும் தற்பொழுது அந்நாட்டு அதிகாரிகள் விசாரிக்க ஆரம்பித்துள்ளனர்.

★ பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற கிழக்காசிய நாடுகளில் மட்டுமே காணப்படுவதாகக் கருதப்பட்ட இளம் பெண் குழந்தைகளை பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்துவதும், அதைப் புகைப்படமாக எடுத்து விற்பதும் தற்பொழுது இந்தியாவிலும் நடைபெறுவது அம்பலமாகியுள்ளது. சிறு பெண் குழந்தைகளை புணரும் வண்ணம் எடுக்கப்பட்டிருக்கும் இந்த வக்கிரமான புகைப்படங்கள், டென்மார்க் நாட்டில் இருந்து உலகம் முழுவதும் ஒளிபரப்பவும் படுகிறது. இதோடு குறிப்பிட்ட சங்கேத வார்த்தைகளைக் கூறினால் இப்புகைப்படங்களின் பிரதியையும் பெறமுடியும். மேலும், இலங்கையைப் போன்று இந்தியாவிலும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளைக் கவருவதற்காகப் பெண் குழந்தைகளை இது போன்ற பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்துவது அதிகரித்த வண்ணம் நடைபெறுவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

★ ''பாண்டிச்சேரியில் 'சம்பா கோவில்' எனப் பொது மக்களால் அழைக்கப்படும் கிறிஸ்தவர்களின் தேவாலயம், சிவன் கோவிலை இடித்து பின் கட்டப்பட்டது; எனவே அந்த தேவாலயத்தை ஆக்கிரமிக்க வேண்டும்'' என வரலாற்றைப் புரட்டி மற்றுமொரு அயோத்தியைத் தென்னகத்தில் உருவாக்கும் சதி வேலையில் இறங்கியிருக்கிறது இந்து முன்னணி கும்பல். சென்ற பிப்ரவரியில் அத் தேவாலயத்தின் சுவர்களில் 'ஓம்' என எழுதியது; பின் மார்ச் மாதம் கோவிலினுள் நுழைந்து பூஜை செய்யப் போவதாக பிரச்சாரம் செய்தது. இது நாலாபுறத்திலும் கண்டனத்தை எழுப்பவே, பின் தனது வாலை சுருட்டிக் கொண்டுள்ளது. இந்து முன்னணியின் இந்த அயோக்கியத்தனம் ஒரு புரட்டு என்பதற்கான ஆதாரங்கள் வரலாற்று ஆவணமான அனந்தரங்கப் பிள்ளையின் நாட் குறிப்பில் காணப்படுகின்றன.

நெய்வேலி அனல்மின் நிலையத்தை தனியாருக்கு தாரை வார்க்கும் அமைச்சர்கள் பாஞ்சா, தங்கபாலு.



★ தங்களது தலைவர் கன்சிராமின் 60-வது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக பம்பாய் நோக்கி இரயிலில் பயணம் செய்த பகுஜன் சமாஜ் கட்சியின் இளைஞர் அமைப்பினர், பெண்கள் என்றும் பாராது சக பயணிகளிடம் அத்துமீறி முறைகேடாக நடந்துள்ளனர்; இரயிலில் அன்றாடம் வேலைக்குச் சென்று வரும் தொழிலாளர்கள் ஏறவிடாது தடுக்கப்பட்டிருக்கின்றனர். இதனால் ஆத்திரமாகிப் போன பொது மக்கள் நேரடியாகவே மோதத் தொடங்க, இரயில் பெட்டிகளைக் கொளுத்துமளவு ஆட்டம் போட்டுள்ளனர் அவ்வமைப்பினர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பம்பாயிலும், குஜராத்திலும் இப்படித்தான் ஆட்டம் போட்டனர் இளைஞர் காங்கிரசு காலிகள். அதன் வழியொற்றியே தனது கட்சி இளைஞர்களையும் வளர்த்திருக்கிறார் 'சமூக' நீதிக்காகப் போராடும் கன்சிராம்!!

முன் அட்டையில் ஓவியம் ''கரோ''

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAJ

படிப்பகம்

www.padippakam.com

காட் அடிமைச் சாசனத்தில்
நரசிம்மராவ் அரசு
கையெழுத்திடுவதை எதிர்த்து....

## 94 , ஏப்ரல் - 14 ம் தேதி
## தமிழகமெங்கும்
## ரயில் மறியல்

ஆயிரமாயிரமாய் அணிதிரண்டு வாருங்கள்!
அடிமை விலங்கொடிக்க
ஆர்த்தெழுந்து வாருங்கள்!

**ம.க.இ.க. - வி.வி.மு. - பு.மா.இ.மு.**




# ஏப்ரல் - 15 கறுப்புநாள்

## இந்தியாவை மீண்டும் காலனி (அடிமை) யாக்கும் காட் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவோம்!

இந்திய நாட்டின் எதிர்காலத்தையும், உழைக்கும் மக்களின் வாழ்க்கையையும் அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கு ஒருசேர அடகு வைக்கும் டங்கல் திட்டம் அதிகார பூர்வமாகக் கையெழுத்தாகவிருக்கிறது. ஏப்ரல் 12 முதல் 15-ம் தேதி வரை மொராக்கோ நாட்டிலுள்ள மார்ரகேஷ் என்னும் இடத்தில் காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள இந்தியா உள்ளிட்ட 117 நாடுகளின் அமைச்சர்கள் மட்ட அளவிலான கூட்டம் நடைபெறவுள்ளது. அக்கூட்டத்தில், டங்கல் திட்டத்தை உள்ளடக்கிய காட் ஒப்பந்தம் எனும் அடிமைச் சாசனத்தில் கையெழுத்திடவிருக்கிறது நரசிம்மராவ் அரசு.

சுதந்திர் வர்த்தகத்தை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டை முன்னேற்றப் போவதாகக் கூறிக் கொண்டு பெயரளவிலான சுதந்திரத்தையும், ஒட்டளவில் உள்ள இறையாண்மையையும் கூட அமெரிக்காவுக்கும் ஜப்பான் ஜெர்மனி ஆகிய மேலாதிக்க அந்நிய வல்லரசுகளுக்கும் அடகு வைப்பதுதான் இந்த ஒப்பந்தம்.

தற்போது கையெழுத்தாக இருக்கும் காட் ஒப்பந்தத்தின் ஷரத்துகளுடன் 1947- காட் ஒப்பந்த ஷரத்துகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக அதன் நகலொன்றை பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டபோது நம்மிடம் இல்லையென்று கைவிரித்திருக்கிறது நரசிம்மராவ் அரசு. தற்போது கையெழுத்தாக இருக்கும் ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் என்னென்ன, இந்தியாவின் மீது வல்லரசுகள் விதிக்கும் நிபந்தனைகள் யாவை, பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரைவார்க்க இருக்கும் துறைகள் எவையெவை - போன்ற மிகவும் அடிப்படையான விவரங்கள் கூட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், பெரும்பான்மை மத்திய அமைச்சர்களுக்கும் தெரியாது. ''பாராளுமன்றம், சட்டமன்றம், தேர்தல் ஜனநாயகம்'' ஆகிய அனைத்தும் கலப்படமற்ற மோசடிகள் என்ற உண்மை முன்னெப்போதையும் விட இப்போது மிகத் தெளிவாகத் தெரிந்துவிட்டது.

பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் வல்லரசு நாடுகளின் கைக்கூலிகளாகச் செயல்படும் அதிகார வர்க்கத்தினரும், அமைச்சர்களும் தரகு முதலாளிகளும் அடங்கிய ஒரு கும்பல் தன் விருப்பம் போல நாட்டை அடிமையாக்குகிறது.

எனவே 1994, ஏப்ரல்-15 - இந்தியா மீண்டும் காலனியாவதற்குக் கையொப்பமிடும் நாள். இந்தியாவின் விடுதலைக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் போராடி உயிர்நீத்த எண்ணற்ற தியாகிகளின் கனவுகளைச் சிதைத்து நாட்டை மீண்டும் அடிமையாக்கக் கையொப்பமிடும் நாள். அடிமைத்தனத்தை வெறுக்கும் இந்திய மக்கள் அனைவருக்கும் இது கறுப்பு நாள்.

நரசிம்மராவ் அரசின் இந்தத் துரோக ஒப்பந்தத்தை எதிர்த்துப் போராட உழைக்கும் மக்களை அறைகூவி அழைக்கிறோம்.

அமெரிக்கா மற்றும் ஜப்பான், ஜெர்மனி மேலாதிக்க வல்லரசுகளால் திணிக்கப்படும் காட் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவோம்!

இந்தியாவின் இறையாண்மையை நிலைநாட்டுவோம்! புதிய ஜனநாயகம் படைப்போம்!

மக்கள் கலை இலக்கியக் கழகம்
விவசாயிகள் விடுதலை முன்னணி
புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி

படிப்பகம்